# ‘கைவிடப்பட்ட மறக்கப்பட்ட’: இலங்கை பெண் தொழிலாளர்கள்

பா. ஸ்கந்தகுமார் (தொகுப்பாளர்)

# புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்கள்

## புலம்பெயர் தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்பு

பீ. ஸ்கந்தகுமார்

Law & Society Trust,
இலங்கை 2010.

இது அனைத்து இடம் பெயர் தொழிலாளர்கள் மற்றம் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சர்வதேச இணக்கப்பாட்டின் தமிழ் சிங்கள மொழிபெயர்ப்பாவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் பெறாத உத்தியோகபூர்வமற்ற கருத்து கண்காணிப்பை முடிவு செய்த ஓர் ஆவணமாகும். இலங்கை வாழ் இடம் பெயர் தொழிலாளர்களின் நலன்புரியை மையமாக கொன்டே இந்த மொழி பெயர்ப்புகளை வெளியிட்டுள்ளோம்.

## புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்கள்

முதல் தமிழ் வெளியீடு – 2010 டிசெம்பர், கொழும்பு

ISBN இலக்கம் : 978-955-1302-35-1

வெளியீட்டாளர்
சட்டத்திற்கும் சமுகத்திற்குமான அற நிலையம்
இல. 3,கிங்ஸி டெரண்ஸ், கொழும்பு 08
தொலைபேசி இல (94 11) 2684845, 2691228
தொலை நகல் இல: 2686834.
மின்னஞ்சல் lst@eureka.lk
இணையத்தளம் www.lawandsocietytrust.org

அச்சிடுபவர்
மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு
இல.86, றொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07 இலங்கை
தொலைபேசி இல(94-11) 4616200
தொலை நகல் இல (94-11)4616200 ext.(113)
மின்னஞ்சல் info@cha.lk
இணையத்தளம்: www.humanitarian-srilanka.org

CLASS NO : 331.796
ACC. NO : V18289

# பொருளடக்கம்


1. இலங்கையில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் 1 - 60

2. புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்கள்: இலங்கையில் மீள்திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் 61- 118

3. எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான சர்வதேச சமவாயம் 121- 138

# நன்றிகள்

குடிபெயர் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் உள்ளூர் பங்குதாரர்களுடனான இரண்டு தனிப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பல தனிப்பட்ட நேர்காணல்களின் விளைவாக இந்த பிரசுரம் வெளிவந்துள்ளது. அத்துடன், பல தனிநபர்களின் ஆதரவும், உதவியும் இல்லையெனின், இந்த செயற்பாட்டை நிறைவு செய்வது அசாத்தியமாக இருந்திருக்கும்.

இந்த செயற்றிட்டத்திற்கு நிதியுதவி வழங்கி தேவையான ஆய்வு மற்றும் பிரசுரங்களை முன்னெடுக்கும் பணியில் உதவி புரிந்த டயகோணியா (இலங்கை) தமது பாராட்டுக்களை வெளிப்படுத்த விரும்புகின்றது.

குடிபெயர் தொழிலாளர்களின் சட்ட உரிமைகள் தொடர்பில் பத்திரிகைகளில் வழிகாட்டல்களை வழங்கிய வெளியக மீளாய்வாளர் ஆள. மோனிக்கா ஸ்மித் மற்றும் இரண்டு பத்திரிகைகளிலும் அதனை தொகுத்த பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளின் தலைவருமான பீ. ஸ்கந்தகுமார் ஆகியோருக்கு நாம் கடமை உடையவர்களாவோம்.

அனுஷயா கொல்லுரே, கனிஸா பாரிஸ், சுகந்தி வடிவேல், நாபியா காலிக், எம்.எம். சமந்தி, புத்தி ரணசிங்க, ஏ.ஆர்.எம். நியாஸ், அஸ்கர் கான், பர்சினா மஹ்ரூப், தீபால் டீ சில்வா, ஜினந்தினி பரமேஸ்வரம் மற்றும் கள ஆய்வுக்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்

பீ. ஸ்கந்தகுமார்.

## முக்கிய சாரம்சம்

இலங்கையின் பொருளாதாரமான பெருமளவில் தொழிலாளர் குடிபெயரலின் அந்நியச் செலாவணியிலேயே தங்கியுள்ளது. அவற்றில் பெரும்பாலானவை மத்திய கிழக்கை இலக்கு வைத்ததாகும். 2010ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் அதிகளவான வெளிநாட்டு வருமானமாக குடிபெயர் தொழிலாளர் மூலம் பெறப்பட்ட வருமானம் காணப்படுகின்றது. வருடாந்தம் 200,000க்கும் அதிகமான ஆண்களும், பெண்களும் தற்காலிய குடிபெயர் தொழிலாளர்களாக தமதும், தமது குடும்பத்தினதும் வாழ்க்கை நிலையை மாற்றியமைப்பதற்காக வெளிநாடுகளுக்கு பயணிக்கின்றனர். தமது சொந்த நாட்டிற்கும் இந்த குடிபெயர்பவர்கள் தேவையான பங்களிப்பை வழங்குகின்றனர். எவ்வாறாயினும், இதற்கு பிரதியுபகாரமாக அரசாங்கம் மற்றும் சமூகத்தினால் அவர்கள் பெறுவது திருப்திகரமானதாக இல்லை. இந்த குறைபாடுகளை மீள் திரும்பும் மற்றும் மீள் ஒருங்கிணைக்கப்படும் குடிபெயர் தொழிலாளர்கள் தொடர்பில் விசேடமாக காணக் கூடியதாக உள்ளது. பெரும் எண்ணிக்கையில் மீள திரும்பி வருபவர்களை அங்கீகரிக்கவும், வரவேற்கவும் மற்றும் அவர்கள் மீள திரும்புவது தொடர்பில் அதிகாரிகள் வெளிப்படுத்தும் புறக்கணிப்பினாலும் அரசாங்கத்தினால் மிக குறைந்தளவு முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த அறிக்கையானது பெண் குடிபெயர் தொழிலாளர்களின் மீள் திரும்பல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது. அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் மீள் ஒருங்கிணைப்பு உதவி, மற்றும் மீள் திரும்பியவர்களை பாதுகாப்பது தொடர்பிலான தடைகள் மற்றும் விடயங்களில் எதிர்நோக்கும் பயனுறுதித் தன்மை அல்லது இந்த திட்டங்களின் குறைபாடு போன்றன தொடர்பில் இந்த அறிக்கை கவனஞ் செலுத்தியுள்ளது.

போதிய சேமிப்பு இன்றி, போதிய தொழில் தகைமை இன்றி அல்லது தெளிவான வாழ்வாதார தெரிவுகள் இன்றி பெரும் எண்ணிக்கையிலான குடிபெயர் பெண் தொழிலாளர்கள் இலங்கை திரும்புகின்றனர். அவ்வாறு திரும்பி வரும் போது தமது குடும்பங்கள் மற்றும் திருமண வாழ்க்கை என்பன நொறுங்கடிக்கப்பட்டிருப்பதனை காண்கின்றனர். தம்மால் அல்லது தமது குடும்பத்தினரால் ஏற்படுத்தப்பட்ட கடனை அடைக்க வேண்டிய நிலைக்கு மீளத் திரும்பிய குடிபெயர் தொழிலாளர்கள் தள்ளப்படுகின்றனர். எதிரிடையாக, நாட்டில் பொருத்தமான வாழ்வாதார தெரிவு இன்மையின் காரணமாக தமது கடன்களை அடைப்பதற்கு, தமக்கு சொந்தமான வீட்டை நிர்மாணிப்பதற்கு, தமது பிள்ளைகளுக்கு கல்வி வசதியை வழங்குவதற்கு, தமது எதிர்காலத்திற்காக சேமிப்பதற்கு போன்ற காரணங்களுக்காகவே இந்தப்

பெண்கள் குடிபெயர் தொழிலை தெரிவு செய்கின்றனர். மீளத் திரும்பியது, அவர்கள் தொடர்ந்தும் மாற்றமடையாத வாழ்க்கை சூழ்நிலையில் வறுமையின் எனும் பிடியில் சிக்கியுள்ளதனை உணர்கின்றனர். அவர்களுடைய போதியதாக இல்லாது அல்லது இல்லாமல் போகின்றது. அவர்களுடைய வருமானம் குடும்ப உறுப்பினர்களால் நாளாந்த நுகர்வுகக்கு பயன்படுத்தப்பட்டு, கடன்கள் எஞ்சியிருக்கின்றன. அது மாத்திரமின்றி, குடிபெயர் பெண் தொழிலாளர்கள், குடிபெயரும் நாட்டில் உடலியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகுவது தொடர்பில் அறிக்கையான மற்றும் அறிக்கையாகாத பல சம்பவங்கள் உள்ளன. இவ்வாறான நிலையில் பெரும்பாலான மீள் திரும்பும் குடிபெயர் தொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவி அவசியமாக இருக்கின்றது. அத்துடன், சில சந்தர்ப்பங்களில் மீண்டும் குடிபெயராது மாற்று வழியை கண்டறிவதற்கும், பிரிவதனால் ஏற்படும் மன வேதனை மற்றும் துஷ்பிரயோகத்தில் இருந்து வெளிவருவதற்கும், குடும்பத்திற்குள்ளும், சமூகத்திற்குள்ளும் தமது பாத்திரத்தை மீள் கண்டறிந்து கொள்வதற்கும், நிலை நிறுத்திக் கொள்வதற்கும் சமூக மற்றும் உளவியல் உளவளத்துணையும் அவசியமாக இருக்கின்றது. துரதிருஷ்டவசமாக, வருடாந்தம் மீள் திரும்புபவர்களை கணக்கெடுப்பதற்கான பொறியமைப்பு ஒன்று இங்கே இல்லை. இதன் காரணமாக அவர்களுடைய மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் கவனஞ் செலுத்துவதற்கான பொறியமைப்பும் விலகிச் செல்கின்றது.

தற்காலிக ஊழியர் குடிபெயரலுக்கான உத்தியோகப்பூர்வமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை புரியும் அங்கமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (SLBFE) ஊடாக, இலங்கை அரசாங்கம் புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி ஒன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது புதிய முயற்சியாக இருக்கின்றமையால், அறிக்கையில் அந்த விடயம் விசேடமாக கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் வேறு பங்குதாரர்களுடன் பல நேர்காணல்கள் உள்ளடங்கிய கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு புதிய நிகழ்ச்சி தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன், மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் தற்போதுள்ள திட்டங்களை அறிந்து கொள்வதற்கும் இந்த கள விஜயம் உதவி புரிந்தது. கொழும்பைத் தவிர, கண்டி, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய வேறு மூன்று பகுதிகள் குடிபெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை, புவியியல் அமைவு, பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகள் என்பவற்றை கருத்திற் கொண்டதாக தெரிவு செய்யப்பட்டன. ஆரம்ப ஆலோசனையில் கலந்து கொண்ட பங்குதாரர்களின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்ட பகுதிகளை கவனத்திற் கொண்டதாக ஆய்வுக்கான கேள்விகள்

தயாரிக்கப்பட்டதுடன், ஆய்வு கற்கையும் வடிவமைக்கப்பட்டது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையில், மூல கருத்து உருவாக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடக்கின்ற நிலையில், திட்டம் செயற்பாட்டுக்கு வந்துள்ளது. எனினும், உள்ளக, அரசியல் மற்றும் செயற்பாட்டு காரணங்கள் போன்றவற்றினால் குறிப்பிடத்தக்க தாமதம் மற்றும் பின்னடைவு ஏற்பட்டு அது இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. 'மீள் ஒருங்கிணைப்பு' என்ற கருத்தின் உள்ளடக்கமும், எண்ணக்கருவும் தொகுதியின் உரிமைத்துவத்துவமும், அதன் நடைமுறைப்படுத்தலும் தற்போது பல்வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்வாங்கியுள்ளது. அண்மைக் காலத்தில் ஆண் குடிபெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட பல மடங்கில் பெண் குடிபெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இந்த நிகழ்ச்சி பிரயோகத்தில் பெரும் எண்ணிக்கையிலான வீட்டுப் பணிப்பெண்களை உள்வாங்கவில்லை. அதேவேளை, குடிபெயர்ந்தவர்கள் வேறு நலன்புரி பயன்களும், நிகழ்ச்சிகளும் உள்ளன. வறுமை மற்றும் குறைந்த அளவிலான அறிவும், விழிப்புணர்வும் குறித்த சேவைகளை இவர்கள் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. குடிபெயரலுக்கான பின்புலமாக சமூக காரணிகள் இருக்கின்ற நிலையில் புதிய நிகழ்ச்சி பெருமளவில் பொருளாதாரஞ் சார்ந்தாகவே இருக்கின்றது.

மீள் ஒருங்கிணைப்பு மற்றும் புதிய நிகழ்ச்சி என்பன தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளின் மத்தியில் பரந்தளவிலான குழப்பம் காணப்படுகின்றது. இந்த அறிக்கையின் குறிப்பிடத்தக்க கருத்தாக இருப்பது என்னவெனில், எண்ணக்கரு என்ற வகையில் மீள் ஒருங்கிணைப்பு என்பது, கொள்கை மற்றும் பிரயோக தேவைகளில் முழுமையானதாகவும், பொருளாதாரம், சமூகம், உளச் சமூகம், கலாசாரம் மற்றும் அரசியல் அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பால்நிலை மற்றும் பிரதேசம் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், மீள் திரும்பியவர்கள் பலாத்காரமாக வந்துள்ளார்களா, விருப்புடன் வந்துள்ளார்களா, வெற்றியடைந்துள்ளார்களா, இல்லையா என்பது தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

மீள் ஒருங்கிணைப்பு உதவிகளில் பொறுப்புடையவர்களாக கருதப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மிகவும் பகிரங்கமானதாக, பல நிகழ்ச்சிகளை கொண்டதாக உள்ளன. விசேடமாக, பால்நிலை சார்ந்த நிகழ்ச்சிகள் ஊடாக மீள் திரும்பிய பெண் குடிபெயர் தொழிலாளர்களுக்கு பொருளாதார உதவி, தகைமை பயிற்சிகள் மற்றும் உளச் சமூக உளவளத்

துணை என்பவற்றையும், பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவிகளையும் வழங்கி வருகின்றன. எவ்வாறாயினும், இந்த நிகழ்ச்சிகளும் பெரும்பாலும் திட்டமிடப்படாத வகையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் வாழ்வாதார வருமான திட்டங்கள் மிகவும் குறைந்தளவிலான வர்த்தக வெளிப்படைத் தன்மையே காணப்படுகின்றது.

அத்துடன், ஒரேவிடயங்கள் மீள முன்னெடுக்கப்படுவதும், சில புவியியல் பகுதிகள் புறக்கணிக்கப்படுவதனையும் காணக் கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக வெற்றியென்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குழப்பத்துக்கு உரியதாகவும் உள்ளது. குறித்த பகுதியின் தேசிய கொள்கை தொடர்பான அறிவு இன்மையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது. உதாரணமாக, 2008ஆம் ஆண்டு தொழிலாளர் குடிபெயர்தல் தொடர்பான தேசிய கொள்கை உருவாக்கப்பட்டிருந்தாலும், இதுவரையும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பல்வேறு மீள்ஒருங்கிணைப்பு திட்டங்களை பகுப்பாய்வு செய்ததன் ஊடாக மற்றும் பங்குதாரர்களுடனான ஆலோசனைகளின் பின்னர் இலங்கை அரசாங்கம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களுக்கு, தற்போதைய குடிபெயர் சட்டங்களில் மீள் ஒருங்கிணைப்பு உள்ளடக்கும் திருத்தங்கள், தேசிய கொள்கையினை நடைமுறைப்படுத்தல், புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியானது மீள் திரும்பும் அனைவரையும் உள்ளடக்கும் வகையில் பூரணமானதாக இருத்தல், சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அமைக்கப்படல், இலங்கை அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் குடிபெயர் தொழிலாளர்கள் உள்ளடங்கிய பிரதிநிதிகளின் சுயாதீன கண்காணிப்பு, மீள் திரும்பிய பெண் குடிபெயர் தொழிலாளர்களின் தேவைகள் மற்றும் அவர்களுடைய தகைமைகள் மற்றும் திறமைகளை புரிந்துகொள்ளல் என்பவற்றின் அடிப்படையிலான மதிப்பீட்டின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்,

மீள் ஒருங்கிணைப்பு மற்றும் குடிபெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பிலான எந்தவொரு நிகழ்ச்சியிலும் குடிபெயர் செயன்முறையின் அனைத்து பங்குதாரர்களும் ஒத்துழைப்புடனும், ஒருங்கிணைப்புடனும் பங்காற்ற வேண்டும் போன்ற பரிந்துரைகளை LSTஇன் இந்த அறிக்கை முன்வைத்துள்ளது.

# இலங்கையில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள்

## *Law & Society Trust*[1]

### அறிமுகம்

தொழிற்சந்தையின் உலக மயமாக்கலானது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது அதிஷ்டத்தை அந்நிய மண்களில் தேடுவதையும் தமது உழைப்பை அங்கு விற்பதையும் அறிமுகம் செய்கிறது. இவர்களே உலகின் புலம்பெயர் தொழிலாளர்கள் ஆவர்.[2] இலங்கையும் இந் நிகழ்வுக்கு அந்நியப்பட்டதல்ல. 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ 250,000 தொழிலாளர்கள்[3] இலங்கையிலிருந்து வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றதுடன் இக்காலப்குதியில் 1.8 மில்லியனுக்கு மேற்பட்ட இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பணியாற்றினர்.

தொழிலாளர் வெளிப்பாய்ச்சலின் பெருந்தொகையானது மத்திய கிழக்கை[4] நோக்கிய திறனற்ற மற்றும் அரைத் திறன் வேலைகளுக்காக அமைந்துள்ளது. 2010 மே அளவில் இந்தப் பிராந்தியத்தில் மாத்திரம் 1.2 மில்லியனுக்கு மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள்[5] காணப்பட்டனர். 1970 வரைக்கும், மத்திய கிழக்கில் எண்ணெய் வளம் அதிகமாகக் காணப்பட்ட காலம் வரைக்கும் இந் நிலைமை இருந்தது. பொருளாதார நலன் நோக்கிய இந்தப் புலம்பெயர்வில் ஐரோப்பிய நாடுகளுக்கான தொழில்சார் மற்றும் திறன் சார் புலம்பெயர்வாளர்களது புலம்பெயர்வுகளும் முக்கியமாக உள்ளடங்கியிருந்தன.இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப்

---

1 பிரதான ஆய்வு எழுத்தாளர் மியுறு குணசிங்ஹ, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் நிகழ்வின் (ESCR) ஆய்வாளர், சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியம் (LST), இவ்வறிக்கையானது கலாநிதி.மொனிகா ஸ்மித்தினால தொகுக்கப்பட்டது, வெளிநாட்டு வேலையாளர்க்கான சர்வதேச நிறுவனத்தின் முன்னால் வெளிவாரி ஆலோசகர். இவ்வாய்வுக்குஞ துணைபுரியும் டய்கோனியா (ஸ்வீடன்) நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2 உறுப்புரை 2.1 – எல்லா புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான சர்வதேச சமவாயம் - ஒரு புலம்பெயர் தொழிலாளி எனப்படுபவர் தான் சுதேசிய அல்லாத நாட்டில் பிரதியுபாகரத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபட்ட, ஈடுபட்டுக்கொண்டிருக்கும், ஈடுபடும் ஒரு ஆளாவார்.

3 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

4 இந்த அறிக்கையின் நோக்கத்திற்காக சேர்க்கப்படுகிறது வட ஆபிரிக்கா GCC மற்றும் Levant

5 வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைச்சு

பணியகம் (SLBFE) இப் புலம்பெயர்வை ஊக்குவித்து ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்டு, 2007 இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சின் ஆதரவின் கீழும், பின்னர் 2010 இல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழும் கொண்டு வரப்பட்டிருந்தது. ஆனாலும் இது ஒரு அமைச்சு என்பதை விட ஒரு பணியகமாக, திறனற்ற மற்றும் அரைத்திறனுடைய புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஒரு தொடர்பு மையமாக செயற்படுகிறது. இப் பணியகமானது முகவர்களை ஒழுங்கமைப்பதற்கும், வேலைவாய்ப்பிற்காக நியமங்களை அமைப்பதற்கும், தொழிலாளர்களுக்கான பயிற்சி மற்றும் அறிமுக விளக்கப் பயிற்சிகளை பொறுப்பெடுப்பதற்கும், வேலைவாய்ப்பு ஆவணங்களை ஆராய்வதற்கும், புலம்பெயர்வோருக்கு நலனோம்பல் மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்கும் பொறுப்பாக உள்ளது.

இலங்கையின் தொழிற்படையானது 2008 ஆம் ஆண்டில் 7,569,000[6] ஆட்களாகக் காணப்பட்டனர். இவர்களில் 1,800,000[7] பேர் வெளிநாட்டில் வேலைவாய்ப்பையும் 285,021 பேர் 2008ல்[8] புலம்பெயர்ந்தும் இருந்தார்கள். 1970 களின் போதும், மற்றும் அதற்குப் பின்பும், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா, மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு தொழில்வாண்மை ரீதியாக புலம்பெயர்ந்தோர் அந்த நாடுகளிலேயே தங்கியிருந்தனர். அதன் வழியாக அவர்கள் இலங்கையின் தொழிற்படை மற்றும் பொருளாதாரத்திலிருந்து விலகியிருந்தனர்[9]. அவ்வண்ணமான வெளிநாட்டு வதிவோரின் பரிணாமத்தை மதிப்பிடுவது இந்த அறிக்கையின் நோக்கமல்ல. ஆனால் புலம்பெயர் தொழிலாளர்களில், குறிப்பாக வீட்டு பணிப்பெண்களின் நிலை மீது விசேட அழுத்தம் கொடுப்பதுடன், தேசிய தொழிலாளர் படையின் புலம்பெயர்வை ஆராய்வதே இதன் நோக்கமாகும். வறுமை, வேலையின்மை, தகுதிக்கேற்ற வேலையின்மை[10] தசாப்தகாலங்களாக நீடித்த சிவில் யுத்தம்[11] என்பன இலங்கையில் சர்வதேச புலம்பெயர்விற்கு பின்னால் இருந்த பிரதான

---

6 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

7 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

8 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

9 குணதிலக்க, கொட்விறி (1986) Migration of Asian Workers to the Arab World:ஐ.நா பல்கலைக்கழகம், டோக்கியோ, பக்கம்.166

10 International Migration Outlook Sri Lanka (2008). Institute of Policy Studies / IOM; p.16 பக்16

11 ஹம்பேட், மைக்கல் சு (2000) The Kitchen Spoon's Handle; Transnationalism and Sri Lanka's Migrant Housemaids, Cornell University Press. Ithaca, பக்கம் 30

செயற்படுத்திகளாக இருக்கின்றன. 2009 இல் இந்த நாட்டின் வேலைவாய்ப்பின்மை வீதமானது 5.7 ஆக இருந்தது. விசேடமாக ஆண்கள் வேலையின்மை ஆனது 4.3%[12] ஆக, உயர்வாக இருந்தது. எனவே தான் வெளிநாட்டில் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் உயர்வாக நாடப்பட்டன.

1988 இலிருந்து 2008 வரை வெளிநாட்டிற்குச் சென்ற புலம்பெயர் தொழிலாளர்களில் பெரும்பாலானோர், வீட்டுப் பணிப்பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் ஆவர். 2008 இல் ஆண்களையும் வெளிநாட்டுச் செல்லும்படியான அரசாங்கத்தின் ஊக்குவிப்பைத் தொடர்ந்து பெண்களின் 48.88 வீதத்தை[13] விட புலம்பெயர் தொழிலாளர்களில் 51.12 வீத உள்ள ஆண்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. பெண் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழில் தேடிச் செல்லும் நாடுகளில் காணப்படும் பெண் தொழிலாளர்களைப் பாதிக்கும் பல வகையான பாதுகாப்பு மற்றும் நலன்சார் பிரச்சினைகளும், வீடுகளில் எதிர்கொள்ளும் சமூக மற்றும் கலாசாரப் பிரச்சினைகளும் மற்றும் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் புலம்பெயர் தொழிலாளர்களின் போக்கை திறன் சார் ஆண் தொழிலாளர்களைக் கொண்டதாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் இம் மாற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கிறது.[14]பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பின் சட்டக அமைப்பிற்குள், அவர்களின் வகிபங்கும் உரிமைகளும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியதாக உள்ளது. வெளித் தெரியாத தொழிற்படைகளின் பண அனுப்புகைகளாவன இலங்கையின் பொருளாதாரத்தின் மூலைக்கல்லாக உள்ளது. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின்பொழுது எடுத்துக்காட்டப்பட்ட ஒரு உண்மை இதுவாகும். இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளின்படி புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்புகையானது 2008 இலே 2.8 U.S பில்லியனாக இருந்ததுடன், அது 2009ஆம் ஆண்டிலே 3.3 பில்லியன் U.S டொலர்களாக அதிகரித்தது. 2008 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணியை உருவாக்குவதில் புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்புகைகளை ஆடை ஏற்றுமதிகள் மாத்திரமே முந்தியிருந்தது. 2010 ஆம் ஆண்டின் ஆரம்பகால அறிக்கைகளின்படி இந்தப் பண அனுப்புகைகளே வெளிநாட்டு செலாவணியை உருவாக்குவதில் பெரும் பங்கு ஆற்றுபவையாக

12 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

13 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE,பத்தரமுல்ல,http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf.

14 2009 மார்ச்சில் ஜனாதிபதியின் அறிக்கை

விளங்குகின்றது[15]

## 2008 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கை[16]

| துறை | 2008 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க டொலர்களிலான வருமானம் |
|---|---|
| ஆடை ஏற்றுமதி | 3.5 பில்லியன் |
| வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்தான பண அனுப்புகை | 2.9 பில்லியன் |
| தேயிலை ஏற்றுமதியிலான வருமானம் | 1.3 பில்லியன் |

| துறை | பெண்கள் நூற்றுவீதத்தில் |
|---|---|
| ஆடை ஏற்றுமதி | 75-80% |
| வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்தான அனுப்புகைகள் | 48% |
| தேயிலை ஏற்றுமதி | 75% |

உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின்பொழுதும், 30 வருட யுத்தத்திலிருந்து மீளும்பொழுதும், பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்வதிலும், வெளிநாட்டுப் பண அனுப்புகைகள் நாட்டிற்குள் கிட்டுவதற்கும் இந்தப் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு மிகவும் உதவியுள்ளது. IMF நியமங்களால் ஆரோக்கியமானது எனப் பார்க்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கங்களின் மட்டமானது, இறக்குமதிகளின் 3 மாத பெறுமதிக்கு சமதையாக இருக்கிறது. எவ்வாறாயினும் 2009 இல் ஏற்றுமதிகளின் 1.5 மாதங்களின் பெறுமதியாக இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்கள் குறைந்தன. GSP+ தற்காலிக நிறுத்தமும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியும், ஆடை மற்றும் தேயிலைக் கைத்தொழில்களைத் தாக்கியது. ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்புகையானது தொடர்ந்து அதிகரித்ததுடன், வீழும் பொருளாதாரத்திற்கான ஒரு பாதுகாப்பு வலையாகவும் செயற்படுகிறது. மொத்த தனியார் அனுப்புகைகளின் 59 வீதத்தினை மத்திய கிழக்கில் இருந்து வரும் அனுப்புகைகள் கொண்டிருக்கிறது.

15 'Remittances top Forex earnings', *Daily News*, 05 ஜுலை 2010 via Tops.lk - http://www.tops.lk/article22608-remittances-top-forex-earnings.html

16 'Contribution of Women in Sri Lankan Society', *The Island*, Financial Review,16/06/2009

துரதிஷ்டவசமாக இலங்கை பொருளாதாரத்தை தக்க வைத்திருக்கச் செய்யும், பொதுவாக இலங்கைப் பெண்களதும், குறிப்பாக புலம்பெயர்ந்த பெண்களினதும் பெருமளவான பங்களிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்படாதவையாகவே விளங்குகின்றன.பெண்களது பங்களிப்பு குறைவாகக் கணிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவர்கள் அனுப்பும் நாடுகளிலும் அனுப்பப்படும் நாடுகளிலும் சமூக மற்றும் கலாசார பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

புலம் பெயர் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளிலும், (குறிப்பாக இலங்கையில்) அனுப்பப்படும் நாடுகளிலும் (விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளில்) புலம் பெயர் தொழிலாளர்களையும் (விசேடமாக பெண் தொழிலாளர்களை) அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்கான தற்போதுள்ள தேசிய சட்டங்கள், மற்றும் அரசியல் நிர்வாக ஏற்பாடுகள், சர்வதேச சமவாயங்கள் குறித்து பகுப்பாய்வு செய்வதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் செல்லும் நாடுகளிலும் இலங்கையிலும் எதிர்கொண்ட பிரச்சினைகளின் ஒரு சுருக்கமான மேலோட்டப் பார்வை இங்கு தரப்படுகிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கம், மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் என்போருடன் தொடர்புடைய வீச்செல்லைகள், வகிபங்குகள் மற்றும் பிரச்சினைகள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்த விடயத்தில் காணப்படும் இடைவெளிகள் மற்றும் சிபார்சுகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

## பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல்

புலம்பெயர்வுச் செயன்முறையில் புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் உரிமை மீறல்கள் புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்பான கட்டத்திலிருந்து, திரும்பி வந்து மீளிணையும் கட்டம் வரைக்கும் வழமையானவையாக உள்ளன. புலம்பெயர்வோரைப் பாதுகாப்பதற்காக இயலக்கூடிய கொள்கைகளை உருவாக்கும் பொருட்டு, அவர்கள் எதிர்கொள்ளும் இம் மீறுகைகளானவை புரிந்து கொள்ளப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது.

அடுத்துவரும் பகுதியில் இப் புலம்பெயர்வுச் செயன்முறை மூன்று பிரிவுகளாக: புறப்படுவதற்கு முன்பு, வேலையில் இருக்கும்பொழுது, மீள இணையும்பொழுது ஆராய்கின்றது.

## உப முகவர்கள் மற்றும் மோசடியான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்க்கும் முகவர்கள்

உப முகவர்கள்[17] புலம்பெயர்வுச் செயன்முறையில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் இடை ஆட்களாகச் செயற்பட்டு வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவர்களுடன், இப் புலம்பெயர்வோரை தொடர்பு ஏற்படுத்தி விடுபவர்களாக உள்ளனர். ஆனாலும் அவர்கள் தற்போது இலங்கைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்லர். உப முகவர்கள் அநேகமாக அளவுக்கதிகமான கட்டணங்களைத், தமது சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் புலம்பெயர உள்ளவர்களிடமிருந்து அறவிடுகிறார்கள். இற்றைவரைக்கும் இந்த உப முகவர்கள் புலம்பெயர் தொழிலாளியை சட்ட ரீதியான ஆட்சேர்க்கும் முகவருடன் தொடர்புபடுத்தி விடுவதற்காக ஒவ்வொரு உள்நாட்டு புலம்பெயர் தொழிலாளியிடமிருந்தும் ரூபா 15,000 முதல் 25,000[18] வீதம் சம்பாதிக்கிறார்கள்.[19]இல்லாத வேலைகள் குறித்து உப முகவர்கள் வாக்களிக்கும் அறிக்கைகள், அளவுக்கு மிஞ்சிய கட்டணம் அறவிடுகைகள், வேலைவாய்ப்பிற்கும் பயணத்திற்கும் சட்ட விரோத ஆவணங்களைத் தயாரித்தல் என்பன வழமையானவையாகும். அநேகமாக உப முகவர்கள் சட்டத்தின் எல்லைக்கு வெளியிலே செயற்படுவது குறித்தும் கட்டணங்களை சட்டத்திற்கு மாறாக அறவிடுவதும் குறித்தும் இப் புலம்பெயர்பவர்கள் அறிந்திருப்பதில்லை.

## முகவர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளால் துஷ்பிரயோகம் செய்யப்படல்

அனுப்பப்படும் நாடுகளில் பெண் தொழிலாளர்கள் உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவது மிகவும் பிரசாரப்படுத்தப்பட்ட விடயமாகும். ஆனாலும் பெரிதும் அறிந்திராத ஒரு நிகழ்வு என்னவெனில் இலங்கைக்கு

---

17 பிரதான வேலைவாய்ப்பு முகவர்களுடன் தொடர்பு கொண்ட தனிநபர்கள் ஆயினும் பதிவு செய்யப்படாதவர்களும் உரிமை இல்லாதவர்களும் சட்டத்துக்க புரம்பானவர்கள். சுாதாரண செயட்பாடாக ஒவ்வெபரு தனிநபரும் பிரதான முகவர்களுடன் பிரச்சனைகள் அதிகரித்துள்ள அச்சமயத்தில் இணைதல் அவசியம்

18 Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in S Arabia, Kuwait, Lebanon and the UAE, பக்கம் 24. http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

19 இத்தொகையை உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சாதாரண உள்ஹர் முகவருக்கு பயணச் சீட்டு மற்றும் வீசாக் கட்டணங்களைச் செலுத்திவிடுகிற போதும் அதனை பொருட்படுத்தாது வெளிநாட்டுயாட்களிடமிருந்து பெறப்படும தொகையாகும்.

உள்ளே புறப்படுவதற்கு முன்பான கட்டத்தின்பொழுது இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகமாகும். முகவர்களும், உப முகவர்களும் இப் பெண் புலம்பெயர் தொழிலாளர்களை துஷ்பிரயோகம் செய்வதாக குற்றம் சாட்டப்படுகிறார்கள். இலங்கை விமானநிலைய அதிகாரிகளும் விமானநிலையத்தில் பாவிக்கப்படாத இடங்களில் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதில் ஈடுபடுகிறார்கள்.[20]

## வேலையின்பொழுது

அநேகமான புலம்பெயர்வோரின் முறைப்பாடுகளாவன செல்லும் நாடுகளில் வேலைக் காலப்பகுதியிலும் மற்றும் வீடுகளோடும் தொடர்புடைய முறைப்பாடுகளாக உள்ளன. இம் முறைப்பாடுகளவான பல தரப்பட்டவை. ஊதியம் கொடுக்கப்படாமை, நீண்ட மணித்தியால வேலைகள், சுதந்திரமான நடமாட்டத் தடை, தூதரக அலுவலர்கள், முகவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பாடல் இன்மை, நோய் மற்றும் சுகாதாரக் கவனம் இல்லாமை, விசேடமாக பெண் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், ஒப்பந்த காலம் முடிந்த பின்பும் திருப்பி அனுப்பாமை, முகவர்களின் பிழையான வாக்குறுதிகள் அல்லது ஏற்று வரவேற்கப்படாததால் தவிக்க விடப்படுதல் ஒப்பந்தக்காலம் முடிவடையாமல் வேலையில் இருந்து நீக்குதல், பல முதலாளிகளுக்கு வேலை செய்யும் வண்ணம் நிர்ப்பந்திக்கப்படல், சட்டவிரோத பணக் கொடுக்கல் வாங்கல்கள், அசாதாரண காரணங்கள் நிமித்தம் மரணம் சம்பவித்தல் என்பன இக்காரணங்களில் சிலவாகும்.

## வேலை வழங்குனரால் துஸ்பிரயோகம் செய்யப்படல்

வீட்டுப் பணிப்பெண்கள் ஒருநாளின் 24 மணித்தியாலங்களும் வேலை செய்யத் தயாராய் இருக்குமாறு எதிர்பார்க்கப்படுவதுடன் கொடூரமாக நடத்தப்படுகின்றார்கள். இதிலே உடல் துஸ்பிரயோகம் உள்ளடங்குவதுடன், கடுமையான அடிபடுதலுடன்[21] மாத்திரம் வரையறுக்கப்படுவதில்லை. சூடான எண்ணெய், தண்ணீர் போன்றவற்றை

---

20 Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo, பக்கம்10 http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

21 Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in S Arabia, Kuwait, Lebanon and the UAE, பக்கம் 58 , http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

ஊற்றுதல், சூடான கருவிகளால் சுடுதல்[22], உணவு நீர் கொடுக்காது விடுதல்[23], நடமாடுவதில் கட்டுப்பாடுகள் போடுதல்[24] என்பனவாகும். பல புலம்பெயர் தொழிலாளர்கள் வேலைவழங்குனர்களால் அல்லது அதே நாட்டவர்களாலும் புலம் பெயர்பவர்களாலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்டு இருப்பதாக அறிக்கையிடுகிறார்கள். இந்தப் பெண்களில் சிலருக்குப் பாலியல் துஸ்பிரயோகம் ஒருமுறை நடந்த சம்பமாகவும் ஏனையவர்களுக்கு அவர்களின் தொழிலின் ஒரு பகுதியாக பாலியல் சேவைகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பொலிசாரிடமிருந்தான பாதுகாப்பு

2010.05.07 இல் நேர்காணப்பட்டது.

எஸ்.ஏ.நஜீரா[25] ஒரு பதினொரு வயது பையனின் 28 வயது தாய் 2008 இல் குவைத்திற்கு சென்று 06 மாத்திற்குள் திரும்பி வந்திருந்தாள். அவள் 14 பேர் உள்ள அதாவது கடுமையான வேலைப் பாரம் நிறைந்த குடும்பத்தின் பணிப்பெண்ணாக இருந்தாள். அதற்கு மேலதிகமாக அக் குடும்பத்திலே இருந்த ஒரு பொலிஸ்காரன் அவளை பல தடவைகள் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்ய முற்பட்டான். அவள் தனது முகவர்களுக்கு அது குறித்து முறைப்பாடு செய்த பொழுதும் ஒரு பொலிஸ்காரன் அவளைத் துஷ்பிரயோகம் செய்பவராக இருந்தமையால், இந்த நிலைமையைத் தீர்ப்பதற்கு முகவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இறுதியாக அவள் தனக்கு வேலை வழங்குபவர்களிடமிருந்து தப்பிச் சென்று விட்டாள். அதிஷ்டவசமாக குவைத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த அவளது சகோதரியார் அவளுக்கு உதவி செய்தாள். அவள் தனது சகோதரியின் உதவியுடன் சிகை அலங்காரம் செய்யும் பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள். தனது கணவன் ஹெரோயினுக்கு அடிமையாகிவிட்டார் என்று இலங்கைக்குத் திரும்பி வந்ததும் அவள் அறிந்து கொண்டாள். அவள் தனக்குச் சொந்தமான நகைகளை அடகு வைத்து தனது கடன்களை கட்டி முடித்தாள். ஆனாலும் அவளுக்கு இன்னும் இரண்டு இலட்சங்கள் கடனாக உள்ளன. அவளுக்கு கடன் கொடுத்தவர்கள் அப் பணத்தை தொகையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த வழியும் இல்லாது, அவள் தனது சகோதரியின் உதவியுடன் மீளவும் புலம்பெயரத் தீர்மானித்தாள். அவளது குழந்தையானது அவளது பேர்த்தியார் ஒருவருடன் விடப்படும்.

---

22 Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in S Arabia, Kuwait, Lebanon and the UAE, பக்கம் 58 . http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

23 Human Rights Watch (2010). Slow Reform; Protection of Migrant Domestic Workers in Asia and the Middle East, பக்கம் 10, http://www.hrw.org/en/reports/2010/04/28/slow-reform-0

24 புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பி வந்தோருடனான தனிப்பட்ட நேர்காணல்கள்

25 பெயர் மாற்றப்பட்டுள்ளது

## வெளிநாட்டில் புலம்பெயர் பணியாளர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள்

பல சந்தர்ப்பங்களில் புலம்பெயர் பெண்கள் வெளிநாடுகளில் வேலை புரிந்து கொண்டிருக்கும் போது கருத்தரித்து பிள்ளைகளைப் பெற்று எடுக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் இக் கருத்தரிப்பானது வன்புணர்ச்சியினால் ஏற்படுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில் இது பரஸ்பர இணக்கத்தின் ஊடாக நடைபெறுகிறது. எவ்வாறு இருந்தாலும் உண்மையான சமய, சமூக காரண காரியங்கள் அல்லது திருமண அந்தஸ்து என்பன இப்பிள்ளைகளை மீண்டும் இங்கு கொண்டுவருதிலிருந்து புலம்பெயர் பெண்களைக் தடை செய்கிறது. அநேகமான சந்தர்ப்பங்களில் இப்பிள்ளைகள் தங்கியிருக்கும் நாடுகளில் பிரஜா உரிமைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தங்கியிருக்கும் நாட்டின் பிரஜையாக தந்தை நிரூபிக்கப்பட்டிருக்கும் பட்சத்திலேயே அவ்வாறு செய்து கொள்ள முடிகிறது.

ஆனாலும் குழந்தையின் தந்தையின் பிரஜா உரிமை எந்த நாட்டினதாயிருந்தாலும் தாய் இலங்கைப் பிரஜையாக இருக்கும் பட்சத்தில் குழந்தைக்கும் இலங்கைப் பிரஜா உரிமையைக் கொடுப்பதற்கு இலங்கைச் சட்டம் அனுமதிக்கிறது. இதன் சரியான செயன்முறைகள் குறித்து இலங்கைப் பெண்களுக்கு உதவுவதற்கு இலங்கை தூதரகங்களில் உள்ள அதிகாரிகளுக்கு ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் இலங்கைத் தூதரகங்களுக்கும் இந்தத் தகவலைக் கிடைக்கச் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

## நலன்புரி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைத்திருத்தல்

துஸ்பிரயோக நிலைமைகளினால் தப்பியோட முயலும் புலம்பெயர் தொழிலாளர்கள் சிலவேளைகளில் அதனைத் தொடர்ந்து நலன்புரி முகாம்களில் அல்லது தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்படுகிறார்கள். வேறு சில சந்தர்ப்பங்களில் அவர்களது வேலை வழங்குனர்களிடம் பலாத்காரமாக திருப்பி அனுப்பப்படுவதுடன், அவர்களது ஒப்பந்தத்தை முடிக்க வேண்டியும் உள்ளது. சில தடுப்பு நிலையங்கள் போலல்லாது சில நலன்புரி நிலையங்களானவை உண்மையில் வேறு வகையான தடுப்பு நிலையங்கள் போன்று குறைந்தளவான சுகாதார, ஆரோக்கிய வசதிகளுடன் சமூகசேவையாளர்கள் சென்று பார்ப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டதாக இருக்கிறது.[26]

---

[26] Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families. WMC மற்றும் ACTFORM. கொழும்பு, http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

**ஏழ்மையிலிருந்து ஏழ்மைக்கு**
வட மத்திய மாகாணத்தில் 2010.05.07 இல் நேர் காணப்பட்டது.

சிறியந்தி[27] எனப்படும் 49 வயதுடைய இவள் மரத்தூண்கள் மீது வைக்கப்பட்டுள்ள நெழிந்த இரும்பு மற்றும் பிளாஸ்ரிக் தகடுகளினால் ஆன வீட்டில் வசித்து வருகிறாள். அவள் தனது சம்பாத்தியத்திற்காக திரிகள் செய்கிறாள். அவள் ஒரு வீட்டுப்பணிப்பெண்ணாக 2003 குவைற்றுக்கு புலம்பெயர்ந்தபொழுது தனது உறவினர்களுடன் தனது பதின்மவயது பிள்ளைகளை விட்டுச் சென்றாள். அவளது கணவர் இப்பொழுது மீண்டும் திருமணம் முடித்து, அவளைக் கைவிட்டு விட்டார். அவள் குவைத்தில் ஆறு மாதங்களாக எவ்வித ஊதியமும் இன்றி வேலைசெய்து விட்டு இறுதியாக இலங்கை தூதரகத்திற்குச் சென்றாள். அவள் திருப்பி அனுப்பப்படும் வரைக்கும் ஒரு மாதகாலமாக சனநெருக்கடி மிகுந்ததும், சுகாதாரமற்றதுமான தூதரக புகலிடத்தில் தங்கியிருந்தாள்.தூதரக அதிகாரிகள் அவ்வாறு புகலிடம் பெற்றிருந்தோரை தரக்குறைவாக நடத்தியதாக சிறியாந்தி கூறுகிறார். புறப்படுவதற்கு முன்பதாக அவளது ஊதியம் மற்றும் தனிப்பட்ட சொத்துகளை இழந்தமையைப் பதிவதற்காக ஒரு ஆவணம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததும், அவளுக்கு சரியாக மொழிபெயர்க்கப்படாததுமான அந்த ஆவணத்தைப் பரிசோதித்தபொழுது அவளுடைய சொத்துக்கள் மீளப் பெறப்பட்டது எனப் பிரகடனம் செய்யும் ஒரு கூற்றிலே கையெழுத்து இடப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

## கவாலா அல்லது அனுசரணை முறைமை[28]

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை மீறுவதற்கான வேறு ஒரு காரணமாக இருப்பது, அநேகமான மத்திய கிழக்கு நாடுகளில் (அண்மையில் பாஹ்ரினில் தடைசெய்யப்பட்டுள்ளது[29]) நடைமுறையிலுள்ள கவாலா (*Kafala*)

27 பெயர் மாற்றப்பட்டுள்ளது.

28 United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, கொழும்பு, http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf

29 'In April 2009, the *kafala* system was changed in Bahrain. In particular it allows employees to switch from one employer to another without the employer's consent': 'Bahrain scraps sponsorship system', The Situation of Women Migrant Workers in Bahrain (2008) via Migrant

எனப்படும் அனுசரணை முறைமையாகும். இக் கவாலா முறைமையின் கீழ் (அராபியமொழியில் கவனம் எடுத்தல் மற்றும் உத்தரவாதம் அளித்தல் என்னும் கருத்துடையது) மத்திய கிழக்கில் ஒரு வேலையளிப்பவர் ஒரு புலம்பெயர் தொழிலாளியின் விசாவுக்கு அனுசரணை செய்வதுடன், அவரது ஒப்பந்தக் காலப்பகுதியின்பொழுது அவர்களின் முழுமையான பொருளாதார மற்றும் சட்டப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றார். சட்டப்படி அனுசரணை செய்யப்பட்ட தொழிலாளி அனுசரணை செய்த வேலை வழங்குனருக்கு மாத்திரமே பணியாற்ற முடியும். வீட்டுப் பணியாளரைப் பொறுத்தளவில் அவள் தனது வேலை வழங்குனர் அல்லது அனுசரணை செய்பவரின் வீட்டிலேயே பணியாற்றுவதை இது கட்டாயமாக்குகிறது. வெளிநாட்டு தொழிலாளர்களின் உள்வரவை ஒழுங்குபடுத்தும் ஒரு வழியை அரசாங்கத்திற்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு முறைமையாக கவாலா முறைமை உள்ள நிலைமையில், இம் முறைமையானது பொதுவாக புலம்பெயர் தொழிலாளர்களையும் குறிப்பாக வீட்டுப் பணிப்பெண்களையும் சுரண்டுவதற்கு இட்டுச் செல்லும் ஒரு முறைமையாக உள்ளதாக விமர்சகர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

## சாறியா சட்டமும் பால்நிலை பாரபட்சமும்

சாறியா என்பது அரபிக்கில் 'வழி' அல்லது 'பாதையாக' அறியப்படுவதுடன் அது கடவுளின் சட்டமாக பல முஸ்லிம்களால் நம்பப்படுகிறது[30]. இது பிரதானமாக குர்ரானில் இருந்து வந்துள்ளது. சாறியா சட்டத்தாலே ஆளப்படும் இரு முக்கிய விடயங்களாக தண்டனையும், சமத்துவமும் உள்ளது. ஐந்து ***hadd***[31] குற்றங்களும்[32] தண்டனைகளும் உள்ளன. அவைகளாவன கசையால் அடித்தல், கல்லால் எறிதல், காலை முறித்தல், நாடு கடத்தல் அல்லது மரண தண்டனை. இதனது துரோகத்தனம் குறித்த பார்வையின் நிமித்தம், பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சாறியா நீதிமன்றங்களில்[33] அரிதாகவே

Rights, online, 06 மே 2009. http://www.migrant-rights.org/2009/05/06/bahrain-scraps-sponsorship-system/.

30 Gibb. H.A.R. (1950). Mohammedanism, An Historical Survey, '*The Shari'a*' , பக்கம்72-84, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம், லண்டன், http://www.answering-islam.org/Books/Gibb/sharia.htm

31 Hadd குற்றங்கள் ஆனது குர்ரானில் விசேட தண்டனையாக சொல்லப்பட்ட குற்றங்கள: Council on Foreign Relations. Johnson ,Toni and Lauren Vriens. (2010). Islam: Governing under Sharia. http://www.cfr.org/religion/islam-governing-under-sharia/p8034

32 சட்டத்திற்கு மாறான பாலியல் உறவுகளின் பிழையான குற்றச்சாட்டுக்கள் வைன் குடித்தல், களவு மற்றும் வீதிக் கொள்ளை: Council on Foreign Relations. Johnson, Toni and Lauren Vriens (2010). Islam: Governing under Sharia. http://www.cfr.org/religion/islam-governing-under-sharia/p8034

33 Human Rights Watch (2004). Bad Dreams – Exploitation and Abuse of Migrant Workers in Saudi Arabia, 2004 தொகுப்பு 16 பக்கம் 20 http://www.hrw.org/en/reports/2004/07/13/bad-dreams-0

நீதியைப் பெற்றுக்கொள்கின்றனர். சவுதி அரோபியா, குவைத், பாஹ்ரின் போன்ற நாடுகளில் பெருமளவிலான எண்ணிக்கையில் உள்ள, இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள், இச்சட்டத்தைப் பின்பற்றுகின்றார்கள். புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த அபாயகரமான நிலையை எதிர்கொள்ளுவதற்கு ஒரு உதாரணமாக, 17 வயதுடைய[34] இலங்கைப் பெண்ணாகிய றிஸானா நவீக்கின் சர்ச்சைக்குரிய வழக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. அவள் குழந்தைப் பராமரிப்பாளராக பணியாற்றிக் கொண்டிருக்கும்பொழுது, அக் குழந்தைக்கு உணவூட்ட முனைந்த பொழுது, அக் குழந்தை மூச்சடைத்து இறந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். சம்பவம் நடந்த நேரத்தில் ஒரு சிறுமியாக இருந்த றிசானாவுக்கு சிரச்சேதம் செய்து மரணதண்டனையை நிறைவேற்ற சவுதி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனாலும் பிரச்சினைக்குரிய சில சட்டங்கள் இருந்தாலும், அந்நாடுகளானவை பொதுவாக புலம்பெயர் தொழிலாளர்களினதும் குறிப்பாக வீட்டுப் பணிப்பெண்களினதும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன. 2007 ஏப்பிரலில் ஐக்கிய அரேபிய எமிரேட்ஸ் ஆனது வெளிப்படையாகவே வீட்டுத் தொழிலாளர்களின் உரிமைகளையும், உரித்துடைமைகளையும் தெரிவிக்கும் ஒரு தரப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வெளியிட்டது. அதனை உடனடியாக ஜோர்தானும் பின்பற்றியது. அத்துடன் லெபனான் அதனைச் செய்வதற்கு திட்டமிடுகிறது.[35] பாஹ்றினிலே புதிதாக நிறுவப்பட்ட தொழிற் சந்தை ஒழுங்குபடுத்துகை அதிகாரசபையானது புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெருமளவான சுதந்திரத்தை வழங்கும் பொருட்டு, அவர்களின் ஆரம்ப ஒப்பந்தம் பூர்த்தியானதைத் தொடர்ந்து, ஒரு மாற்றியமைக்கக்கூடிய விதத்தில் தற்போதுள்ள சட்டங்களை மாற்றியுள்ளது. ஏனைய சாதகமான பதிற்செயற்பாடுகளாகப் பார்க்கும் பொழுது ஜோர்தானிய அரசாங்கமானது தனது தொழிற்சட்டங்களில் வீட்டு வேலைகளை அங்கீகரித்துள்ளதையும் நாங்கள் உள்ளடக்கலாம்.[36]

## மருத்துவக் கவனம் இல்லாமை

அநேகமாக மத்திய கிழக்கிலுள்ள வீட்டுத் தொழிலாளர்கள் உள்ளூர் தொழிற்சட்டங்களுக்கு உட்படாமல் இருப்பதனால் (ஜோர்தானில் மாத்திரம் இது விதிவிலக்காக உள்ளது) பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சுகாதாரக் கவனத்தைப் பெற்றுக்கொள்வது மறுக்கப்படுகிறது. அவர்கள் அச் சேவைகளை

[34] இது வயது குறைந்தவர்களை ஒரு வஞ்சகக் கடத்தல் சம்பவமாக சுட்டிக்காட்டப்பட்ட போதும் இவளுக்கு யார் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு வழங்கியது, இது தொடர்பாக யார் பொறுப்பேற்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகின்றது.

[35] United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, கொழும்பு, http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf

[36] ibid

அடையக்கூடிய ஒரு வழியாக இருப்பது, தாமாகவே அதற்கான கட்டணத்தை செலுத்துவதன் மூலமாகவும் அல்லது அவர்களுக்கு வதிவிடப் பத்திரங்களை[37] வழங்கும் அவர்களின் வேலை வழங்குனர்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்வதுமாகும். நாட்டிலே ஒழுங்கீனமாக[38] தங்கியிருப்பதாக அவர்களைச் சந்தேகப்பட்டு தனியார் மற்றும் பொது வைத்தியசாலைகளில் இருந்து அவர்களை திருப்பி அனுப்பிவிடும் சம்பவங்களும் உள்ளன. இருந்தும் சிலவேளைகளில் கவாலா முறைமையின் நிமித்தமாக புலம்பெயர்ந்தவர்கள் அநேகமாக அவர்களது கடவுச்சீட்டுக்களையோ, தொடர்புடைய விசாக்களையோ தம்மிடம் வைத்திருப்பதில்லை.

## மேலதிக நேர வேலைக்கொடுப்பனவு இல்லாமலே நீண்டநேரம் வேலைசெய்தல்

இது பல வீட்டுத் தொழிலாளர்களிடமிருந்து மீள மீள வரும் முறைப்பாடாகும். மத்திய கிழக்கு நாடுகளிலே தொழிற்சட்டங்களானவை நாளாந்த வேலைக்கும், விடுப்புக்கும், மேலதிக வேலைநேரக் கொடுப்பனவுக்குமான[39] நியமங்களையும், தெளிவான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கும் அதேவேளையில், இச் சட்டங்களானவை வீட்டுத் தொழிலாளர்களுக்கு பிரயோகிக்கப்பட முடியாதவையாக உள்ளன.

**சம்பளம் கொடுக்கப்பட்ட அடிமைகள்**

2010.07.28 இல் நேர்காணப்பட்டது குணவதி (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

ஒரு வீட்டு பணிப்பெண்ணாக குவைத்திற்கு சென்றாள். அவளுக்கு ஒரு மாதத்திற்கு 50 டினார்கள் கொடுக்கப்படுவதற்கு வாக்களிக்கப்பட்டது. ஆனால் அவளுக்கு 45 டினார்களே கொடுக்கப்பட்டது. இதைத் தவிர அவள் மூன்று வீடுகளில் வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாள். அவள் தங்கியிருந்த பிரதான வீட்டில் ஆறு மணிக்கு வேலை தொடங்க வேண்டியதாக உள்ளது. அங்கு அவள் பிற்பகல் ஆறுமணி வரை வேலை செய்தாள். பின்பு அவளை வேலைக்கு அமர்த்தியவர் அவருடைய உறவினர் வீட்டிற்கு எடுத்துச் செல்வார். அங்கு அவள் பத்து மணி வரைக்கும் வேலை செய்தாள். அதன் பின்பு மூன்றாவது வீட்டிற்கு எடுத்துச் சென்று அங்கேயும் அவள் அதிகாலை 2.00 மணி வரை வேலை செய்ய வேண்டியிருந்தது. பின்பு

---

37 Human Rights Watch (2004). Bad Dreams – Exploitation and Abuse of Migrant Workers in Saudi Arabia, தொகுப்பு 16 பக்கம் 33, http://www.hrw.org/en/reports/2004/07/13/bad-dreams-0

38 ibid.

39 Human Rights Watch (2004). Bad Dreams – Exploitation and Abuse of Migrant Workers in Saudi Arabia, தொகுப்பு 16 பக்கம் 38, http://www.hrw.org/en/reports/2004/07/13/bad-dreams-0

அவளை வேலைக்கமர்த்தியவர் வீட்டிற்கு அழைத்து வந்தார். தன்னை வீட்டுக்கு அனுப்பும்படி கேட்கும் வரை இரண்டு வருடங்கள் இவருக்காக அவள் பணியாற்றியிருந்தாள். ஆனால் அவளுடைய வேலை வழங்குனர் இதற்கு இணங்கியிருந்தாலும், பயணச் சீட்டிற்காக அவளுடைய இரண்டு மாதச் சம்பளத்தை செலுத்தும்படி அவள் நிர்ப்பந்திக்கப்பட்டாள்.

## கொடுக்கப்படாத சம்பளங்கள்

பல புலம்பெயர் தொழிலாளர்கள் நீண்ட நேரமாகவும், சிரமமான நிலைமைகளிலும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படும் அதேவேளையில், பல வேலைவழங்குனர்கள் அவர்களுக்கு இணங்கப்பட்ட ஊதியத்தை நேர காலத்திற்கு வழங்குவதில்லை. இதில் மிகவும் மோசமான நிலைமை யாதெனில் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாமலே இருந்துள்ளது. இணங்கப்பட்ட ஊதியங்கள் வழங்கப்படவில்லை என்ற புள்ளிவிபரங்கள் என்ற வகைப்பாட்டில் 2008 ஆம் ஆண்டில் அதிகூடிய முறைப்பாடுகள் பெறப்பட்டிருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கிறது.[40]

## விட்டுச் செல்லும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இவ்வாறான புலம்பெயர்தலில் ஏற்படும் இன்னொரு பிரச்சினையாக இருப்பது தொழிலாளர்கள் விட்டுச் செல்லும் குடும்பங்கள் பற்றியதாகும். பிரிந்திருப்பதன் தாக்கமாக விசேடமாக பிள்ளைகளின் வாழ்வு சிதறுகிறது. பிள்ளைகள் விட்டுச் செல்லப்படும்பொழுது தந்தையார் அல்லது பெற்றோர்களின் பெற்றோர்களால் அல்லது உறவினர்களால் கவனிக்கப்படுகிறார்கள். அநேகமான பிள்ளைகள் குடும்ப அலகினால் உள்வாங்கப்படாமல் கவனிப்பாரற்றுப் போவதுடன், கல்வி, சுகாதாரம், போசாக்கு[41] என்பவற்றையும் கைவிட வேண்டி ஏற்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் பண அனுப்புகைகள் நல்ல கல்வியையும், சுகாதாரக் கவனத்தையும் பெற்றுக்கொள்ள உதவியுள்ளன. அவர்களின் தாய் இல்லாமை காரணமாக தந்தையரால் மேற்கொள்ளப்படும் பாலியல் மற்றும்

---

40 ஆண் 346, பெண் 1,352 மொத்தம் - 1698 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE, பத்தரமுல்ல,

41 'Caregivers observed certain negative behavior in children after the departure of the mother; 22.1% of children under 5 showed loss of appetite, and 5% in the same group showed weight loss. On average 20% of children in all age groups showed increased temper tantrums after the departure of their mother.' Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad, Save the Children in Sri Lanka, கொழும்பு, பக்கம் 6,http://www.crin.org/docs/save_sl_left_out.pdf, (Extracts from the Summary Report compiled by Save the Children in Sri Lanka and Kishali Pinto-Jayawardena can be found in *Law & Society Trust Review*, பதிப்பு 17 தொகுப்பு 226 (ஆகஸ்ட் 2006): 19-46)

உடல் துஷ்பிரயோகங்கள் அல்லது பாதுகாப்பின்மையால ஏனையோரால் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் பொதுவானது எனலாம்[42]. இப்பிள்ளைகளின் உளவியல் வடுவிற்கும் இப் பிரிவுக்கும் இடையில் தொடர்பு இருப்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.[43]

**ஒரு தாயின் பெரும் பிரச்சினைகள்**
2010.05.07 இல் நேர்காணல் செய்யப்பட்டது.

சாராதா குருநாகலில் இருந்து வரும் ஒரு புலம்பெயர் தொழிலாளியாகும். அவர் ஒரு பதினேழு வயது நிரம்பிய மகளின் தனித்த தாயாக இருந்தாள். அவள் இடியப்பங்கள் அவித்து விற்பதன் மூலம் தனது வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொண்டிருந்தபொழுது தனது மகளுக்கு ஒரு எதிர்காலத்தை அமைப்பதற்காக புலம்பெயரத் தீர்மானித்தாள். அந்நேரத்தில் அவள் மகள் சதீபா பதினேழு வயதாக இருந்தமையினால் அவளது குடும்ப உறவினர்களின் கவனத்தில் விட்டுச் சென்றாள். 2008 ஜனவரியில் சாராதாவை விட்டுச் சென்ற அவளுக்கு 2008 மார்ச்சில் அவளது மகள் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. அவள் திரும்பவும் இங்கே வந்து மகள் உயிரோடிருப்பதாகவும் அவளின் பராமரித்த குடும்பத்தவரால் உடல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிற்பாடு தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் அறிந்து கொண்டாள். சதீபா குருநாகல் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்பு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தாள். ஒரு சிறுவர் நீதிமன்றமானது அவளை மொறட்டுவவில் உள்ள அநாதைகள் மடத்தில் சேர்த்திருந்தது. சாராதா அநாதைகள் மடத்திற்கு சென்று இதனை அறிந்து கொண்டாள்.

கணவர்கள் அநேகமாக மனைவியரின் சம்பாத்தியத்தில் தங்கியிருக்கிறார்கள். அத்துடன் இதனைத் தொடர்ந்து வேலை செய்வதையோ, அல்லது தாமாக வேலையைத் தேடுவதையோ கைவிட்டு விடுகிறார்கள். அதிக ஓய்வுநேரமும் பணமும்

[42] Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad, Save the Children in Sri Lanka, Colombo, p.7, http://www.crin.org/docs/save_sl_left_out.pdf, (Extracts from the Summary Report compiled by Save the Children in Sri Lanka and Kishali Pinto-Jayawardena can be found in *Law & Society Trust Review*, பக்கம் 7 மற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவலகர்கள் ஊடான நேர்காணல் HRC புத்தளம்

[43] Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad, Save the Children in Sri Lanka, Colombo, p.5 – 6, http://www.crin.org/docs/save_sl_left_out.pdf, (Extracts from the Summary Report compiled by Save the Children in Sri Lanka and Kishali Pinto-Jayawardena can be found in *Law & Society Trust Review*, Volume 17 Issue 226 (August 2006): 19-46) பக்கம் 5,6

கிடைப்பதனால் அவர்கள் குடிப்பதற்கும், சூதாடுவதற்கும், விபசாரத்திற்கும்[44] திரும்புகிறார்கள். வருமானம் ஈட்டித் தருபவர் என்ற நிலையில் இருந்து வீட்டைக் காப்பவர் என்னும் சமூக நிலையிலான அவருடைய மாற்றத்தைப் பற்றிய ஒரு மன உளைச்சல் ஏற்படுவதனால் சிலவேளைகளில் தமது ஆணாதிக்க[45] நிலைப்பாட்டை மீள நிறுவிக்கொள்ளும் வழியாக பெண்களின் வேலைகளாகக் கருதப்படும் வேலைகளை அவர் கைவிடுவதற்கு இட்டுச் செல்கிறது. இதன் விளைவாக குடும்ப அலகில் உடைவு ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.

## மீள ஒன்றிணைதல்

புலம்பெயர்வுச் செயன்முறையின் இறுதிப்பகுதியாக இருப்பது புலம்பெயர்ந்தோர் திரும்பி வருவதும் அவர்கள் மீள இணைவதும் ஆகும்.

## தாய் பிள்ளை இணைப்பு அறுந்து போதல்

தமது குடும்பங்களை விட்டுப் பிரிந்து, தொடர்பு இல்லாமலோ அல்லது சிறிதளவு தொடர்புடனோ காணப்படும் நிலைமை புலம்பெயர் தொழிலாளர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் இடையிலான பிணைப்புகளை சிலவேளைகளில் முறிக்கக்கூடும். காலம் செல்லச் செல்ல இப்பிள்ளைகள் தாய்மார்கள் குறித்த இழப்புணர்வு குறைந்து போய், தமது அருகிலுள்ள தம்மைப் பராமரிப்பவர்களின்[46] நெருக்க உணர்வை ஏற்படுத்திக் கொள்கிறது. தாயார் வெளிநாட்டில் இருப்பதால் பொருளாதார ரீதியான நன்மைகள் தாய் அவர்களுடன் கூட இருப்பதன் தேவையைக் கூட மறைத்து விடலாம்.

சிலநேரங்களில் பிள்ளைகளை விட்டுச் சென்ற தாய்மார்கள் திரும்பிவரும்பொழுது அவர்கள் அடையாளங் காணப்படாமல்[47] இருப்பதுடன், குழந்தைகளால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு கடினமாக முயற்சிக்க வேண்டியுள்ளது.

---

[44] ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids , கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, பக்கம் 175

[45] ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids , கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, பக்கம் 175

[46] ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids , கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, பக்கம் 196

[47] ibid

## திருமண முறிவுகள்

புலம்பெயர்வோரிடையே விவாகரத்துகள் ஏற்படுவதானது சராசரியை விட அதிகமாக உள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன.[48] பல பெண் புலம்பெயர்ந்த தொழிலாளிகள் திரும்பி வரும்பொழுது, தங்களுடைய கணவர்களுடன் இருக்க விரும்புவதில்லை. நீண்டகாலப் பிரிவு, தொடர்பாடல் மற்றும் நம்பிக்கையில் ஏற்பட்ட முறிவு, புலம்பெயர் தொழிலாளர்கள் நவீன வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டு போனமை, வாழ்க்கைத் துணைவர் அல்லது புலம்பெயர் தொழிலாளி விபச்சாரத்தில் ஈடுபடல் மற்றும் புலம்பெயர் தொழிலாளி குடும்பத் தலைவி என்ற வகிபங்கிற்குள் அடங்கிக்கொள்ள மறுத்தல் என்பவற்றால் இது ஏற்படலாம்.

## திரும்பி வரும்பொழுது இலங்கைச் சமூகத்தால் தவிர்க்கப்படுதல்

திரும்பி வருபவர்களை, கிராமச் சமூகம், கட்டுப்பாடற்றவர்களாகவும், குறைந்த ஒழுக்கங்கள் உடையோராகவும் பார்ப்பதாகத் தோன்றுவதுடன், பின்பு அவர்களை சந்தேகத்துடனும், வெறுப்புடனும்[49] பார்க்கிறது. நடத்தை மற்றும் நடையுடை பாவனையில்[50] மாற்றம் பெறுபவர்களைப் பொறுத்த மட்டில் இக்கண்ணோட்டம் விழுகின்றது. திரும்பி வரும் பணிப்பெண்கள் அநேகமாக நகையால் மூடப்பட்டிருப்பதும், இறுக்கமான ஜீன்ஸ் மேற்சட்டை அணிந்திருப்பதும் பொதுவான தோற்றமாக உள்ளது.

அவர்கள் தமது கணவரையும், பிள்ளைகளையும் கைவிட்டதற்காக தவிர்க்கப்படுகிறார்கள். அவர்கள் வீட்டுக்கு பண அனுப்புகைகள், அன்பளிப்புகள் உதாரணமாக பால்மா பைகள் அனுப்பும்பொழுது குடும்பம் மற்றும் கிராமத்தவர்கள் அவர்கள் வெளிநாட்டில் இருக்கும் பொழுது ஆண்களுடன் முறையற்ற நடத்தையில் ஈடுபடுவதன் ஊடாகவே அதிகமான பணப்புழக்கம் கிட்டியுள்ளதா என வினாவுகிறார்கள்.[51]

---

48 குணதிலக்க ஹொட்விறி (1986) Migration of Asian Workers to the Arab World. ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம், டோக்கியோ பக்கம்208

49 ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids . கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, பக்கம் .218-220

50 ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids . கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, மற்றும் SLBFE பயிற்சி அலகு அதிகாரிகளுடனான நேர்காணல்கள் 2010

51 ஸ்மித், மோனிக்கா (2010). The state of the Sri Lankan migrant worker in the Middle East. Diss, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (இந்த கட்டுரையின் ஆசிரியர் Dr.மோனிக்கா ஸ்மித் குறிப்பிட்டுள்ளவாறு)

## வீட்டில் பெண்களின் வகிபங்கில் ஏற்படும் மாற்றம்

ஆசியர்கள் பெண்ணின் வகிபங்கை குடும்பத்தைப் பராமரிப்பததக அழுத்தியுரைக்கிறார்கள். ஆதனால் குடும்ப முறையின் வீழ்ச்சிக்கான காரணம் அவள் மீதே சுமத்தப்படுகிறது. மணம் முடித்த புலம்பெயர் பெண்கள் வழங்குபவர், கவனம் எடுப்பவர், பாதுகாப்பவர் என்ற அனைத்துமடங்கிய வகிபங்கை வகிக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். அதன் விளைவாக திரும்பிவரும் பெண்கள் மேலதிக பொறுப்புக்களுடன் வழமையாக நிதி கொடுக்கல்வாங்கல்களில்[52] கவனம் எடுத்தல் போன்ற ஆணின் ஆதிக்க செயற்பாடுகளையும் வழமையாகக் கவனிக்கிறாள். இதன் நிமித்தமாக தம்பதியரிடையேயான உறவு முறையை இது மேலும் கடுமையாக்குகிறது.

## பண அனுப்புகைகளை வீணடித்தல்

கிராமிய புலம்பெயர் குடும்பங்கள் அநேகமாக எதிர்கால பொருளாதாரத் திட்டங்கள் குறித்த கவனம் எதுவும் இன்றி கவனயீனமாக செலவழிப்பதாகத் தோன்றுகிறது. சம்பாத்தியங்கள் நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. திரும்பி வருபவர்களிடம் பண முகாமைத்துவம் குறித்தான புரிந்துணர்வு இல்லாமையின் நிமித்தமாக புத்திக்கூர்மையான முதலீடுகளோ, முயற்சியாண்மைகளோ[53] இல்லாமல் போகின்றது. பல சந்தர்ப்பங்களில் புதிதாகக் கண்டுகொண்ட செல்வத்தின்[54] நிமித்தமாக கணவன்மார் மதுபானம் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் சம்பவங்களும் உள்ளன.

## கடன் சுறாக்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்கள்

அநேகமாக புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்கள் முகவர்களுக்கு கட்டணங்களைச் செலுத்துவதற்கும், ஏனைய புலம்பெயர்தல் செலவுகளுக்குமாக அதிக வட்டிக்குக் கடன் பெறுகிறார்கள். வங்கியிடமிருந்து[55] பெற்றுக்கொள்வதற்கான போதிய பாதுகாப்பு அல்லது போதிய அடமானப் பாதுகாப்பு அவர்களிடம் இல்லாமையினால் உள்ளூர் கடன்கொடுப்பவர்கள் அல்லது துணை முகவர்களினால் இது நடைபெறுகிறது.

---

52 குணதிலக்க ஹொட்விறி (1986) Migration of Asian Workers to the Arab World, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம், டோக்கியோ, பக்கம்208

53 குணதிலக்க ஹொட்விறி (1986) Migration of Asian Workers to the Arab World, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம், டோக்கியோ, பக்கம் 207

54 புலம்பெயர் தொழிலாளர்கள் திரும்பி வந்தோருடனான தனிப்பட்ட நேர்கணால்கள் குருணாகல நாடாக2010

55 ஹம்பேட், மைக்கல் ரூத் 2000 The Kitchen Spoon's Handle -Transnationalism & Sri Lanka's Migrant Housemaids , கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், இத்தாசா, பக்கம் 75

அத்துடன் சாதாரண வீட்டுத் தேவைக்கான கடனும் அதிகரித்துக் காணப்படும். அநேகமான சந்தர்ப்பங்களில் புலம்பெயர் தொழிலாளர்களின் வருமானம் சேமிப்பு ஆனவை இக் கடன்களை கட்டிமுடிக்க போதாமையினால், அது மீளவும் புலம்பெயர வழிவகுக்கின்றது.

## எயிட்ஸ் / எச்ஐவி தாக்கங்கள்

பாலியல் சுரண்டல் அல்லது சுதந்திரம், விழிப்புணர்வு போதாமை, கடுமையான கடன் என்பன விபசார தொழிலுக்குஇட்டுச் செல்வதுடன், புலம்பெயர்ந்து தொழில்செய்யும் ஆண்களையும், பெண்களையும் எயிட்ஸ்/ எச்ஐவி[56] தொற்றுக்கு உள்ளாக்கி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையானது மரபுரீதியாக குறைந்தளவிலான எயிட்ஸ்/எச்ஐவி உள்ள நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலே அண்ணளவாக 3500 ஆட்கள் எயிட்சுடன்[57] வாழ்வதாக UNAIDS மதிப்பிடுகிறது. ஆனாலும் நோயாளிகளுடன் பிரத்தியேகமாகப் பணியாற்றும் லங்கா பிளஸ்[58] எனப்படும் அசாறி உடனான நேர்காணலின் பிரகாரம் இதைவிட அதிக எண்ணிக்கையானோர் நோய்த் தொற்றுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கிறது[59]. பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் அறிக்கையிடப்படாததினால் அதிகாரிகள் சந்தேகப்படுவதைக் காட்டிலும் அநேகமான தொற்றுடையவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமையானது இவ் அமைதியான வைரஸ் பரவுகையின் அபாயத்தை அதிகரித்துள்ளது.புலம்பெயர்வுடன் தொடர்புடைய மேலோட்டமான பார்வையைத் தொடர்ந்து இவ் அறிக்கையானது தடுப்பு பொறிமுறைகள் குறித்து ஆராய்கிறது. விசேடமாக செய்யப்பட வேண்டிய சட்டவாக்கங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தொடர்புடைய பிரச்சினைகள், இடைவெளிகள் மற்றும் ஓட்டைகள் என்பன குறித்து ஆராய்கிறது.

---

56 United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, , கொழும்பு, பக்கம்..14-17 http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf.

57 United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, கொழும்பு, பக்கம்.14-17 http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf.

58 நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களுடனான நேரடி நேர்காணல் 22.06.2010

59 நேர்காணலின் போது (22.06.2010), திருமணத்திற்கு அப்பாலான உடலுறவின் காரணமான எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியிருந்து புலம்பெயர்ந்து மீள திரும்பி வந்த பெண்ணொருவரின் கணவர் இறந்துள்ளமை தொடர்பில் அறியக் கிடைத்தது.

## சட்டவாக்கம்

இப்புலம்பெயர்வுச் செயன்முறையின் எல்லா அம்சங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு அனைத்துமடங்கிய சட்டவாக்கத்தின் தேவை குறித்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் வளர்ந்துவரும் விழிப்புணர்வு காணப்படுகிறது. சர்வதேச அமைப்புக்களும், அரசாங்கங்களும் புலம்பெயர் தொழிலாளிகளினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளையும் அத்துடன், தொழிலைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் தொழிலைக் கொடுக்கும் நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் விரும்புகிறது. புலம்பெயர் தொழிலாளர்களுக்கான இலங்கையின் தற்போதைய சட்டவாக்கமானது 1985 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டுப் பணியக சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு அதன் 4 ஆம் இலக்க திருத்தச்சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு அதன் 56 ஆம் இலக்கத் திருத்தச்சட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் பாதுகாப்பது மீதான சர்வதேச சமவாயத்துடன், 1990 இல் இலங்கை இணங்கிக் கொண்டதுடன், 2003 இல் அது அமுலுக்கு வந்தது. பெண்களுக்கு எதிரான எல்லாவிதமான பாரபட்சங்களையும் ஒழிப்பது மீதான சமவாயத்துடனும் அது உத்தியோகபூர்வமாக இணங்கிக்கொண்டது. (CEDAW) அதன் சில உள்ளடக்கங்கள் பெண்கள் சாசனத்தில் உள்ளது. உரிமைகள் சட்டமூலத்தில் அடங்கியுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகளானவை 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை மனித உரிமைகள் அதிகாரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இலங்கையானது சில முக்கிய ILO[60] சமவாயங்களுக்கு உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளதுடன், சி 97[61], சி 143[62], சி 181[63] ஆகிய சமவாயங்களுக்கு அது இன்னும் உத்தியோகபூர்வமாக இணங்க வேண்டியதாக உள்ளது. ஆட்களை கடத்துதல் தொடர்பான விடயமானது 2006 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க தண்டனைக் கோவை (திருத்தச்) சட்டத்துடன் சம்பந்தப்படுகிறது.புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை வெளிநாட்டு பணியகச் சட்டகத்தில் உள்ள முழுமைத் தன்மை இன்மை காரணமாக இலங்கை அரசாங்கமானது 2008 இல் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான தேசியக் கொள்கை ஒன்றை முன்வைப்பது பொருத்தமானது எனக் கண்டது.

---

60 ILO Conventions; C26, C29, C87, C95, C100, C105, C111, C131, C138 etc – out of 40 Conventions ratified, 31 are in force – International Labour Organization; http://webfusion.ilo.org/public/db/standards/normes/appl/appl-byCtry.cfm?lang=en&CTYCHOICE=1750

61 வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்தல் சமவாயம் (மீளமைக்கப்பட்டது )1949

62 1975 ஆம் ஆண்டு புலம்பெயர் தொழிலாளர்கள்(மிகை நிரப்பு ஏற்பாடுகள் ) சமவாயம் 1975

63 தனியார் வேலைவாய்ப்பு முகவர் சமவாயம் 1997

ஆனாலும் அது இன்னும் முற்று முழுமையானதாகவும், வினைத்திறனாகவும் அமுல்படுத்தப்படவில்லை. இலங்கை ஒரு தொழிலாளரை அனுப்பும் நாடு என்ற வகையில் அதற்கு நேரடியாகப் பிரயோகிக்கப்படக்கூடிய புலம்பெயர் தொழிலாளர்களுடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் சட்டவாக்கத்தின் ஒரு மேலோட்டமான பார்வை அடுத்து வரும் பகுதியிலே தரப்படுகிறது. இந்த அறிக்கையானது விசேடமாக சட்டவாக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடைவெளிகளையும் அறிக்கையிடுகிறது.

## எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதுகாப்பது மீதான சர்வதேச சமவாயம்

UDHR, CEARD, CEDAW, ILO சமவாயங்கள் மற்றும் பல்வேறுபட்ட மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான ஐநா தீர்மானங்கள் என்பவற்றில் சொல்லப்பட்டுள்ள கொள்கைகள் நியமங்கள், நிபந்தனைகளை கருத்தில் எடுத்து எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் மனித உரிமைகளை ஊக்குவிப்பதை இச் சமவாயமானது பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

உறுப்புரை 8–35 (பகுதி III) - எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மனித உரிமைகள்

- புலம்பெயர்வோரின் நடமாட்டச் சுதந்திரமும் அவர்களுடைய உறவுகள் தம் பூர்வீக சொந்த அரசில் இருந்து, தம் சுதந்திர விருப்பில் விலகிச் செல்வதற்குமான சுதந்திரம். எனினும் இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையான ஐந்து வயதிற்கு குறைந்த எல்லாப் பிள்ளைகளின் தாய்மார்களையும் வேலைக்காக புலம்பெயர்வதை தடைசெய்யும் யோசனை அமுல்படுத்தப்பட்டால் அது இந்த உரிமையை மீறுவதாக அமையும்.

- சித்திரவதையில் இருந்து சுதந்திரம். பணியாற்றும் நாடுகளில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அநேகமாக சட்டரீதியற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் மாத்திரமே தற்போது நடைமுறையில் உள்ளது.

- சொந்த நாடானது புலம்பெயர்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு போதிய பயிற்சியூடாக சமவாய உரிமைகள் பற்றிய தகவல்களைப் பரப்பும் பொறுப்பைக் கொண்டுள்ளது. இது இலவசமாக வழங்கப்படக் கூடியவை. ஆகவே இலங்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்[64] விதிக்கும் கட்டணங்கள் இவ் ஒழுங்கு விதிக்கு முரணானவையாக உள்ளன.

உறுப்புரை 36–56 (பகுதி IV)– நிலையான ஸ்தானத்தில் இருக்கும் அல்லது ஆவணப்படுத்தப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் ஏனைய உரிமைகள்

- சொந்த நாட்டு பொது அலுவல்களில் பங்குபற்றும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, தெரிவு செய்யப்படும் உரிமை இருந்தும் தேசியத் தேர்தல்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்கும் நடைமுறைகள் இலங்கையில் இல்லை.

- வேலை செய்யும் நாட்டில் நடமாடும் சுதந்திரத்திற்கான உரிமை. வேலை வழங்குனர்கள் தமது வீட்டில் புலம்பெயர் தொழிலாளர்களின் நடமாடுவதற்கான உரிமையைக் கட்டுப்படுத்தும் கவாலா உரிமையானது, புரிந்துணர்வு ஒப்பந்தங்களினதும், இருபக்க ஒப்பந்தங்களிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய தேவையாகவுள்ளது.

- புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களின் ஐக்கியத்தை பாதுகாப்பதை உறுதிப்படுத்துதல். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் புதிதாக அமுல்படுத்தப்பட இருக்கும் மீள இணைத்தல் நிகழ்ச்சித்திட்டமானது, அதனுடைய கவனத்தை பிரதானமாக பொருளாதாரத்தில் மாத்திரம் வைத்துக்கொள்வதில் இருந்து விடுவித்து, புலம்பெயர்வுடன் தொடர்புடைய குடும்ப உளவியல் மற்றும் சமூக விடயங்களையும் உள்ளடக்க வேண்டும்.

- சம்பாத்தியங்களை மாற்றி அனுப்புவதற்கான உரிமையும் மற்றும் இறக்குமதி தீர்வைகள் வரிவிதிப்புக்களில் இருந்து விலக்களிப்பும். சேமிப்பையும் முதலீட்டையும் ஊக்குவிப்பதற்கான வரி விலக்களிப்பு தற்போது போதியதாக இல்லை.

உறுப்புரை 64 -71 (பகுதி VI ) – தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சர்வதேச புலம்பெயர்வுடன் தொடர்புடைய நல்ல நீதியான மனிதத் தன்மையுடைய சட்டபூர்வமான நிலைமைகளை ஊக்குவித்தல்.

[64] S. 51 SLBFE Act No 21 of 1985

- புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் சமூக சட்ட மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் தூதராலாய சேவைகளை வழங்குதல். தூதரகங்களில் பாதுகாப்பான வீடுகளை அமைப்பதையும் இது உள்ளடக்குகின்றது. தற்போதுள்ள பாதுகாப்பு வீடுகளானவை அரசியல் மயப்படுத்தப்பட்ட தெரிவு முறைமைகளால் தகைமை வாய்ந்த பணியாளர்களைக் கொண்டிராது இருப்பதுடன், சுகாதாரம், வளங்கள் மற்றும் ஆதரவுத் தேவைப்பாடுகள், உகந்த சூழல்கள்[65] என்பவற்றையும் கொண்டிருக்கவில்லை.

- ஆட்சேர்ப்பு முகவர்கள்: அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவர்கள் வேறொரு நாட்டில் வேலைவாய்ப்பிற்காக தொழிலாளர்களை சேர்க்கும்பொழுது, அவர்கள் பொதுச்சேவை அல்லது அரச அமைப்புக்களுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்ய வரையறை செய்ய வேண்டும். இச் செயன்முறையின் முக்கிய பங்காக உப முகவர்கள் இருப்பதனால் இலங்கை அரசாங்கமானது, அதிகாரமளிப்பு பதிவினை உப முகவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

- புலம்பெயர் தொழிலாளர்களைக் கடத்துதல்: அரச தரப்பினர் சட்டரீதியற்ற அல்லது தடைசெய்யப்பட்ட நடமாட்டங்களை தடுப்பதற்கும், ஒழுங்கீனமான நிலைமைகளில் தொழிலாளர்களுக்கு வேலையளிப்பதையும், அவ்வாறானவற்றில் ஈடுபடுபவர்களுக்கு தடைகளை விதிப்பதற்கும், அரச தரப்புக்கள் ஒத்துழைக்க வேண்டும். கடத்துகையானது தற்பொழுது தகவல் வலைப்பின்னலின் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையினாலும், நாடுகளுக்கிடையிலான தடை செய்தல் ஏற்பாடுகளாலுமே என்பதிலும் பார்க்க ஒவ்வொரு சம்பவ உதாரணங்களின் ஊடாகவே தற்போது கையாளப்படுகிறது.

- புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை செய்யும் நிலைமைகளை சிறப்பாக்குவதற்காகவும், புலம்பெயர் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அரசுகளுக்கிடையே இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டும். தற்போது அண்ணளவாக ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஒரு

[65] புத்தளம் மற்றும் குருநாகலில் புலம்பெயர் தொழிலாளரில் திரும்பி வந்தோருடனான தனிப்பட்ட நேர்காணல்கள் 2010

இருதரப்பு உடன்பாடும் கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சட்டரீதியான கடப்பாட்டைக் கொண்டிராதமையால் அவை வினைத்திறனற்றவையாக உள்ளன.

## 1985 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தைப் பொறுத்தளவில் அதன் வெளிப்படையாகத் தெரியும் ஒரு விடயம் அது நல்ல நீதியான மனிதத் தன்மை வாய்ந்த சட்டபூர்வமான நிலைமைகளை புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதை ஒருமையாக தவிர்த்திருக்கிறது.

இச்சட்டத்தின் ஒட்டுமொத்த சாரமானது முற்றுமுழுதாக அரச அதிகாரத் தன்மையுடையதாக இருப்பதுடன், அதனை பின்வருமாறு சுருக்கி தர முடியும்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அதன் பணிப்பாளர்கள் சபையின் நிறுவுகை மற்றும் ஒழுங்குபடுத்தல்களை வழங்குகிறது. இச் சபையானது முற்றுமுழுதாக அமைச்சரவை நியமனங்களையே கொண்டிருப்பதுடன்,[66] ஒரு பெண் உத்தியோகத்தரை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. இது மட்டுமன்றி திரும்பி வந்த புலம்பெயர் தொழிலாளியையோ, செயற்பாட்டு நிறுவனங்கள் அல்லது தொழிற்சங்க நிறுவனங்களின் பிரதிநிதிகளையோ உள்ளடக்கவில்லை. ஆனாலும் முகவர்களின் பிரதிநிதிகள் நால்வரைக்[67] கொண்டிருப்பதனால், தீர்மானங்கள் தொழிலாளர்களைக் காட்டிலும் முகவர்களுக்கே அதிகம் சார்பாக எடுக்கப்படுகின்றன (உறுப்புரை 3 – 16).

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களையும் சந்தைப்படுத்தக்கூடிய ஆற்றல்களையும் ஊக்குவிப்பதும் விருத்தி செய்வதும். பிலிப்பினோ சட்டங்களுக்கு[68] முரணான வகையில் புலம்பெயர்வுச் சட்டமானது பொருளாதாரப் புலம்பெயர்வை உற்சாகப்படுத்தும் அதேவேளையில், அதனோடு பிணைந்த பாதுகாப்புக்களில் அழுத்தம் செய்யவில்லை. (உறுப்புரை 20 – 23)

---

66 *Art 5 (1) (a) - (d) SLBFE Act No 21 of 1985

67 SLBFE பணிப்பாளர் சபையில் மொத்தம் 11 உறுப்பினர்கள் இருப்பர்- உறுப்புரை 5 (1) SLBFE Act No 21 of 1985

68 புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் கடல் கடந்து வாழும் பிலிப்பினோக்கள் சட்டம் (குடியரசுச்சட்டம், 8042)

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களை ஒழுங்குபடுத்துதல் (உறுப்புரை 24-44). இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால்[69] வழங்கப்பட்ட உரிமங்களை வைத்திருக்கும்படியாக எல்லா முகவர்களும் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள். வேலை வாய்ப்புப் பணியகத்துடன்[70] ஒப்பந்தம் ஒன்றில் அல்லது பிணை ஒன்றில் ஈடுபடுமாறு கேட்கப்படுவதுடன், பணியகத்தால்[71] வழங்கப்பட்ட எல்லாப் பதிவுகளையும் பேணும்படியும் வேண்டப்படுகிறார்கள். வரைவிலக்கணப்படுத்தப்பட்ட காரணங்களுக்காக[72] பணியகமானது உரிமத்தை வழங்குவதற்கான அங்கீகாரத்தை மறுக்கக்கூடும். அத்துடன் பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளையும் நடத்தக்கூடும். ஒவ்வொரு உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களும் சங்கத்தின் உறுப்பினராக இருக்க முடியும். இச்சங்கம் முறைப்பாடுகளை ஒழுங்குபடுத்தி தீர்த்துக்கொள்வதுடன், பணியகத்திற்கு மதியுரைகளையும் வழங்கும்.

எவ்வாறாயினும் இறுதியிலுள்ள 'every licensee shall' என்ற சொற்களுக்குப் பதிலாக every licensee may எனப் பிரதியீடு செய்யப்படுவது பதிவு செய்கையில் உரிமம் பெறுவரின் தெரிவை[73] அது அனுமதிப்பதால் பதிவுச் செயன்முறையின் செயற்திறத் தன்மையை கெடுக்கிறது.

இந்த நெகிழ்வுத் தன்மை முகவர்கள் விரும்பினால் ALFP யின் உறுப்பினராக வந்து அதன் கண்காணிப்பின் கீழ் உட்படலாம் என்ற சந்தர்ப்பத்தைக் கொடுப்பதால், முகவர்களின் பொறுப்புக்கூறும் தன்மையைக் குறைத்து விடுகிறது. இத் திருத்தத்தின் அமுல்படுத்துகையானது SLBFE யை ALFEA யின் விமர்சனத்தின் கீழ் கொண்டு வந்து விடுகிறது.சமவாயத்தின் பிரகாரம் பணியாளர்களுக்கு இலவச சேவையை அரசு வழங்க வேண்டிய கடப்பாடு இருந்தபோதிலும், பணியகத்திற்கு[74] செலுத்த வேண்டியவைகளை தவிர ஏனைய கட்டணங்களை அறவிடுவதிலிருந்து உரிமம் பெறுவோர்களை இச் சட்டம் தடைசெய்கிறது.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பிலுள்ள இலங்கையர்களின் நலனோம்பல் மற்றும் பாதுகாப்பை பொறுப்பெடுத்தல்[75]. இந்த இலக்கை

69 உறுப்புரை 24 (1) SLBFE Act No 21 of 1985

70 உறுப்புரை 28, SLBFE Act No 21 of 1985

71 உறுப்புரை 41, SLBFE Act No 21 of 1985

72 உறுப்புரை 39, SLBFE Act No 21 of 1985

73 SLBFE (திருத்தச்) சட்டம் இல 56, 2009

74 உறுப்புரை 34 மற்றும் உறுப்புரை 51 SLBFE Act No 21 of 1985

75 உறுப்புரை 15 (m), SLBFE Act No 21 of 1985



08289

விஸ்தரிப்பிற்காக செய்யப்பட்ட ஒரே ஏற்பாடு என்னவெனில், வேலை வழங்கும் நாடுகளில் பிரதிநிதிகளை நியமிப்பதாகும்[76]. இந்தப் பிரதிநிதிகள் அநேகமாக வேலை வழங்கும் நாடுகளின் சட்டவாக்கத்திலோ அல்லது மொழியிலோ பரிச்சயம் அற்றவராய் இருப்பதுடன், புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதில் வினைத்திறனற்றவர்களாகவும் உள்ளனர்.

- வெளிநாட்டு வேலை பார்க்கும் இலங்கையர்களிடமிருந்து நன்கொடைகளையும் பங்களிப்புகளையும் கொண்டு உருவாக்கப்படும் தொழிலாளர் நிதியமொன்றை உருவாக்குவதுடன், புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும்[77] பணியகத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்காக ஏற்படும் செலவினங்களுக்காகப் பயன்படுத்துதல். அரசால் அனுசரணை செய்யப்படும் வெளிப்புற பயிற்சி செலவுகள் உட்பட.

இந்த நிதியமானது காப்புறுதியால் உள்ளடக்கப்படாத விடயங்களுக்கு தொழிலாளர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்படலாம். ஆனாலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்[78] பிரகாரம் இந்தத் தகவலானது வழமையாகப் பணியாளர்களுக்கு பரப்பப்படுவதில்லை.

- வெளிநாட்டுக்கு செல்லும் இலங்கைத் தொழிலாளர்களின் பயிற்சி மற்றும் அறிமுகப் பயிற்சி வழங்கலைப் பொறுப்பெடுப்பதுடன், திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் புனர்வாழ்வையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் பொறுப்பெடுத்தல். வழங்கப்பட்ட சேவைகளிற்காக அமைச்சரால்[79] குறித்துரைக்கப்படும் ஒரு தொகையைப் புலம்பெயர்வோர் பணியகத்திற்கு வழங்குவர். வழமையாக இது கற்கைநெறி கட்டணத்தின் அரைவாசியாகும். இது சமவாயத்திற்கு எதிரான ஒரு நேரடி முரண்பாடாகும்.

- இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமாக அன்றி, ஒருவர் புலம்பெயர்வதற்கு யாதுமொருவர் உதவி செய்தால் அவர் குற்றம் இழைத்ததாகக் கருதப்படுவார்[80]. எந்த உரிமம்

---

76 உறுப்புரை 21, SLBFE Act No 21 of 1985

77 உறுப்புரை 45-50 SLBFE Act No 21 of 1985

78 SLBFE உறுப்பினர்களுடனான தனிப்பட்ட நேர்காணல்

79 SLBFE (திருத்தச்) சட்ட இல 1994

80 உறுப்புரை 62 SLBFE Act No 21 of 1985

உடையவரும் ஆவணங்களில் மோசடி செய்தல், அல்லது ஒருவரை எவ்வழியிலாவது புலம்பெயர நிர்ப்பந்திப்பவர் குற்றமிழைத்தவராகக் கருதப்படுவார்[81]. ஆனாலும் ஆட்கடத்தலுக்கு அவ்வாறு பெயரிடப்படவோ வரைவிலக்கணம் செய்யப்படவோ இல்லாதிருப்பதுடன், வேலைவாய்ப்பின் தன்மை மற்றும் கொடுப்பனவுகள் குறித்து பிழையாக வழிநடத்துதல்கள் குற்றங்களாக உள்ளடக்கப்படவில்லை.

- காப்புறுதி, கடன்கள் மற்றும் புலமைப்பரிசில்கள் போன்ற நன்மைகள் தற்போது இலங்கை வெளிநாட்டுப் பணியகத்தால் வழங்கப்படுபவைகள் இச் சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்படவில்லை. புலம்பெயர்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் நியாயமான வேலை நிலைமைளையும், வாழ்க்கை நிலைமைகளையும் வேலை கொண்டிருப்பதற்கும் சமனான சந்தர்ப்பங்களையும், ஊதியத்தையும் நடமாட்டச் சுதந்திரத்தையும், வெளிப்படுத்தல் சுதந்திரத்தையும், கூட்டம் கூடுதல் மற்றும் சமய சுதந்திரத்தையும், வாக்களித்தல் மற்றும் தெரிவு செய்யப்படுதல், தூதராலயப் பாதுகாப்பு மற்றும் மீள இணைவுக்கான கட்டமைப்புக்களுக்கான அரச ஆதரவு என்பவற்றுக்கான ஏற்பாடுகளும் இதில் இல்லை.

## 1994 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக (திருத்தச்) சட்டங்கள்

56 ஆம் இலக்க திருத்தச் சட்டமானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மீதான ஒழுங்குகளை இறுக்கிறது. பிரதான சட்டமானது உரிமம் பெறுபவரின் வரைவிலக்கணங்களை[82] விரிவுபடுத்துவதற்கும் தண்டக் கட்டணங்களை அதிகரிப்பதற்கும் நிறைவேற்றுக் குழுவின்[83] உள்ளடங்குபவர்களை விரிவாக்குவதற்குமாக திருத்தப்பட்டுள்ளது. உறுப்புரை 62 ஆனது சட்டரீதியான ஆட்சேர்ப்பு பற்றிக் கூறுவதுடன், உறுப்புரை 67 ஆனது, பணியகத்தின் நடைமுறைகளுடன் ஒத்துச் செல்லாத முகவர்களின்[84] தவறுகள் தொடர்பாக எழும் தண்டனைகளை அதிகரிப்பதற்காக திருத்தப்பட்டுள்ளது. உறுப்புரை 72 ஆனது சுய வேலைவாய்ப்புடைய ஆட்களையன்றி எல்லாத்

[81] உறுப்புரை 63 SLBFE Act No 21 of 1985

[82] உறுப்புரை 44 SLBFE Act திருத்தப்பட்ட உறுப்புரை 3 SLBFE Act No 4

[83] உறுப்புரை 44 SLBFE Act திருத்தப்பட்ட உறுப்புரை 3 SLBFE Act No 4

[84] வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள்

தனிநபர்களையும் உள்ளடக்குவதாக தனியார்துறை பொறுப்பெடுப்பு தொடர்பாக மீளமைக்கப்பட்டுள்ளது.56 ஆம் இலக்கத் திருத்தச் சட்டமானது, ஆட்சேர்ப்பு முகவர்கள் ALFEA யுடன் பதிவு செய்து கொள்வதை every licensee shall[85] என்பதற்குப் பதிலாக every licensee may எனப் பிரதியீடு செய்வதன் மூலம் பதிவு செய்வதில் தெரிவு ஏற்பட்டுள்ளது. இது இதற்கு முன்பாக இருந்த நிலைமையான பதிவு செய்தல் கட்டாயம் என்பதற்கு முரணாக உள்ளது. இது ALFEA[86] யை தேவையற்றதாக்க கூடும். எவ்வாறு இருந்தாலும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை ஒருங்கிணைக்கவோ அதிகரிக்கவோ எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. உள்ள சட்டமூலத்தை மாற்றுவதற்கான எந்த முயற்சியிலும் அதற்கே முன்னுரிமை அளித்திருக்க வேண்டும்.

## இலங்கை 2008 க்கான தேசிய தொழிலாளர் புலம்பெயர் கொள்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சானது 2008 தேசிய கொள்கைக்காக உருவாக்கப்பட்ட பல்வேறுபட்ட குழுக்களுடன் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றது. சுதந்திரம், நியாயம், பாதுகாப்பு, மனித கௌரவம் போன்றன பேணப்படுகின்ற நிலைமைகளில் கண்ணியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர் தொழிலில் ஈடுபடும் எல்லோருக்குமான சந்தர்ப்பங்களை ஊக்குவிப்பதே இதன் பிரதான இலக்காகும் [87]. இது தெளிவான அரச புலம்பெயர்வுக் கொள்கையையும் நிறுவும்.

இக் கொள்கையானது 3 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. புலம்பெயர்வுச் செயன்முறையை நிர்வகித்தல்
2. புலம்பெயர்வு தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்பங்களைப் பாதுகாத்தலும் வலுவூட்டலும்
3. புலம்பெயர்தல் செயன்முறையையும் அபிவிருத்தியையும் இணைத்தல்

(1) அரசாங்க முகவர்களுக்கும் அரசசார்பற்ற நலன் பங்காளர்களுக்கும் இடையிலே சிறந்த ஒருங்கிணைப்பிற்கு உதவுவதற்காக ஒரு அமைச்சுக்களுக்கிடையிலான குழு நிறுவப்படும். இதிலே இவெவேப, MFEPW, குடியகல்வு குடிவரவுத் திணைக்களம், புள்ளிவிபரவியல் திணைக்களம், நிதி, வர்த்தக நுகர்வோர் விவகாரம், பெண்கள் விவகார அமைச்சுக்கள், NCPA, தொழில், வெளிவிவகாரம், கல்வி அமைச்சுக்கள் மற்றும் அரசசார்பற்ற நலன் பங்காளர்களும் உள்ளடக்கப்படுவர். அரசு தகுதிவாய்ந்த

85 உறுப்புரை 54 SLBFE Act No 21 of 1985.
86 ALFEA பணியாட் தொகுதியினருடனான நேர்காணல்
87 இலங்கைக்கான தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கை 2008

புலம்பெயர் தொழிலாளர்களை உலகளாவிய ஆற்றல் திறன் தேவைகளுடன் பொருந்தக்கூடிய வகையில் பயிற்சியளிப்பதுடன், உலக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்பத்திரங்களையும் வழங்கும். இந்த இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் அது தனியார் துறையுடனும், முகவர்களுடனும் இணைந்து பணியாற்றும். தற்போதைய பயிற்சிகளானவை வீட்டுப் பணிப்பெண்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருக்கும்.SLBFE (இவெவேப) சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஊதியக் கொள்கை, ஒழுங்கீனமான புலம்பெயர்வுகள், ஆட்களை கொண்டு செல்வது என்பவற்றை உள்ளடக்கும் தொழிற்பாடுகள் என்பன குறித்து மீள்பார்வைகள் மேற்கொள்ளப்படும்.

2. புலம்பெயர்தலில் வயது, கல்வியறிவு போன்ற தேவைப்பாடுகளுக்குக் குறைந்த பட்ச தகைமைகளை நிர்ணயித்தல். அரசானது மாதிரி ஒப்பந்தங்களை வடிவமைக்கும் இவைகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இருதலைப்பட்ச ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும். தற்போதுள்ள வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களுக்கு எந்தவித பொதுவான வடிவமைப்பு எதுவும் இல்லை.உப முகவர்கள், சுகாதாரப் பரிசோதிப்புகள் மற்றும் சரத்துக்கள் ஒழுங்குபடுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் விசேடித்த பயிற்சிகள் எச்ஐவி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் உளவள ஆலோசனைச் சேவைகள் என்பன புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்படும்.திறன்களைக் கண்டறிவதற்கும் உள்நாட்டில் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கும் உதவும் முகமாக திரும்பி வருதல் மற்றும் மீள இணைத்தல் செயன்முறையை மீள ஒழுங்கமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். ஒரு உயர் கண்காணிப்பு பொறிமுறையையும உள்ளடக்கி நீதித்துறையை உயர்பாதுகாவலராக நிறுவுவதன் ஊடாகப் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளை பாதுகாத்தல்[88].

தூதரக அலுவலகங்களில் அரசானது வள நிலையங்களை அமைக்கும். அதில் விசேடமாக வேலைக்கமர்த்தப்பட்ட பயிற்சி பெற்ற அதிகாரிகள் உள்ளடக்கப்படுவர்.

திரும்பி வருதல் மீள இணைதல் அங்கீகரிக்கப்படுவதுடன், திரும்பி வருபவர்கள் தங்களது ஆற்றல்களை உயர்த்திக் கொள்ளவும், உள்ளூர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் உதவுவதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும். மீள நாட்டுக்குத் திரும்புதல் தொடர்பான கொள்கை ஒன்று உருவாக்கப்படும். அது, அரச மற்றும் தனியார் முகவர்களை, மீளக் கொண்டு வருகைக்கு பொறுப்பாகச் செய்யும்.

---

[88] மாவட்ட நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் NCPA மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தைப் பாதுகாப்பு திணைக்களத்தினால்

3. புதிய புரிந்துணவு ஒப்பந்தங்களை/ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்களை ஒன்றிணைக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் ஊக்குவிக்கப்படும். திறனுள்ள வேலையாட்கள் புலம்பெயர்வை ஊக்குவிப்பதில் அரசு கவனம் செலுத்துவதுடன், சந்தைப் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு என்பன இந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும். பண அனுப்புகையின் அளவை உயர்த்துவதிலும் பணப் பரிமாற்றச் செலவைக் குறைப்பதிலும் பண பரிமாற்றத்திற்கான வழிவகைகளின் தெரிவுகளை விஸ்தரிப்பதிலும் கவனம் செலுத்தப்படும்[89].புலம்பெயர்வு தொழிலாளர்களின் சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுக்கான தற்போதிருக்கும் ஊக்குவிப்புக்களை மீள்நோக்குவதிற்கான ஒரு மிகை நிரப்புச் செயன்முறையும் மற்றும் தொழில்முயற்சியை உருவாக்குவதற்கான ஊக்குவிப்பும் திரும்பி வருபவர்களுக்கு உதவுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும். பரந்துபட்ட நோக்கில் சேமிப்புக்களை தூண்டுவதற்கும், உள்நாட்டு வேலைவாய்ப்பு மாற்றங்கள், பிள்ளைகளின் கல்வி சுகாதாரத்திற்கான நேரடி நிதியம் என்பவற்றை ஊக்குவிப்பதையும் இது நோக்காகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள SLBFE (இவெவேப) இன் தரவுகள், புலம்பெயர்வு தொடர்பான அனைத்துமடங்கிய தகவல் வலைப்பின்னலை உருவாக்குவதற்காக, அதனது தரம், உள்ளடக்கம் என்பன மேம்படுத்தப்படும். தேசியக் கொள்கை ஆனது அனைத்துமடங்கியதாகவும், காலத்திற்கு ஏற்றதாகவும் ஆக்கப்படும். ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்கள் சமவாயத்தின் பிரகாரம் இப் பிரச்சினையானது நடைமுறைப்படுத்தலிலேயே தங்கியுள்ளது.

## ILO சமவாயங்கள்

இலங்கையானது 40 ILO சமவாயங்களில் 31 சமவாயங்களை இற்றைவரை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து அமுல்படுத்தியுள்ளது[90]. 1957 ஆம் ஆண்டு 105 ஆம் இலக்கம் கட்டாய வேலையை இல்லாது செய்வதற்கான சமவாயம், 1973 ஆண்டு 138 ஆம் இலக்க குறைந்தபட்ச வயதுச் சமவாயம், 1951 ஆம் ஆண்டு 100 ஆம் இலக்க சம பிரதியுபகார சமவாயம் என்பன இவற்றுள் உள்ளடங்கும் குறிப்பாக ஆட்களைக் கொண்டு செல்வதுடன் தொடர்புடைய சமவாயங்களாகும். ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேடித்த சில சமவாயங்கள், புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உயர்ந்த நன்மை அளிக்கக்கூடியவைகள், உத்தியோகபூர்வ ரீதியாக இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

89 பங்களாதேசில் உள்ளதைப் போல் ஊடகம் ஊடாக உத்தியோகபூர்வப் பணத்தை மாற்றியனுப்பும் பொறிமுறையை உட்பட

90 சர்வதேச தொழிலாளா ஸ்தாபனம ' http://webfusion.ilo.org/public/db/standards/normes/appl/appl-byCtry.cfm?lang=en&CTYCHOICE=1750

1949 ஆம் ஆண்டு 97 ஆம் இலக்க வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்ந்த சமவாயம் (மீளமைக்கப்பட்டது) அரசால் புலம்பெயர்ந்தவர்களுக்கு இலவச சேவைகளையும், தகவல்களையும் வழங்குவதை ஊக்குவிக்கிறது. தற்போது இலங்கை அரசாங்கமானது பெண் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவர்களது புறப்படுகைக்கு முன்பான பயிற்சிக்கு[91] கட்டணம் அறவிடுகிறது. இச் சமவாயத்தை உத்தியோகபூர்வ ரீதியாக ஏற்றுக்கொள்வதில் இது ஒரு தடங்கலாக உள்ளது. ஏனெனில் அதன் பிரகாரம் இச் சேவைகளானவை கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும். அச் சமவாயத்தின் பிரகாரம் வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் ஒரு பிரதியானது புலம்பெயர் தொழிலாளிக்கு புறப்படுவதற்கு முன்பாக வழங்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. தற்போது இது சம்பந்தமான நியாயாதிக்க தேவைப்பாடு இல்லாமல் இருப்பதுடன், அந்த நடைமுறை வழக்கத்தில் உள்ளபோதும், அநேகமான சந்தர்ப்பங்களில் அந்த ஒப்பந்தத்தை முகவர்களே வைத்திருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டு 143 ஆம் இலக்க புலம்பெயர் தொழிலாளர்கள் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சமவாயமானது, தொழிலாளர்களின் சட்டரீதியற்ற நடமாட்டங்கள், புலம்பெயர்ந்தோரின் சட்டரீதியற்ற கட்டுப்பாடுகள், அவ்வாறான இயக்கங்களை ஒழுங்கு செய்பவர்களுக்கு எதிரான அழுத்தம் பிரயோகிக்கும் ஏற்பாடுகளை கைக்கொள்வதற்கான சட்டங்களை அமைக்கின்றது. இந்த விடயம் சம்பந்தமாக முறைமை ரீதியான தகவல் பரிமாற்றத்தை நிறுவிக்கொள்ளும்படி அரசுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆட்களைக் கொண்டு செல்பவர்கள் எந்த நாட்டில் இருந்து செயற்பாட்டாலும், அவர்களைக் குற்றம் சாட்டக்கூடியதாக உள்ளது.1997 ஆம் ஆண்டு 181 ஆம் இலக்க தனியார் வேலைவாய்ப்பு முகவர் சமவாயமானது வேலைவாய்ப்பு முகவர்களை ஒழுங்குபடுத்தலுடன் ஈடுபடுகிறது. அதனுடைய உறுப்புரை 7 இன் ஏற்பாட்டுக்காகவே அது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அதன்பிரகாரம் தனியார் வேலைவாய்ப்பு முகவர்கள் பணியாளர்களிடமிருந்து, கட்டணங்களையோ அல்லது செலவுகளையோ, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அறவிடக்கூடாது என்கிறது. ஒரு அதிகாரமுள்ள அதிகாரசபை மாத்திரமே இவ் ஏற்பாடுகளிலிருந்து விசேடமாக விலக்களிக்கப்படுகிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது அவ்வாறானதொரு அதிகாரசபையாகக் கருதப்படக்கூடியது.

## அடிப்படை உரிமைகள் அத்தியாயமும் ICCPR ம்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் வழங்கக்கூடிய அதன் பிரஜைகளின் ICCPR சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்

[91] மத்திய கிழக்கு புலம்பெயர்வு தொழிலாளர்களுக்கான பயிற்சி 1504/= இ மத்திய கிழக்கு அல்லாதவர்களுக்கானது 2300/= அத்துடன் பதிவுக் கட்டணம் - இவெவே பணியாளர்களுடனான நேர்காணல் 2010

வாழ்வுரிமை தவிர்ந்தவற்றை உத்தரவாதப்படுத்துகின்றது.எவ்வாறாயினும் இந்த உரிமையானது ஒரு சம்பவச் சட்டத்தின்[92] ஊடாக ஒரு எடுத்தியம்பல் உரிமையாக நிறுவப்படுகிறது. சாரியா சட்டத்தின் கீழான மரண தண்டனையானது இலங்கை அரசாங்கத்திற்கு அதனது புலம்பெயர் தொழிலாளர்களைப்[93] பாதுகாப்பது சம்பந்தமாக ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. அமெரிக்கா, சிங்கப்பூர், சீனா போன்ற பல நாடுகள் மரண தண்டனைகளை மேற்கொண்டாலும், சாறியா சட்டத்தைப் பின்பற்றும் நாடுகளில் விபச்சாரம் கூட மரண தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமாக உள்ளது. சவுதி அரேபியா உண்மையில் ஒவ்வொரு வருடமும் அதிகமான மரண தண்டனைகளை விதிக்கும் அரசாக உள்ளது[94].சில அடிப்படை உரிமைகள் விசேடமாக புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பானவைகள் இலங்கை ஒரு அனுப்பும் நாடு என்ற வகையில் தேசிய சட்டவாக்கத்திற்குள்ளும் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இருதலைப்பட்ச ஒப்பந்தங்களுக்குள்ளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவையாக உள்ளது. உதாரணத்திற்கு சித்திரவதைக்கோ, கொடூரத்தனத்திற்கோ, மனித நேயமற்றவைகளுக்கோ அல்லது கீழ்நிலையான நடத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ[95] இவர்கள் உள்ளாக்கப்படக்கூடாது. மற்றும் எந்த சட்டரீதியான தொழிலைச் செய்வதற்குமான சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம்[96] இவர்களுக்கு உண்டு.

சட்டத்திற்கு முன்னாலே சமத்துவம், பாரபட்சமின்மை, ஒன்றுகூடல் சுதந்திரம், சங்கங்களில் சேருவதற்கான சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமைகளும் அரசுகளுக்கிடையிலான மட்டத்தில் தீர்க்கப்படவேண்டிய தேவையுள்ளது. புலம்பெயர் பெண் வீட்டுப் பணியாளர்கள் குறிப்பாக இவ் உரிமைகள் முற்று முழுதாக மறுக்கப்பட்ட நிலையில் துன்புறுகிறார்கள். அடிப்படை மனித உரிமைகள் அதிகாரத்தின் ஒரு பகுதியல்லாத சரத்து 88 ஆனது எவ்வாறாயினும்

---

92 புலன்குளம எதிர் கைத ' தொழில ' அபிவிருத ' தி அமைச ' சர் SC (FR) விண்ணப்ப இல.884/99, Sri. LR. 243 ,பக்கம்.258 - http://www.lawnet.lk/docs/articles/sri_lankan/HTML/CV45.html, கொட்டபடு தாரகே சிறியாணி சில்வா எதிர் சானக்க இதமல்கொட SC (FR) விண்ணப்ப இல 471/2000 - www.alrc.net/doc/mainfile.php/supremecourtcases/224/ , லாமா ஹேவகே லால் எதிர் பொறுப்பதிகாரி, சிறு குற்றங்கள், சீதுவை பொலிஸ் நிலையம், SC(FR) விண்ணப்ப இல. 700/2002 – http://www.ruleoflawsrilanka.org

93 றிசானா நவீக்கின் சம்பவம் குழந்தைக்கு பால் கொடுக்கும்பொழுது அக் கைக்குழந்தை மூச்சு திணறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட குழந்தைப் பராமரிப்பாளராகிய இலங்கையைச் சேர்ந்த 17 வயதுப் பெண். அவளது தலையை வெட்டி மரண தண்டனை வழங்க சவுதிய நீதிமன்றம் அச்சந்தர்ப்பத்தில் தீர்ப்பளித்தது.

94 'Amnesty Fights for Rizana', *Daily Mirror* Online, 02 November 2010, http://www.dailymirror.lk/index.php/news/7399-amnesty-fights-for-rizana.html

95 உறுப்புரை 11 இலங்கை அரசியலமைப்பு 1978

96 உறுப்புரை 14 இலங்கை அரசியலமைப்பு 1978

ஒரு அரசியலமைப்பு உரிமையாக இருந்து அரச அலுவல்களில் பிரஜைகள் ஈடுபடுவதையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகவோ பிரசைகள் அரசியலில் அலுவல்களில் ஈடுபடுவதை அனுமதிக்கிறது. தற்காலிகமாக வெளிநாட்டில் வதிவோரை இவ்வாறு பங்குபற்றச் செய்வதில் எந்தவித தடையேற்பாடுகளும் இல்லை.வெளிநாட்டில் வேலை செய்வோர் தமது வாக்குகளை அளிக்க அனுமதிக்கப்பட வேண்டும். நாட்டின் தற்போதைய சனத்தொகையில் கிட்டத்தட்ட பத்திலொரு பங்கினர் வெளிநாடுகளில் வேலை பெற்றிருந்தாலும், இலங்கையானது வெளிநாட்டில் வாக்களிக்கும் ஏற்பாடுகளை இனிமேல் தான் நிறுவ வேண்டியுள்ளது. 1980 களில் இலங்கையானது ICCPR ஒப்பந்தத்துடன் கைச்சாத்திட்டு இணங்கியதன் ஊடாக இத் தொழிலாளர்களுக்கு மேலதிக உரிமைகள் கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்டிருக்கிறது. சரத்து 8 ஆனது அடிமைத்தனம், கட்டாயமான அல்லது நிர்ப்பந்த வேலையைத் தடைசெய்கின்றது. ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகளில்[97] பொதுவாக இருப்பது ஊதியம் கொடுக்கப்படாமையும், அடிமை போன்ற நிலையும் மற்றும் துஷ்பிரயோகமான வேலை நிலைமைகளும் ஆகும்.

## CEDAW வும் பெண்கள் சாசனமும்

பெண்களுக்கு எதிரான கடுமையான பாரபட்சம் ஆனது தொடர்ந்து இருக்கிறது என்றும், பாரபட்சமானது சம உரிமைக் கொள்கையையும் மனித கௌரவத்திற்கான[98] மரியாதையையும் மீறுகிறது எனவும் சீடா எடுத்தியம்புகிறது. உறுப்பு நாடுகளுக்கென கடுமையான சட்ட நியமங்களை உருவாக்குவதின் ஊடாக அவ்வகையான பாரபட்சங்களை இல்லாதொழிக்க அது முற்படுகின்றது. 1993 ஆம் ஆண்டு பெண்கள் சாசனத்தின் ஊடாக சீடாவின் சில ஏற்பாடுகளை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது. உறுப்புரை 12(2) இல் பெண் புலம்பெயர் தொழிலாளிகளை சாசனம் நேரடியாக விழிக்கிறது. இருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் ஊடாக பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் விருப்புக்கள் நாட்டுக்குள்ளும், பணியாற்றச் செல்லும் நாட்டிலும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உரிய எல்லா ஏற்பாடுகளும் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. அத்துடன், அரசானது பெண்களின் பொருளாதார, சமூக, கலாச்சார பங்களிப்பை பிரதிபலித்துக் காட்டுவதற்காக, கிடைக்கக்கூடியதாக இருக்கும் வகைப்படுத்தக்கூடிய தரவுகளைச் சேகரித்து, பால்நிலை ரீதியாக வகைப்படுத்தி தரவுகளை அமைத்துக்கொள்ளுமாறும் வேண்டி நிற்கிறது.

---

97 SLBFE வருடாந்த புள்ளிவிபர அறிக்கை 2008 மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுடனான நேர்காணல்கள்

98 சீடோவின் முன்னுரை

புலம்பெயர் செயன்முறைக்குள் பெரிய பிரச்சினைக்குரிய விடயமாக உள்ள எல்ல வடிவங்களிலுமான சுரண்டல்கள், கடத்தல்கள் மற்றும் பெண்களை பிழையாக நடத்துதல் என்பவற்றை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை அரசுகள் எடுக்கும்படி 14 வது சரத்து வேண்டி நிற்கிறது.வேலையிடங்களிலும், குடும்பத்திலும், தடுத்து வைத்திருக்கப்படும் இடங்களிலும் பால்நிலை ரீதியிலான வன்முறைகளைத் தடுப்பதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளை எடுக்கும்படியும் அரசுகள் கேட்கப்படுகின்றன. பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் தொந்தரவு, உடல், உளவியல் துஷ்பிரயோகம், சித்திரவதை, கொடூரத்தன்மை, மனிதத்தன்மையற்ற அல்லது கீழ்நிலையான நடத்தை[99] என்பவற்றையெல்லாம் இது உள்ளடக்கியுள்ளது. விட்டுச் செல்லப்படும் பெண் பிள்ளைகள் மட்டிலும் இந்த ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படக்கூடியனவாக உள்ளன.வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள ஆலோசனையளித்து ஆதரவளிக்கும் அசாநிகள் மற்றும் ஏனைய சனசமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு அரசு ஆதரவளிக்க வேண்டும் என்பதும் குறிப்பாக சுவாரசியம் மிக்க ஏற்பாடாகும். அரசாங்கம் மற்றும் பங்காண்மையாளர்களின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்பட்ட தேசியக் கொள்கையானது இந்த இணைப்பை மேலும் வலுவாக்கிக் கொள்ளும்.

## பிள்ளைகள் உரிமைகள் சமவாயம்

1991 ஆம் ஆண்டில் இது உத்தியோகபூர்வ ரீதியாக இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 2004-2008 ஆண்டு சிறுவருக்கான தேசிய செயற்திட்டம் அதனுடைய இலக்குகளை சாதிப்பதற்காக வடிமைக்கப்பட்டது. இக் குழந்தைகள் உரிமைகள் சமவாயமானது குழந்தைகளின் நலனுடன்[100] ஈடுபடுவதுடன், பெற்றோர்களுக்கு[101] உதவி வழங்குவதையும், பிழையான நடத்தைகளையும் துஷ்பிரயோகத்தையும்[102] தடுப்பதையும் சமூகப் பாதுகாப்பை[103] வழங்குவதையும், இது அரசின் கடமையாக்குகின்றது. உறுப்புரை 34 ஆனது பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திலிருந்து விடுவிக்கப்படுவது குழந்தையின் உரிமை என தெரிவிக்கின்றது. கல்வி,[104] சுகாதாரம், குழந்தைப் பாதுகாப்பு, குழந்தை வேலை என்பவற்றில் தேசிய செயற்திட்டம் என்பவற்றில் கவனம் குவிக்கின்றது. புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளின் தேவைகளானவைகள் குழந்தைப் பாதுகாப்பு என்ற விடயத்தின் கீழ் அழுத்தம் கொடுத்து காட்டப்படுகின்றது.

---

[99] உறுப்புரை 16 மேலே சொல்லப்பட்டது
[100] உறுப்புரை 3 CRC
[101] உறுப்புரை 18, 23 மற்றும் 27 CRC
[102] உறுப்புரை 19 மேலே சொல்லப்பட்டது
[103] உறுப்புரை 26 CRC
[104] உறுப்புரை 28 மேலே சொல்லப்பட்டது

குழந்தைகள் பாதுகாப்பு என்ற இலக்கின் கீழே புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான பாதுகாப்பான சுகாதாரமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கும் அவர்களுக்குப் போதிய கவனத்தை உறுதிப்படுத்துவதற்கும் என இத்திட்டம் 25 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. ஆனாலும் அவர்களின் கல்வியினையும் உளசமூக ஆதரவையும் கண்காணிப்பதையும் இதிலே உள்ளடக்க வேண்டும்.இலங்கை வெளிநாட்டு பணியகமானது, புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களையும், பணரீதியான விருதுகளையும், போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்களையும், பெண் பிள்ளைகளுக்கான விடுதி வசதிகளை கரந்தெனியாவிலும்,[105] குழந்தைகள் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து வழங்குவதற்கான கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.குழந்தைகள் உரிமைகள் மீதான ஐநா குழுவானது CRC சீர்திருத்தத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதை பாராட்டினாலும், புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களானவைகள், குழந்தைகளை வளர்ப்பது பற்றிப் பெற்றுக்கொள்ளும் சிறிய உதவி குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

## 2006 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவை திருத்தச்சட்டம்

மனிதர்களை கடத்திச் செல்லும் விடயங்களை தீர்ப்பதற்கு என விசேடமாக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. சரத்து 360 ஆனது கடத்திச் செல்லல் குற்றம் குறித்த விரிவான வரைவிலக்கணம் ஒன்றைத் தருகிறது. எந்த ஆளையும் வாங்குதல், விற்றல், பண்டமாற்றம் செய்தல் அல்லது பணத்திற்காக அல்லது வேறு ஏதும் நோக்கத்திற்காக வேறு ஒருவரை அவ்வாறு செய்யுமாறு நிர்ப்பந்தித்தல், அதுமட்டுமன்றி ஆட்சேர்த்தல், கொண்டு செல்லல், வைத்திருத்தல் அல்லது கட்டாய வேலை பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது பாலியல் துஸ்பிரயோகத்திற்காகவோ பலவந்தமாகக் கடத்துவதற்குப் பிறரை அச்சுறுத்தி கட்டாயப்படுத்தி அல்லது ஏமாற்றி பயன்படுத்துவதும் பலவந்தமாக கடத்திச் செல்லல் என்ற பகுதிக்குள் வரும்.[106]கட்டாயமாக கடத்திச் செல்லல் குற்றம் காணப்படும் எந்த ஒருவரும் இரண்டு வருடத்திற்கு குறையாததும், 20 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத் தண்டனையும், தண்டத்தையும் அனுபவிக்க வேண்டி வரும். பாதிக்கப்பட்டவர் 18 வயதிற்கு குறைந்தவராக இருந்தால் தண்டனை 3 வருடங்களுக்கு குறையாததாகவும், 20

---

105 மல்சிறி டயஸ்,(2000). Problems of Children of Migrant Workers. Paper presented at SAARC Regional workshop on children of the SAARC Region with special focus on the impact of the SAARC on the girl child, organized by Colombo YWCA, 6th-8th June 2001. (on file at the Centre for Women's Research library in Colombo)

106 உறுப்புரை 26 (1) தண்டனைச் (திருத்த) சட்டக் இல 16 2006

ஆண்டுகளுக்கு அதிகரிக்காததாகவும் இருக்கும்.[107]

ஆனாலும் இந் ஏற்பாடுகளானவை புலம்பெயர் தொழிலாளர்களின் சட்டவாக்கம் தேசிய கொள்கைகள், மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும், இருதலைப்பட்ச ஒப்பந்தங்களிலும் செல்லும் நாடுகளுடனும், நேரடியாக பிரயோகப்படுத்திக் கொள்வதற்காக ஒன்றிணைக்கப்பட வேண்டியதாக உள்ளது.

## சர்வதேச மற்றும் தேசிய சட்டவாக்கங்களின் சுருக்கம்

2000 ஆம் ஆண்டு அரசானது நிலைமாற்றத் திட்டமிடப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐநா சமவாயம், 1963 ஆம் ஆண்டு தூதரலாய உறவுகள் மீதான உயர் சமவாயம், 1957 ஆம் ஆண்டு 105 ஆம் இலக்க கட்டாய வேலையை[108] இல்லாதொழிப்பது மீதான ILO சமவாயம் என்பவற்றை ஏற்று இணங்கியிருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். ஆயினும் ILO சமவாயங்களான சமவாய இலக்கம் 97, சமவாய இலக்கம் 143 என்பவைகளை அரசு ஏற்று இணங்கி அங்கீகரிக்காதது கவலையளிக்கத்தக்கது. அரசானது ஆட்களை விசேடமாக பெண்களையும், குழந்தைகளையும் ஆட்கடத்துபவர்களைத் தடுத்தல், கட்டுப்பாடுகளை இறுக்குதல் மற்றும் தண்டித்தல், என்பன தொடர்பான மரபொழுங்குகளில் கைச்சாத்திட்டிருந்தாலும், அவைகளுடன் உத்தியோகபூர்வ ரீதியாக இன்னும் இணங்கிக்கொள்ளவில்லை. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டமானது, பொருளாதார புலம்பெயர்வின் அளவும், பரிணாமமும் தற்போது நிலவுவதை விட பெருமளவில் வேறுபட்டதாகிய காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

அதன்விளைவாக அது இன்றைய புலம்பெயர் தொழிலாளர்களுக்கான போதிய பாதுகாப்பை வழங்காது, அவர்களுக்கான சிறியளவிலான பரிசீலிப்பினை செய்தது. இலங்கை அரசாங்கமானது, புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை அழுத்தியுரைக்கும் சர்வதேச சமவாயங்களுடன் இணங்கிப் போவதற்கு சம்மதம் அளித்து, திறன் மிகுந்த பொருளாதார ரீதியான புலம்பெயர்தலை ஊக்குவிக்கின்ற மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் தேசியக் கொள்கையை முன்மொழிந்தது. துரதிஷ்டவசமாக அதனை நடைமுறைப்படுத்துவதில் சிறிதளவு முன்னேற்றமே ஏற்பட்டது. தற்போதுள்ள சட்டங்களின் அமைப்புக்களில் இல்லாத பகுதிகளில், பிலிப்பைன்ஸ்போன்ற நாடுகளில் பிரதேச ரீதியாக புலம்பெயர் தொழிலாளர் சட்டம் எனப் போற்றப்படும் சட்டங்களை பரிசீலனைக்கெடுத்து, அவற்றால் நிரப்பப்பட வேண்டும்.

---

[107] உறுப்புரை 360 மேலே சொல்லப்பட்டது

[108] எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான குழுவின் முடிவான அவதானிப்புக்கள்

பின்வருவன அரச கொள்கைகளை ஒழுங்குபடுத்தும், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முகவர்கள் மற்றும் சேவைகள் போன்ற இலங்கையை சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கு பிரயோகிக்கக்கூடியது போன்ற, பிலிப்பினோ சட்டங்களின் சில ஏற்பாடுகளை பின்வருவன மீள்பார்வை செய்கின்றது.

## 1995 ஆம் ஆண்டு புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு பிலிப்பினோக்கள் சட்டம் (குடியரசு சட்ட இலக்கம் 8042)

பிரிவு 2, கொள்கைகளை பிரகடனம் செய்தல்: வெளிநாட்டு வேலைவாய்ப்பானது பொருளாதார வளர்ச்சியையும், தேசிய அபிவிருத்தியையும் நீடித்து நிலைக்கச் செய்யும் ஒரு வழியாக ஊக்குவிக்கப்படாமல் இருப்பதுடன், உள்ளூர் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை[109] தொடர்ந்து உருவாக்குவதை அரசாங்கம்[110] பொறுப்பெடுக்க வேண்டும். வெளிநாட்டுச் சந்தையுடன் போட்டியிடக்கூடியவாறான உள்ளூர் வேலைச் சந்தையை விருத்தி செய்வதற்கான பொறுப்பை அரசு மீது சுமத்துகின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டமானது எந்த நேரத்திலும், இத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள், தொழிலாளர்களின் கௌரவத்தையும் அடிப்படை உரிமைகளையும் எந்தநேரத்திலும் விட்டுக்கொடுக்க மாட்டாது என்ற உறுதியின் மீது மாத்திரமே தங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஜனநாயகத் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையில் எல்லா வெளிநாட்டிலுள்ள பிலிப்பினோக்களும் பங்குபற்றுவதற்கான உரிமையானது அரசால் உத்தரவாதப்படுத்தப்படுகிறது.[111] இதோடு ஒப்பிட்டு பார்க்கும்பொழுது வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கான வாக்குரிமையானது இன்னும் கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இது புலம்பெயர் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் உரிய வேலைவாய்ப்பு நிறுவனங்களில் இருப்பதை உத்தரவாதப்படுத்துகின்றது.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், தொடர்புடைய அமைப்புக்களின்[112] உள்ளீடுகளுக்கான அடிப்படைகளை, பால்நிலை தொடர்பான விடய அறிவு அளவுகோல்கள் உருவாக்கிக் கொள்ளும். இது பெண் தொழிலாளர்களால் வழங்கப்பட்ட பொருளாதார பங்களிப்புகளுக்கும், அவர்கள் எதிர்கொள்ளும் பால்நிலைசார்ந்த விசேடித்த பிரச்சினைகளுக்கும் கூடிய அங்கீகரிப்பு

[109] பிலிப்பினோக்கள் சட்டம் 2 (சி) யைப் பார்க்கவும்

[110] மஸ்னாவி நூரா Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Phillipines. LST Review,.தொகுப்பு 14 ஜுலை 2004 பக்3

[111] பிரிவு 2(க) பிலிப்பினோ சட்டம்

[112] பிரிவு 2(ன) பிலிப்பினோ சட்டம்

அளித்து ஏற்றுக் கொள்ளும்.ஆட்சேர்ப்பு, அறிமுகம், ஒரு இடத்தில் வைத்தல், நியமனம், குழந்தைகள் தொழிலாளர்களுக்கான உதவிகள் என்பவற்றை அரசு பொறுப்பெடுத்துக் கொள்வதுடன், இவைகள் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உதவிகள், அரச கட்டணங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள்[113] இல்லாது கொடுக்கப்படும். பிரிவு 4 இன் கீழ், புலம்பெயர் தொழிலாளர்களை, பிலிப்பினோ தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்[114] நாடுகளில் மாத்திரமே அரசானது தொழிலாளர்களை வேலையில் பயன்படுத்திக் கொள்ளும். வேலைக்குச் செல்லும் நாடுகளில் தற்போதுள்ள தொழிற்சட்டங்கள் சம்பந்தமாகவும், அவர்கள் சமவாயங்கள் இருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் என்பவற்றில் கைச்சாத்திட்டவர்களா என்பதையும், இந்த அரசுகள், புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக, அவர்களின் பாதுகாப்பு நலனோம்பல் உத்தரவாதமாக எடுக்கப்பட்ட சாதக ஏற்பாடுகள் குறித்தும் கருத்துச் செலுத்தும்.

பிரிவு 8 ஆனது எந்தத் திணைக்களத்திலோ அல்லது நிர்வாகத்திலோ உள்ள அதிகாரியோ அல்லது வேலை செய்பவரோ புலம்பெயர் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்க்கும் வர்த்தகத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடுவதைத் தடைசெய்கிறது. இருந்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சபையானது 4 வெளிநாட்டு பிரதிநிதிகளை உள்ளடக்கி வைத்திருக்கிறது. ஆனால் இது தொழிற்சங்கங்களையோ அல்லது புலம்பெயர் தொழிலாளர்களின் பிரதிநிதிகளையோ உள்ளடக்கவில்லை.[115]

திரும்பி வரும் பிலிப்பினோ புலம்பெயர் தொழிலாளர்களுக்காக மீள வைத்தல் மற்றும் கண்காணித்தல் நிலையம் ஒன்றை அரசு நிறுவிக்கொள்ளும். அது சமூகத்தில் மீள இணைவதற்கான பொறிமுறையை வழங்குவதுடன், உள்ளூர் வேலைவாய்ப்பும், தேசிய அபிவிருத்திக்குமான[116] அவர்களது ஆற்றல்களையும் கண்டறிந்து கொள்ளும். இலங்கையிலே இற்றைவரைக்கும் இவ்வாறு திரும்பி வருபவர்களை மீள இணைப்பதற்கான எந்தக் கண்காணிப்பு நிலையமும் இல்லை. (இது இலங்கை வெளிநாட்டு பணியகத்தால் கவனிக்கப்பட்டாலும்)

---

113 பிரிவு 2(ை) பிலிப்பினோ சட்டம்

114 The State ensures this protection through articulating 4 measures by which the Host country can guarantee the MW's welfare and safety. This enables the Filipino government to hold the Host country responsible: Masnavi, Nura (2004). Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Phillipines. LST Review. தொகுப்பு 14 ஜுலை 2004 பக்.13

115 ஸ்னாவி நூரா Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Phillipines. LST Review. தொகுப்பு 14 ஜுலை 2004 பக்3

116 பிரிவு 17 பிலிப்பினோ சட்டம்

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளின்[117] நலனோம்பல் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய அரசு முகவர்களின் வகிபங்குகளின் வரைவிலக்கணம் என்பது இன்னொரு மிக முக்கியமான ஏற்பாடாகும். இலங்கை தேசியக் கொள்கைகளின் கீழ் அவ்வாறான ஒரு வரைவிலக்கணம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்தாலும், பொறுப்புள்ள பொதுவான விடயங்கள் அரச முகவர்களின் ஆட்சி மற்றும் அரச முகவர்களின் பார்வைக்குள் வராதவைகள் இன்னும் மதிப்பீடு செய்யப்பட்டு இலக்கணப்படுத்தப்பட வேண்டியனவாக உள்ளன. ஒரு விசேடித்த உதாரணமாக இலங்கை அரசாங்கமானது, ஆட்களை பலவந்தமாகக் கொண்டு செல்வதை இன்றும் போதியளவில் வரைவிலக்கணம் செய்யாமல் அதனை சட்டத்திற்கு எதிரான ஆட்சேர்ப்பு[118] என்று குறித்து வருகிறது. அது துலாம்பரமாக வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், இருதலைப்பட்ச ஒப்பந்தங்களும்

பல்வேறுபட்ட வேலைக்குச் செல்லும் நாடுகளுக்கிடையிலே தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் குறித்து சில புரிந்துணர்வுகளைக் கொண்டிருப்பது இந்தக் கட்டத்தில் முக்கியமானது. புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது, தொடர்பில் அல்லது வேறு ஏதும் ஒப்பந்தத்தில் நுழைய திட்டமிடும் தரப்புகளுக்கிடையிலான ஆரம்ப கட்ட புரிந்துணர்வோடு தொடர்புடைய ஆவணம் ஆகும். இது கட்டுப்படுத்துதல்[119] என்ற அர்த்தத்தைக் கொள்ளாது. இருதலைப்பட்ச ஒப்பந்தம் எனப்படுவது அமுல்படுத்தக்கூடிய சட்டத்தால் அங்கீகரிக்கூடிய கடப்பாடுகளை உருவாக்குகின்ற இருதரப்பிற்கு இடையிலான ஒரு ஒப்பந்தம் ஆகும்.[120]

இலங்கையானது ஜோர்தான், கட்டார், சவுதி அரேபியா, தென்கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. லெபனானுடன் தற்போது இருதலைப்பட்ச ஒப்பந்தம் ஒன்றிற்காக கலந்துரையாடல் நடைபெறுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஒத்துப்போகாத நிலைமைகளில் சட்டரீதியாக இருப்பதால் போதிய பாதுகாப்பை அவைகள் வழங்குவதில்லை. துரதிஷ்டவசமாக வேலைக்குச் செல்லும் நாடுகளுடனான தற்போதைய ஒப்பந்தங்கள் யாவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வடிவிலேயே உள்ளன.

---

117 பிரிவு 23 பிலிப்பினோ சட்டம்

118 மஸ்னாவி நூரா Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Phillipines. LST Review. தொகுப்பு 14 ஜுலை 2004 பக் 6

119 Black's Law Dictionary (2004), Eighth Edition, Garner A. Bryan (Ed), West, USA,

120 Black's Law Dictionary (2004), Eighth Edition, Garner A. Bryan (Ed), West, USA,

இதிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்களானவைகள் புலம்பெயர் தொழிலாளர்களின் சமவாயத்திற்கு முரணானதான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலே 2006 ஆண்டு ஜூனில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது அவ்வாறான பல ஒப்பந்தங்களைக்[121] கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு உறுப்புரை 6 வேலை வாங்குபவரின் கடவுச்சீட்டை தனது பாதுகாப்பில் வைத்திருப்பதற்கும் தொழிலாளி தப்பிச் செல்லும் நிலையில் அதனை உயர்ஸ்தானிகராலயத்தில் கையளிப்பதற்கும் அனுமதியளிக்கின்றது. இது எல்லாத் தொழிலாளர்களினதும் சுதந்திர நடமாட்ட உரிமை மீதான புலம்பெயர் தொழிலாளர் சமவாயத்தின் உறுப்புரை 39(1) யை மீறுகின்றது. ஆகவே தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டியனவாக உள்ளன.

## ALFEA மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள்

மத்திய கிழக்கை மையமாகக் கொண்ட புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் எண்ணிக்கையும் 1985 இல் 129 ஆக இருந்தது, 2008 இல் 626[122] ஆக அதிகரித்தது. திறனற்ற பெருமளவிலான தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளுவதில் மூன்றாந்தரப்பினரின் தலையீட்டை வேண்டி நின்றமையே இதற்குக் காரணமாக இருந்தது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சயிலொக் பாணியிலான பேரைப் பேற்றிருந்தார்கள். மோசடி முதல் ஆட்களை கடத்திச் செல்லல் வரையிலான பலவகையிலான குற்றசாட்டுக்கள்[123] அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. கப்பம் பெறுதல், தவறான செய்திகளைப் பரப்புதல், பிழையான தரவுகளைக் கொடுத்தல், உண்மையிலே இல்லாத வேலை நிலைமைகளையும், உத்தரவாதங்களையும் வழங்குதல், வெளிநாட்டுக் கரைகளிலே தொழிலாளர்களை கைவிட்டு விடுதல், குறைந்த வயதுடைய ஆட்கள் மற்றும் பெண்களைக் கடத்திச் செல்லல் என்பனவே மிகவும்

---

[121] Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo, http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

[122] Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo, http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

[123] Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in Saudi Arabia, Kuwait, Lebanon, and the United Arab Emirates, p.31-37, http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

பொதுவான குற்றச்சாட்டுகளாகும். புலம்பெயர் செயன்முறையில் மிக முக்கியமாக இருந்த உப முகவர்களை இதுவரை பதிவு செய்யும்படி கேட்கப்படவில்லை என்பது கவலைக்குரிய பிரதான காரணமாக உள்ளது. அவர்கள் SLBFE, ALFEA அல்லது வேறு ஏதும் பதிவுசெய்யப்பட்ட FEA[124] க்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அல்லர். சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளை அறிந்திருந்தாலும் கூட இலங்கை அரசாங்கமானது நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக உள்ளது. இத் தொழிலாளர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது சம்பந்தமான அறிக்கைகளுக்கு சாதகமான பதிற்செயற்பாடாக இலங்கை அரசாங்கமானது, இறுக்கமான சட்டவாக்கங்கள்[125] மற்றும் ஒழுக்காற்றுச் சட்டகவேலை ஊடாக இம் முகவர்களை ஒழுங்குபடுத்திக் கண்காணிக்க முயற்சிக்கிறது. வேலைக்கட்டளைக்கான SLBFE யின் அங்கீகாரம் எல்லாம் கிடைக்கக்கூடிய புலம்பெயர் தொழிலாளர்களையும் SLBFE யில் பதிவு செய்தல், போவதற்கு முன்பான மருத்துவபரிசோதனைகள் மத்திய கிழக்கிற்குச்[126] செல்லும் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கான புறப்படுகைக்கு முன்பான SLFBE யின் 15 நாள் பயிற்சி என்பன இவைகளுள் அடங்கும். ஆனாலும் அவர்களால் பரப்படும் தகவல்களுக்கும், பணியகத்தால்[127] அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தத்திற்கும் இடையேயும், உண்மையான வேலை நியமத்திற்கிடையேயும் பெரிய வேறுபாடுகள் இன்னும் தொடர்கின்றன. உப முகவர்களை ஒழுங்குபடுத்தவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இன்னும் போதாதனவாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ALFEA யின் கட்டாய அங்கத்துவத்தின் ஊடாக வேலைவாய்ப்பு முகவர்களின் ஒழுக்கத்தை ஒழுங்கு செய்து கண்காணிப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டமானது ALFEA யை நிறுவியது. ஆனாலும் கட்டாய பதிவுக்கு[128] காலக்கிரமத்திலே ஏற்பட்ட மாற்றங்களானவைகள் அதனது ஒழுக்க கட்டுப்பாட்டு[129] அதிகாரங்களைக் குறைத்து விட்டன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வர்த்தகத்தில் சிறந்த அறப்பழக்கங்களை உறுதிப்படுத்தி ஊக்குவிப்பதை ALFEA இலக்காகக் கொண்டுள்ளது. இம் முயற்சியில் இது நிரலிடப்பட்ட முகவர்கள் மற்றும் வேலைவழங்குனர்களின் நிரல் கொண்ட ஒரு இணையத்தளத்தை இது நிர்வகிக்கின்றது.

---

124 ALFEA பணியாட்டொகுதியினருடனான நேர்காணல்

125 SLBFE சட்ட இலக்கம் 21 1985 மற்றும் இவெவே திருத்தச் சட்ட இல 4 1994

126 வெளிநாட்டில் முன் வேலை அனுபவம் இல்லாதோருக்கானது

127 உறுப்புரை 37-39 SLBFE சட்ட இல 21 1985

128 மேலே சொல்லப்பட்டவாறு SLBFE திருத்தச் சட்ட இல 4 1994 ஐப் பார்க்கவும்

129 ALFEA பணியாட்டொகுதியினருடனான நேர்காணல்

அத்துடன் வேலைவங்கி, உரிமம் உள்ள முகவர்களின் விபரங்கள், பங்காண்மையாளர் இணையத்தளங்களுக்கான இணைப்புக்களையும் அவ் இணையத்தளம் கொண்டிருக்கிறது. இந் நிறுவனமானது ஒரு முகவர்களுக்கான ஒரு சபையாகவும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பொறிமுறையாகவும், முகவர்களுக்கும் இலங்கை வெளிநாட்டு பணியகத்திற்கு இடையிலான ஒரு ஒருங்கிணைப்பாளராகவும், தொடர்ந்து இருப்பது முக்கியமானதாகும். சட்டவாக்கத்திலுள்ள மேற்படி மாற்றங்களானவை இந்த பணியை மிகவும் கடினமாக்கியுள்ளது.

## SLBFE கருத்திட்டங்கள்

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இப்பணியகமானது பல கருத்திட்டங்களையும் சேவைகளையும் புலம்பெயர் தொழிலாளர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும், திரும்பி வரும் புலம்பெயர்வாளர்களுக்காகவும் ஆரம்பித்துள்ளது. காப்புறுதித் திட்டங்கள், புறப்படுவதற்கு முன்பான வீடு மற்றும் சுயவேலைவாய்ப்பு கடன்திட்டங்கள், புலம்பெயர் தொழிலாளரின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் நிதியுதவிகள் திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நலனோம்பல் நிலையங்கள், திறன் பயிற்சிகள் என்பன இச் சேவைகளுள் உள்ளடங்குகின்றன.

ஆயினும் புலம்பெயர் தொழிலாளர்களிடையே இந்த நன்மைகள் குறித்து அறிவு போதியதாக இல்லாதிருக்கின்றது. அத்துடன் திட்டங்களுக்குள்ளே உள்ள முரண்பாடுகள் அவைகளின் வினைத்திறன் சக்தியை கெடுத்துவிடுகின்றன. காப்புறுதித் திட்டமானது ஊதியம் செலுத்தாதுபோதல் என்ற மிகவும் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினையை[130] உள்ளடக்கியிருக்கவில்லை. வீட்டுக்கடன்களானவைகள் வதியாதோர் நிதிக் கணக்கிலே 6 மாதங்களுக்கு 500 டொலர்களை[131] நிலுவையாக பேணுபவர்களுக்கே கிடைக்கக்கூடியதாக இருக்கும். இது அநேகமான புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முடியாததொன்றாக உள்ளது. புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய பரீட்சைக்கு 3 வருடங்களுக்கு முன்பதாகவே பிள்ளைகள் பதிவு செய்ய வேண்டிய தேவையுள்ளது. இது ஒரு முன் வேண்டுகோளாக இருப்பதுடன், பெரிய திட்டமிடலும் தவற விடப்படாத நேரக் குறிப்பும் தேவையாக உள்ளது. வீட்டுப் பணிப்பெண்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆற்றல்களைக் கொடுத்து பெரிய உயரளவிலான வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்து விடாது. அதேநேரம் ஒரு வீச்சான நன்மைகள் கிடைக்கக்கூடியதான அதற்கான வழிகள்

130 2009 ஆம் ஆண்டுக்கான நலனோம்பல் மீதான SLBFEவின் துண்டுப்பிரசுரங்கள்

131 135 மக்கள் வங்கி $770 மிகுதியை பேணி நிற்கிறது

அடைக்கப்படுகின்றன. உள்ளடக்கப்படும் சேவைகள்:

- பிணக்குத் தீர்ப்பு - வெளிநாட்டிலே எழும் வேலைவாய்ப்பு பிணக்குகளை தீர்த்து வைக்கும் தூதரகங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் பணியகம் வேண்டப்படுகின்றது.[132]

- சர்வதேச உறவுகள் - பிரச்சினைகளை சுலபமாகத் தீர்த்துக்கொள்ளும் முகமாக தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களின் உறவுகளை உயர்த்துதல்.[133]

தொழிலாளர்கள் அவர்கள் திருப்பி வருவதற்கு முன்பதாக தூதரகங்களிலோ அல்லது புகலிடங்களில் விடப்பட்டு, மாதக்கணக்காக விரும்பத்தக்காத சூழ்நிலைகளில் எல்லாவிதமான துன்பங்களுக்கும் ஆளாகிறார்கள்.[134]

### பயன்படுத்தப்பட்டவைகள் மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டவைகள்

2010.5.7 அன்று நேர்காணல் செய்யப்பட்டது.

எஸ் சுமனலதா[135] என்கின்ற 32 வயது புலம்பெயர்ந்த தொழிலாளி தனது கணவரையும் இரண்டு வயது மகளையும் விட்டு விட்டு 2002 நொவம்பரில் குவைத்திற்கு சென்றாள். அவள் ஒரு வீட்டில் 5 மாதங்களாக பணிப்பெண்ணாக பணிபுரிந்தாள். அவளுக்கு ஊதியம் எதுவும் கொடுக்கப்படவில்லை. அந்த வீட்டில் 19 உறுப்பினர்கள் இருந்தனர். அவள் அடிக்கடி தாக்கப்பட்டாள். 24 மணித்தியாலத்தில் அவள் எந்தநேரமும் அழைக்கப்படுவாள். குழந்தையைப் பராமரித்தல், சமைத்தல், துப்பரவு செய்தல் போன்ற வேலைகளால் குவிக்கப்பட்டாள். அவளுக்கு வேலை வழங்கியவர்கள் சம்பளம் கொடுக்க மறுத்ததால் அவள் அங்கிருந்து தப்பி இலங்கை தூதரகத்திற்குச் சென்றாள். அங்கே நூற்றுக்கணக்கான பெண்களைக் கண்டாள். அவர்களும் பணம் கொடுக்கப்படாது, துஸ்பிரயோகம் செய்யப்பட்டவர்களாக திரும்பிச் செல்வதற்காக காத்திருந்தார்கள். அங்கிருந்த புலம்பெயர்ந்தவர்களுடன் சுமனலதா திரும்பிச் செல்வதற்காக காத்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டாள். ஒருமாதம் வரையில் பலவந்தமாக காத்திருக்கச் செய்யப்பட்டாள். அவள் வைத்திருந்த 34 தினார்களையும் விமானச் சீட்டுக்கு செலுத்துவதற்காக தூ தராலயம் எடுத்து விட்டது. அவளுடைய சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு எந்த முயற்சியும் செய்யப்பட்டவில்லை.

---

132 SLBFE இணையத்தளம் http://www.slbfe.lk/article.php?article=28

133 SLBFE இணையத்தளம் http://www.slbfe.lk/article.php?article=28

134 புலம்பெயர் தொழிலாளர்களுடனான நேர்காணல்

135 பெயர் மாற்றப்பட்டுள்ளது

- தகவல் அளித்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்: பிரதேச செயலகங்கள் ஊடாக புலம்பெயர்தல் தொடர்பான தலைப்புக்களில் தகவல்களை சுற்றறிக்கை செய்வதற்கான ஒரு முறைமை முயற்சிக்கப்பட்டது. ஆனாலும் பல்வேறுபட்ட அரச முகவர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பின்மையானது தொடர்பாடல் பாய்ச்சலில் ஒரு முறிவை ஏற்படுத்தியுள்ளது.

SLFBE ஆனது திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்கள்[136] தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கும் அவர்களுக்கு உதவுவதற்குமாக ஒரு மீள ஒன்றிணைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அவர்கள் அரசாங்க முகவர்களுடன், வங்கிகளுடன் அசாநிகளுடனும் ஒன்றிணைந்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு நிதியுதவிகள் மற்றும் திறன் பயிற்சிகளை வழங்குவதற்கு எண்ணியுள்ளார்கள். கடந்த 3 வருடங்களுக்குள் திரும்பி வந்தவர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு அவர்களுடைய திறன்களையும், தேவைகளையும் பொறுத்து மானியங்களையும் பயிற்சிகளையும், பங்காண்மையாளர்களால் மதியுரைக்கப்படும் வேலைகளும், பயிற்சிகளும் வழங்கப்படும். இத்திட்டத்தை ஆழமாக ஆராய்ந்தபோது, உண்மையிலேயே திரும்பிவந்தவர்களிடம் ஒன்றில் பயன்படுத்தக்கூடிய ஆற்றல்கள் அல்லது முதலிடக்கூடிய சேமிப்புக்கள் கொண்டிருப்பவர்களையே நோக்காகக் கொண்டமை தெரியவந்தது குறிப்பாக பணிப்பெண்ணாக[137] இருந்து வந்தவர்களிடம் அநேகமானவர்கள் இவைகளைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அநேகமான திரும்பிவருவோர் எதிர்கொள்ளும் சமூக, கலாசார, மற்றும் உளவியல் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் மிகவும் முக்கியமான பின்னடைவு என்னவெனில் விழிப்புணர்வு இன்மையாகும். விழிப்புணர்வு ஆனது வெறுமனே புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் மாத்திரமேயன்றி பல்வேறுபட்ட SLFBE கிளைகளிடம் இல்லாமல் உள்ளதாகும். SLFBE மாவட்ட பணியாளர் அலுவலகங்களிலுள்ள SLFBE பணியாளர்கள் ஒரு தரவுத்தளத்திற்காக தகவல்களை சேகரித்துக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளார்களே தவிர, நிகழ்ச்சித்திட்டம் குறித்த மேலதிக தெளிவு எதும் இல்லாதுள்ளனர். எவ்வாறாயினும் இந் நன்மைகள் எதனையும் அடைந்துகொள்வதற்கான கட்டாயமான தேவைப்பாடு உள்ளது. இதற்கு முன்பதாக[138] தொழிலாளர்கள் பணியகத்துடன் தம்மை பதிவு செய்திருக்க வேண்டும். விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு மிகவும் இறுக்கமானதாக இருப்பதுடன், பலர் உரிய காலத்தில் விண்ணப்பிக்க தவறிவிடுகிறார்கள். பதிவு செய்தவர்கள் கூட அநேகமாக நன்மைகளையும் அவர்கள் மீதான தங்களின்

136 SLBFE 2010 சமூகவியல் மற்றும் சந்தைப்படுத்தல் பணியாளர்களுடனான நேர்காணல்கள்

137 கொழும்பு, சிலாபம், கண்டி இவெவேப பணியாளர்களுடனான நேர்காணல்கள் 2010

138 SLBFE நலனோம்பல் பணியாளர்களுடனான நேர்காணல்கள் 2010

உரிமைகளையும் தெரியாமல் இருப்பதுடன், தொடர்ந்தும் அவ்வாறே இருந்து விடுகிறார்கள்.[139]

## இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள்

இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பவற்றின் ஆதிக்கத்திற்குள் வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதற்கான பிரதான காரணங்களின் ஒரு சுருக்கமான மேலோட்டம் இதோ தரப்படுகிறது. வேலை செய்யும் நாடுகளில் தொடர்புடைய சட்டவாக்கங்கள் இல்லாமை காரணமாக தேசிய மற்றும் சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் சட்டங்கள் செயற்திறனற்றவையாக உள்ளன. அநேகமான மத்திய கிழக்கு நாடுகள் சர்வதேச சமவாயங்களுக்குள் தம்மை அங்கீகரித்துக்கொள்ளாமலும் இன்னும் சரியா சட்டங்கள் மற்றும் கவாலா முறைமைகளோடு ஒட்டியிருக்கின்றன. அவர்கள் தேசிய தொழிற்சட்டங்கள்[140] வீட்டுப்பணியாளர்களுக்கான முக்கிய பாதுகாப்புக்களான குறைந்தபட்ச கொடுப்பனவு, வேலைநேர வரையறைகள், வேலைநேர எல்லைகள், சம்பளக் குறைப்பிலான வரையறைகள், ஓய்வு நாட்கள், கண்ணியமான வேலைநிலைமைகள்[141] என்பனவற்றை உள்ளடக்கியிருக்கவில்லை. ஆனாலும் ஜோர்தான் 2008 ஆம் ஆண்டில் வீட்டுப் பணியாளர்களையும்[142] அதனில் உள்ளடக்கக்கூடியவாறு சட்டத் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

பாஹறைனும் கவாலா[143] முறைமையை மாற்றியமைத்துள்ளது.

இந்த நாடுகளிலுள்ள இலங்கை தூதராலயங்களும் இத் தொழிலாளர்களை துஷ்பிரயோகம் சட்டக்குற்றச்சாட்டுகள் அல்லது அழிவுகள்[144] என்பவற்றிலிருந்து

---

139 குருநாகல, புத்தளம், கண்டிப் பகுதிகளில் திரும்பி வந்தோருடனான நேர்காணல்கள்

140 Human Rights Watch (2008). 'As if I'm Not Human': Abuses against Asian Domestic Workers in Saudi Arabia, பக்கம்.25, http://www.hrw.org/en/reports/2010/04/28/: சவூதி அரேபிய தொழிலாளர் சட்டம், Royal Decree No. M/51, செப்ரம்பர் 27, 2005, பாகம் VI.

141 Human Rights Watch (2008). 'As if I'm Not Human': Abuses against Asian Domestic Workers in Saudi Arabia, பக்கம். 72-81,, http://www.hrw.org/en/reports/2010/04/28/

142 நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை ஜோர்தான் வெளியிட்டது 2009 "Rights group praises Jordan for granting protections to domestic workers", *The Jordan Times,* 23 September 2010, http://www.jordantimes.com/?news=26127

143 தனிப்பட்ட வேலை வழங்குனர்களிடமிருந்து தொழில்சந்தை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு அனுசரணை வழங்கல் மாற்றப்பட்டுள்ளது "Middle East: Iraq, UAE", *Migration News,* July 2009 Volume 16 No 03, *http://migration.ucdavis.edu/mn/more.php?id=3540_0_5_0*

144 Human Rights Watch (2007). Exported and Exposed: Abuses against Sri Lankan Domestic Workers in Saudi Arabia, Kuwait, Lebanon, and the United Arab Emirates, (நொவம்பர் 2007) பக்கம்102-110, http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

பாதுகாப்பதற்குரியவைகளை கொண்டுள்ளனவாகத் தெரியவில்லை. வெளிநாட்டு சேவைகளில் பணியாற்றுபவர்களின் தொகை பெருந்தொகையான முறைப்பாடுகளுடன் ஈடுபடுவதற்கு போதுமானதாக இல்லாததுடன் அவைகள் விசேடித்த பணியாளர்களான சமூகப் பணியாளர்கள், சட்டத்தரணிகள், அந் நாட்டு மொழியில் சரளமான தன்மை கொண்டோர் என்பனவற்றைக் கொண்டிராமலும் உள்ளனர். இந்த நாடுகளிலுள்ள இலங்கை தூதுராலயப் பணிகள் கூட தொழிலாளர்களை துஷ்பிரயோகங்கள், குற்றச்சாட்டுகள் மற்றும் அழிவுகளில் இருந்து பாதுகாப்பதற்கு உரிய வகையில் வசதிகள் அற்றிருப்பதாகத் தெரிகிறது. வெளிநாட்டு சேவை இடங்களிலுள்ள பணியாளர் இப் பெருந்தொகையான முறைப்பாடுகளைக் கையாளுவதற்கு போதுமானவர்களாக இல்லாதிருப்பதுடன், சமூக வேலையாட்கள், சட்டத்தரணிகள் அந் நாட்டு மொழியில் சரளமான தன்மை இல்லாதிருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் குறைந்த பட்ச தேவைப்பாடுகளாக தற்காலிக இருப்பிடம், விடயங்களை அணுகிக் கையாளும் முகாமைத்துவம் மற்றும் ஏனைய வீட்டு தொழிலாளர்களுக்குத்[145] தேவையான சேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் குறைபாடுடையவர்களாக இருக்கிறார்கள்.

ஒழுங்குக்கிரமமான புலம்பெயர்தல், மற்றும் ஆட்களைக் கொண்டு செல்லல் என்பவற்றின் மீது சர்வதேச மட்டத்திலான ஒரு செயற்திறனற்ற வலைப்பின்னலே உள்ளது. ஆட்களைக் கொண்டு செல்லல் மீதான தேசிய சட்டவாக்கமானது பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது போதிய பாதுகாப்பை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்காததுடன், அதன் உள்ளடக்கம் அதிலே உள்ள அமைச்சரின் அதிகார எல்லை, அதிகாரம் என்பவற்றின் நிமித்தமான ஒரு அரசியல் கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது முன்பு தொழிலமைச்சின் கீழ் இருந்தது. 2010 பொதுத் தேர்தலின் பின்பாக இது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பார்வையின் கீழ் வந்துள்ளது. இதன் விளைவாக ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் உள்ள தொழில் அலுவலகங்கள் ஊடாக அவ்வப் பகுதியிலுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் தகவல் தரவுத் தளத்தைப் பேணி வந்தவர்கள் அவர்கள் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மீள செயன்முறையின் முக்கிய தொடர்புகளை SLBFE இழந்து விட்டது. தவிரவும் SLBFE ஆனது எல்லா மாவட்டங்களிலும் கிளைகளைப் பேணாமையால் இத்தாக்கம் அதிகமாகின்றது.

---

145 Human Rights Watch (2008). 'As if I'm Not Human': Abuses against Asian Domestic Workers in Saudi Arabia, p.116,http://www.hrw.org/en/reports/2010/04/28/

புலம்பெயர் தொழிலாளர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்களாகவும், பணமற்றவர்களாகவும் திரும்பி வரும்பொழுது பெரியதொரு பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். துரதிஷ்டவசமாக இது இறந்தகாலத்திலேயே தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வந்துள்ளது. தேசியக் கொள்கையின் கீழே உள்ள மீள ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித்திட்டமானது, இவ்வாறு திரும்பி வருபவர்கள் தமது வாழ்வை மீண்டும் மீளமைத்துக்கொள்வதற்கு உதவிகளை வழங்க எண்ணியுள்ளது. முற்று முழுதாக அவர்களின் நோக்கம் பொருளாதார ரீதியானதாக இருப்பதும், அதல் வெளிப்படைத்தன்மை இல்லாமல் இருப்பதும், அதனை செயல்திறனுள்ள முறையில் செயற்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தலாம்.

சிபார்சுகள்

- SLFBE சட்டமானது புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை ஒருங்கிணைத்து சமவாயத்தில்[146] சொல்லப்பட்டவாறாக திருத்தப்பட வேண்டும். அதாவது, வரைவிலக்கணத்தை விரிவடையச் செய்வது, ஆட்களைக் கடத்துவதற்கு அதிக தண்டம் அறவிடுவது, நலன் பங்காளர்களையும் உள்ளடக்குவதுடன், ஆட்சேர்ப்பு செயற்பாடுகளிலே[147] சபை உறுப்பினர்களை ஈடுபடுவதைத் தடுப்பது, புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சேவைகளுக்காக கட்டணம் அறிவிடுதலை இல்லாதொழித்தல், வரிச்சலுகைகளை அதிகரித்தல், பொதுமக்கள் தகவல் தரவு வங்கியை சென்றடையக்கூடியதாக வைத்திருத்தல், தொடர்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றிற்கான வகிபங்குகளை வரைவிலக்கணம் செய்தல், மீள ஒருங்கிணைத்தல், மற்றும் கண்காணிப்பு அலகை நிறுவுதல் என்பன இதனுள் அடங்கும்.

- தேசியக் கொள்கை[148] ஆனது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்; இது சம்பந்தப்பட்ட அரச அலுவலர்களுக்கு இதன் உள்ளடக்கம், இலக்குகள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும்.

- புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டில் பிறந்து சொந்த பூர்வீக நாட்டிற்கு கொண்டுவரப்படாத பிள்ளைகளுக்கு பிரஜா உரிமை

[146] எல்லா தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் பாதுகாப்பது மீதான சர்வதேச சமவாயம்

[147] மஸ்நவி நூரா (2004). "Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Philippines", *Law & Society Trust Review*, தொகுப்பு 14, பதிப்பு 201,(ஜூலை 2004) பக்கம் 5

[148] தேசிய தொழில் புலம்பெயர்தல் கொள்கை 2008

மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்குத் தேவையான விசேட சட்ட ஏற்பாடுகள், செயன்முறைகள் செய்ய வேண்டியதாக உள்ளது.

- புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான மனிதஉரிமைகள் மீறல் வரலாற்றைக் கொண்ட நாடுகளுடன், புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான மிகவும் கடுமையான ஏற்பாடுகளுடனான இருதலைப்பட்ச ஒப்பந்தங்களை அரசு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.[149]

- மனித உரிமைகள் ஆணைக்குழுவானது புலம்பெயர் தொழிலாளர்களுடனும், இராஜரீதியான பணியகங்களுடனும் அவர்கள் பணியாற்றும் நாட்டின் அரசாங்கங்களுடனும் ஒருங்கிணைந்து பாதுகாத்துக்கொள்வதற்காகவும், ஒரு முறைப்பாட்டுச் செயற்பாட்டை உள்ளடக்குவதற்காகவும் ஒரு விசேட அலகைக் கொண்டிருக்க வேண்டும்.

- NCPA யின் ஆதரவுடன் நன்னடத்தை மற்றும் குழந்தைப் பராமரிப்புத் திணைக்களமானது, பிள்ளைகளின் உணர்வு ரீதியான, புத்திக்கூர்மையான தேவைகளைக் கவனிப்பதற்காக ஆரம்பக் கவனம் எடுப்போர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்.[150]

- அரசானது புலம்பெயர் தொழிலாளர்களின் தரவுத் தளத்தை போக்குகள், பால்நிலைக்கூருணர்வு தரவுகள், மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்புகள், என்பவற்றின் மாற்றத்தை பிரதிபலிப்பதற்காக தரவுத்தளங்களைப்[151] பலப்படுத்த வேண்டும். சனத்தொகை மற்றும் தொழிலாளர் கருத்துக்கணிப்பு வலையமைப்பு புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்த சிறந்த தர தகவல்களைப் பெறுவதற்காக திருத்தப்பட வேண்டும்.

---

149 தேசிய கொள்கை மற்றும் சட்டவாக்கத்தின் பிரகாரம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் கடல்கடந்த பிலிப்பினோக்கள் சட்டம் 1995

150 Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad, Save the Children in Sri Lanka, Colombo, http://www.crin.org/docs/save_sl_left_out.pdf (Extracts from the Summary Report compiled by Save the Children in Sri Lanka and Kishali Pinto-Jayawardena can be found in *Law & Society Trust Review*, Volume 17 Issue 226 (August 2006): 19-46)

151 புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான ஆய்வு : கருத்துக்கணிப்பும் தரவுகளின் தேவை மற்றும் கொள்கை செயற்பாடுகளின் ஆய்வும் இனங்காணுகையும் தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 1996

- புலம்பெயர்வுத் தரவுகளில் திரும்பிவரும் புலம்பெயர்வுத் தரவும் உள்ளடக்கப்பட வேண்டும். குடிவரவு குடியகல்வுத் திணைக்களமானது[152] இந்தப் பணியை இலங்கை வெளிநாட்டு பணியகத்திற்கு உதவுவதுடன், விமான நிலையை கண்காணிப்பு அலகு ஒன்றும் இந்த பதிவு செய்தல் முறை முழுமையாகத் தொழிற்படும் வரைக்கும் நிறுவப்பட வேண்டும்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஆய்வுப் பிரிவினால் மீள ஒருங்கிணைத்தல் மீதான ஆய்வொன்று இப்பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்தலில் திரும்பி வருதல் மீதான ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ் ஆய்விலே புலம்பெயர்வின் வீதத்தின் வெற்றியும், தோல்வியும், செலவினம் சேமிப்பு மீதான பண அனுப்புகைகளின் தாக்கம், முதலீடு கொடுப்பனவு மீது நன்மைகளை உட்படுத்தும் பணவீக்கம், மீள ஒன்றிணைதலும், புலம்பெயர்வில் திரும்பி வருதலும் என்பன உள்ளடக்கப்பட வேண்டும். ஆட்களைக் கொண்டு செல்லல் மீதான ஆழமான கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். ஆட்களைக் கொண்டு செல்லல் புலம்பெயர் தொழிலாளர்களால் விட்டுச் செல்லப்படும் குழந்தைகள், வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளின் வேலைவாய்ப்பு உதாரணம் ஒட்டகம் செலுத்துதல் என்பன பற்றியும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

- பிரதேச செயலகங்களிலுள்ள இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் குழுக்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளின் மீதான தனித் தனியான தரவுத்தளத்தைப் பேணுவதுடன், அவர்களின் நலனோம்பல், கல்வி, சுகாதாரம் அவர்களுடைய வீடுகளிலோ, அவர்கள் வளரும் குடும்பங்களின் [153]சூழலிலோ அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பனவற்றைக் கண்காணிக்க வேண்டும். இக்குழுக்கள் குழந்தைகள் துஷ்பிரயோகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக NCPAயுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.

---

152 புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான ஆய்வு : கருத்துக்கணிப்பும் தரவுகளின் தேவை மற்றும் கொள்கை செயற்பாடுகளின் ஆய்வும் இனங்காணுகையும் தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 1996

153 Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo, http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

- தூதரலாய சேவைகள் தரவு வங்கிகளைப் பேணுவதற்கும், உளவளச் சேவைகளை வழங்குவதற்கும், நாட்டின் நிலைமைகளைக் கண்காணிப்பதற்குமாக கட்டமைப்பு மீளமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் 24 மணிநேர உடனடி தொலைபேசித் தொடர்புகளைப் பேணுவதுடன், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உதவித் தேவைகளுக்கான கரும பீடத்தையும் அமைத்தல்.

- அரசாங்கமானது சிவில் சமூகம், பொலிஸ் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்படுத்துவதன் ஊடாக கடத்தல் மீதான குற்றவியல் சட்டக்கோவை திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும்.

- இலங்கை அரசாங்கமானது புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்களை நிறுவுவதற்கு வசதியளிப்பதுடன், வேலைசெய்யும் நாடுகளின் அவர்களின் இருப்பை பலப்படுத்துவதுடன், மாதிரி தொழிற்சங்க ஒப்பந்தங்களையும் உருவாக்க வேண்டும். ஆய்வுகளுக்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களில் திரும்பிவந்தவர்களையும், நலன் பங்காளர்களையும் உள்ளடக்கிய செயலணிகளை உருவாக்குதல். புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தீர்வுகள் மற்றும் மீள ஒருங்கிணைதல் மீதான உதவிகள்

- ஒவ்வொரு இலங்கை தொழிலாளர் பணியகத்தின் கிளைகள் ஒவ்வொன்றும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியை செயற்படுத்துவதில் தொழிற்படும் விதத்தை பரிசோதிப்பதற்காக ஒரு தனித்தனியான சுயாதீனமான கண்காணிப்பு பொறிமுறை அமைக்கப்பட ண்டும். இது வெளிவிவகார அமைச்சின் ஒரு அலகாய் மேற்கொள்ளப்படலாம். அத்துடன் இலங்கை வெளிநாட்டு பணியத்திற்கு எதிரான முறைப்பாடுகளைக் கேட்பதற்கு என நீதித்துறையையும் உள்ளடக்க வேண்டும்.

## எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான குழுவின் சிபார்சுகள்

2010 ஒக்ரோபர் 19 குழுவானது அரச தரப்பை பின்வருவன சம்பந்தமாக ஊக்குவிக்கிறது.

1. சட்டவாக்கம்

- சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் சட்டவாக்கங்களை ஒருமைப்பாடடையச் செய்வதற்கான எல்லா அத்தியாவசிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்

- சமவாயத்தின் உறுப்புரை 76[154], உறுப்புரை 77[155] என்பவற்றுக்கான வழங்கப்பட்ட பிரகடனங்களைச் செய்வதற்குப் பரிசீலித்தல்.

- ILO சமவாயங்கள் 97, 143 என்பவற்றை பரிசீலித்து உத்தியோகபூர்வ ரீதியாக இணங்கிக்கொள்வதை துரிதப்படுத்துதல்.

- சமவாயத்திற்கான மரபொழுங்குகளை இணங்கி ஏற்று உத்தியோகபூர்வ ரீதியாக அங்கீகரித்துக்கொள்ளல்.

2. தரவுச் சேகரிப்பு

- வெளிநாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான பால்நிலை தேசியம் போன்ற வேறுபடுத்தப்பட்ட புள்ளிவிபரங்களை சேகரிப்பதற்கான ஒருமைப்படுத்தப்பட்ட பொறிமுறையொன்றைக் கைக்கொள்ளுதல்.

- இலங்கைத் தூதரகங்கள், தூதுவராலயங்களுடனும் இலங்கை புலம்பெயர்பவர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளுடனும் தரவுச் சேகரிப்பை முன்னேற்றுவதற்காகவும் ஒழுங்கற்ற புலம்பெயர்வாளர்களின் தரவுச் சேகரிப்பை முன்னேற்றுவதற்காக கூட்டிணைப்புக்களை பலப்படுத்துதல்.

3 பயிற்சியும் சமவாயத்தின் பரப்புகையும்

- புலம்பெயர் தொடர்பான விடயங்களுடன் பணியாற்றும் உரிய அரச அதிகாரிகளுக்கு சமவாயம் மீதான விசேடித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

---

154 சமவாயத்தின் 76 வது உறுப்புரை 'a State party may at any time declare that it recognizes the competence of the Committee to receive and consider communications to the effect that a State Party claims that another State Party is not fulfilling its obligations under the present Convention.'

155 சமவாயத்தின் 77 வது உறுப்புரை'a State party may at any time declare that it recognizes the competence of the Committee to receive and consider communications from or on behalf of individuals subject to its jurisdiction who claim that their individual rights as established under the Convention have been violated by that State party.'

- சமவாயத்தின் எல்லா ஏற்பாடுகளையும் தீர்ப்பதற்காக புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களிற்காக பயிற்சிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உறுதிப்படுத்துதல்.

- சமவாயங்களை தேசிய மொழிகளுக்கு மொழிபெயர்த்தல்.

4. புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உரிமைகள்

புலம்பெயர் பெண்களின் தரமுயர்த்தலையும் வலுவூட்டலையும் ஊக்குவித்தல்

- பாரபட்சமும் துஷ்பிரயோகமும் அடிக்கடி நிகழும் இடங்களில் இருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் ஊடாக, தாக்கப்படக்கூடிய நிலைகளிலுள்ள பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களையும், நிபந்தனைகள் மற்றும் நிலைப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தல்.

- பால்நிலை பயிற்சி மற்றும் விடய அறிவு வழங்கள் என்பவற்றை அரசாங்கப் பணியாளர்களுக்கு குறிப்பாக சட்டம் மற்றும் ஆலோசனை உதவிகளை இலங்கை பிரசைகளுக்கு வெளிநாடுகளில் வழங்குதல்.

- புறப்படுவதற்கு முன்பாக புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சர்வதேச விமானநிலையத்தில் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல், விமான நிலைய ஆட்களுக்கு பால்நிலை விழிப்புணர்வு பயிற்சி என்பன உட்பட.

- அதிகாரிகள் நாட்டின் தொழிற்சட்டங்கள் மற்றும் செயல்முறைகள் செயற்திறனைப் பயன்படுத்தும் நாட்டின் தொழிற்சட்டங்கள் மற்றும் செயல்முறைகள் குறித்த அறிவை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தூதரகங்களுக்கும், தூதராலயங்களுக்கும் சட்ட உதவி கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

5. புலம்பெயர் தொழிலாளர்களதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் ஏனைய உரிமைகள் - ஆவணப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்கான உரிமைகள்

- வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் தம்மை பதிவுசெய்து கொண்டு தேர்தல்களில் பங்குபற்றுவதை

சாதகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எல்லாப் படிநிலைகளையும் எடுத்தல்.

- முறைசார் பண அனுப்புகைகளுக்கு வசதி ஏற்படுத்துவதற்காக வங்கிகள் நிதி நிறுவனங்கள், அசாறிகள் என்பவற்றுக்கிடையிலான இணைப்புக்களை உருவாக்கல்.

6. தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சர்வதேச புலம்பெயர்தலுடன் தொடர்புடைய நல்ல சட்டரீதியான, நீதியான, மனிதத்தன்மையான நிலைமைகளை உறுதி செய்தல்.

- முகவர்களினது செயற்பாடுகளை கடுமையாகக் கண்காணித்தலும், அவர்கள் ஆட்சேர்ப்புக்கான வழிகாட்டுதல்களை மதிக்கிறார்களா என்பதனை இலங்கையிலும் வேலைக்குச் செல்லும் நாடுகளிலும் கண்காணித்தல்.

- திரும்பிவரும் தொழிலாளர்களிடையேயும், அவர்களின் குடும்பங்களிடையேயும் மீள இணைந்து கொள்ளல் நிகழ்ச்சித்திட்டத்தைக் குறித்து விழிப்புணர்ச்சித்திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுதலும் அதற்கு போதுமான நிதியை ஒதுக்குதலும், தன்னார்வமாக திரும்பிவருபவர்களுக்கு வசதிப்படுத்தலை உள்ளூர் நிறுவனப் பொறிமுறைகளை உருவாக்கலும், சமூக, கலாசார மீள் இணைவை ஏற்படுத்துதலும்.

- ஆட்களை கடத்துதலைத் தடுப்பதற்கான சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்துதல்

- ஆட்கடத்தலை சிறந்த முறையில் எதிர்ப்பதற்காக விசேடமாகப் பெண்களும் பிள்ளைகளும் ஆட்கடத்தல் செய்யப்படுகின்ற தரவுகளைத் தொகுத்தலும் மதிப்பீட செய்தலும்.

- கடத்தலுக்கு பொறுப்பாக உள்ளவர்களை நீதியின் முன்கொண்டு வருதலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் ஒழுங்கீனமாக புலம்பெயர்ந்தவர்களை தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துதலும்

## REFERENCES


- Asian Legal Resource Centre, China. http://www.alrc.net/
- Athukorale, Premachandra (1990). "International Contract Migration and the Reintegration of Return Migrants: The Experience of Sri Lanka", International Migration Review, Vol. 24, No. 2: 323-246
- BATU-SAARC (2005). A Study on Labour Migration from SAARC Countries: Reality and Dynamics. Refugee and Migratory Movements Research Unit, University of Dhaka. http://www.gurn.info/en/topics/migration/research-and-trends-in-labour-migration/asia/study-on-labour-migration-from-saarc-countries-reality-and-dynamics
- Bahrain Center for Human Rights (2007). Female Domestic Workers living under the Kafala System in GCC States, Paper presented at 1st Inter-Regional Conference on Asian migrant workers in the Arab world, Doha, 10-11 June 2007, http://bchr.net/en/node/1289
- Black's Law Dictionary (2004), Eighth Edition, Garner A. Bryan (Ed), West Group, USA
- C97 Migration for Employment Convention (Revised), 1949. http://www.ilo.org/ilolex/cgi-lex/convde.pl?C097
- C143 Migrant Workers (Supplementary Provisions) Convention, 1975. http://www.ilo.org/ilolex/cgi-lex/convde.pl?C143
- C181 Private Employment Agencies Convention, 1997. http://www.ilo.org/ilolex/cgi-lex/convde.pl?C181
- Center for Women's Research. www.cenwor.lk_
- Central Bank of Sri Lanka. Annual Report 2008. http://www.cbsl.gov.lk/htm/english/10_pub/p_1.html
- Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978, Chapter III, http://www.priu.gov.lk/Cons/1978Constitution/Chapter_03_Amd.htm

- Daniels, Devan (2010). 'Need to develop exports-growing private remittances not a healthy sign'. The Island Online, 29 September 2009. http://www.island.lk/2009/09/29/business3.html

- Dias, Malsiri. Problems of Children of Migrant Workers. Paper presented at SAARC Regional workshop on children of the SAARC Region with special focus on the impact of the SAARC on the girl child, organized by Colombo YWCA, 6th-8th June 2001 (on file at the Centre for Women's Research library in Colombo)

- Dias, Malsiri and Nedra Weerakoon-Goonewardene (1991). Female Labour Migration to Singapore and Hong Kong: A Profile of the Sri Lankan Housemaid. Unpublished. (on file at the Centre for Women's Research library in Colombo)

- Dustmann, Christian (1996). The Social Assimilation of Immigrants. Journal of Population Economics. Springer-Verlag, London. http://www.ucl.ac.uk/~uctpb21/Cpapers/socialassimilation.pdf

- Fernando, Nimalka (1998). 'Migrant Women Workers' in Sri Lanka: State of Human Rights 1998. Law and Society Trust, Colombo: 219-236

- Gamburd, Michele Ruth (2000). The Kitchen Spoon's Handle–Transnationalism and Sri Lanka's Migrant Housemaids. Cornell University Press, Ithaca

- Gibb. H.A.R. (1950), 'Mohammedanism' An Historical Survey. Oxford University Press, London, http://www.answering-islam.org/Books/Gibb/sharia.htm

- Gunatilleke, Godfrey (ed.) (1986). Migration of Asian Workers to the Arab World. United Nations University, Tokyo

- Gunatilleke, Godfrey (ed.) (1991). Migration to the Arab World – Experience of Returning Migrants. United Nations University Press, Tokyo

- Gunatilleke, Godfrey (ed) (1992). The Impact of Labour Migration on Households: A Comparative Study in Seven Asian Countries. The United Nations University Press, Tokyo

- Gunatilleke, Godfrey (1988). The Extent & Nature of the Structural Mismatch

in the Domestic Labour Market. Institute of Policy Studies, Colombo.

- Human Rights Watch (2004). Bad Dreams – Exploitation and Abuse of Migrant Workers in Saudi Arabia, http://www.hrw.org/en/reports/2004/07/13/bad-dreams-0

- Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in Saudi Arabia, Kuwait, Lebanon, and the United Arab Emirates, http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

- Human Rights Watch (2008). 'As if I'm Not Human': Abuses against Asian Domestic Workers in Saudi Arabia, http://www.hrw.org/en/reports/2010/04/28/

- Human Rights Watch (2010). Slow Reform; Protection of Migrant Domestic Workers in Asia and the Middle East, http://www.hrw.org/en/reports/2010/04/28/slow-reform-0

- Human Rights Watch (2007). Globalization Comes Home: Protecting Migrant Domestic Workers' Rights. http://www.hrw.org/en/reports/2007/01/11/globalization-comes-home

- Human Rights Watch (2010) 'Saudi Arabia: Free trapped migrant workers', Human Rights Watch News, 23 April 2010. http://www.hrw.org/en/news/2010/04/23/saudi-arabia-free-trapped-migrant-workers

- International Convention on the Protection of the Rights of all Migrant Workers and Members of their families, http://www2.ohchr.org/english/law/cmw.htm

- International Convention on the Elimination of All Forms of Discrimination Against Women 1979 (CEDAW), http://www2.ohchr.org/english/law/cedaw.htm

- International Convention on the Elimination of All Forms of Racial Discrimination 1965 (ICERD), http://www2.ohchr.org/english/law/cerd.htm

- 

- International Convention on Civil & Political Rights 1966 (ICCPR), http://www2.ohchr.org/english/law/ccpr.htm
- International Convention on Economic, Social and Cultural Rights 1966 (ICESCR), http://www2.ohchr.org/english/law/cescr.htm
- International Labour Organization Asian Regional Programme on Governance of Labour Migration & European Union (2008). Rosairo, Teresita del. Best Practices in Social Insurance for Migrant Workers: The Case of Sri Lanka. http://pstalker.com/ilo/resources/ILO%20MGREU%20WP12%20-%20Social%20Insurance%20for%20Migrant%20Workers%20in%20Sri%20Lanka.pdf
- International Labour Organization: Sub Regional Office for South Asia (SRO) Bureau of Workers' Activities (ACTRAV) New Delhi (2004). Ahn, Pong-Sul. Migrant Workers and Human Rights Out-Migration from South Asia. IOM, India. http://www.ilo.org/wcmsp5/groups/public/---asia/---ro-bangkok/---sro-new_delhi/documents/publication/wcms_124657.pdf
- International Labour Organization. Resolution concerning a fair deal for migrant workers in a global economy. ILO Conference (2004), Geneva. http://www.un.org/esa/population/meetings/thirdcoord2004/ILC_2004_Resolution.pdf
- International Organization for Migration & Institute of Policy Studies International for Sri Lanka (2008). Migration Outlook - Sri Lanka 2008. IOM, Colombo.http://www.iomsrilanka.org/iom/wp-content/uploads/2009/12/11462.pdf
- Johnson, Toni and Lauren Vriens (2010). Islam: Governing under Sharia. Council on Foreign Relations. USA. http://www.cfr.org/religion/islam-governing-under-sharia/p8034
- Kav LaOved (Worker's Hotline), Israel. Sri Lankan Migrant Workers in Israel. www2.ohchr.org/english/bodies/cmw/.../KavLaOved_SriLanka11.doc
- Masnavi, Nura (2004). "Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Philippines", Law & Society Trust Review, Volume 14 Issue 201 (July 2004): 1-19

- Migration News (2009). "Middle East: Iraq, UAE". July 2009 Volume 16 No 03. http://migration.ucdavis.edu/mn/more.php?id=3540_0_5_0
- Ministry of Foreign Employment Promotion and Welfare, Sri Lanka (2008). National Labour Migration Policy for Sri Lanka. http://www.ilo.org/public/english/protection/migrant/download/mpolicy_srilanka_en.pdf
- Model Trade Union Agreement on Migrant Worker's Right. http://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_dialogue/---actrav/documents/publication/wcms_115036.pdf
- Murphy, Caryle (2010), 'Saudi Arabia: Foreign maid faces death penalty', Global Post, 29 November 2010, http://www.globalpost.com/dispatch/saudi-arabia/101128/saudi-arabia-foreign-maid-faces-death-penalty
- OneWorld.net. International Migration Guide. http://uk.oneworld.net/guides/migration?gclid=CNjLk7TBsKICFQFB6wodlleolA
- Optional Protocol to CEDAW. http://www2.ohchr.org/english/law/cedaw-one.htm
- Oluwu, Dejo. Global Migration and the Rights of Migrant Workers; Implications for Legal and Policy Responses in the Pacific. LST Review Volume 16 Issue 219 January 2006. pp. 31-40.
- Penal Code (Amendment) Act No.16 of 2006, Democratic Socialist Republic of Sri Lanka. Section 360 C. http://www.oecd.org/dataoecd/38/0/46817262.pdf
- Republic Act No. 8042, Migrant Workers and Overseas Filipinos Act of 1995 ('Filipino Act'), http://www.cfo.gov.ph/pdf/laws%20and%20policies/01%20RA%208042%20MWA.pdf
- Rule of Law in Sri Lanka. http://www.ruleoflawsrilanka.org/
- Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad. Save the Children in Sri Lanka, Colombo, http://www.crin.org/docs/save_sl_left_out.pdf (Extracts from the Summary Report compiled by Save the Children in Sri Lanka and Kishali Pinto-

Jayawardena can be found in Law & Society Trust Review, Volume 17 Issue 226 (August 2006): 19-46)

- Senadheera, Apeksha (2007). 'Sri Lanka to hone migrant worker skills'. The Island Online, 16 June 2007. http://www.island.lk/2007/06/16/business10.html

- South Asia Centre for Policy Studies (SACEPS), Nepal. Recommendations to the 15th SAARC Summit, Colombo, 2008. http://www.saceps.org/upload_file/recommendation_pdf/saceps_recommendationto_15th_saarc_summit.pdf

- Sri Lanka Bureau of Foreign Employment Website. www.slbfe.lk/

- Sri Lanka Bureau of Foreign Employment (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE, Battaramulla, http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf

- Sri Lanka: Bulankulama v. Min. of Industrial Development (Eppawala case), S.C. Application No. 884/99 (F/R). http://www.elaw.org/node/1295

- Sri Lanka Bureau of Foreign Employment Act No 21 of 1985, http://www.slbfe.lk/downloads/applications/Act_English.pdf

- Sri Lankan Bureau of Foreign Employment (Amendment) Act No.4 of 1994

- Sri Lankan Bureau of Foreign Employment (Amendment) Bill

- Sri Lanka: Nallaratnam Singarasa v AG, S.C. SpL(LA) No. 182/99 / C.A. Appeal No. 208/95 / H.C. Colombo 6825/94. www.ruleoflawsrilanka.org/.../special-case-supreme-court-on-nallaratnam

- Sri Lanka Women's Charter of 1993

- The Global Campaign for Ratification of the Convention on Rights of Migrants. (Site hosted by IOM). http://www.migrantsrights.org/

- The People's Movement for Human Rights Education (PDHRE), New York. The Human Rights of Migrant Workers. http://www.pdhre.org/rights/migrants.html

- Transparency International Sri Lanka (2010). Integrity in Foreign Employment: An analysis of corruption risks in recruitment, http://www.tisrilanka.org/pub/reports/FES_REPORT.pdf

- UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families (CMW), Consideration of reports submitted by States parties under article 73 of the Convention : International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families : initial reports of States parties due in 2004 : Sri Lanka, 19 June 2008, CMW/C/LKA/1, http://www.unhcr.org/refworld/publisher,CMW,STATEPARTIESREP,LKA,48d8f7e52,0.html

- UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families (CMW), Written replies by the Government of Sri Lanka to the list of issues (CMW/C/LKA/Q/1) to be taken up in connection with the consideration of the initial report of Sri Lanka (CMW/C/LKA/1), 20 August 2009, CMW/C/LKA/Q/1/Add.1, http://www.unhcr.org/refworld/publisher,CMW,STATEPARTIESREP,LKA,4a9fcaf02,0.html

- UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families (2009). Concluding observations on the initial state report of Sri Lanka, CMW/C/LKA/CO/1,14December2009, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G09/467/85/PDF/G0946785.pdf?OpenElement

- United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, Colombo, http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf

- Universal Declaration of Human Rights 1949 (UDHR). http://www.udhr.org/udhr/default.htm

- Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo, http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

# புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்கள்: இலங்கையில் மீள்திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்கள்

***Law & Society Trust***[1]

## அறிமுகம்

வேலைவாய்ப்புக்காக புலம்பெயருதல் என்பது உலகளாவிய நிலைப்பாடாக உள்ளது. ஆனால், இந்த பணியாளர்களை மீள ஒருங்கிணைக்க வேண்டியமை தேசிய அக்கறையாக காணப்படுகின்றது. மீள் ஒருங்கிணைப்பு என்பதில் உள்ளடங்கியுள்ள பணியாளர்களை அவர்களது பிறந்த நாட்டு சமூகத்துடன் மீள் உள்ளடக்கல் அல்லது மீள் சேர்த்தல் என்பதுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது[2]. இந்த பணியாளர்கள் மீள திரும்பல் மற்றும் தாயகத்துக்கு திருப்பி அனுப்பப்படல் என்பன தன்னார்வமானதாக அல்லது ஒழுங்கானதாக அல்லது கட்டாயப்படுத்தப்பட்டதாக அல்லது முறையற்றதாக இருக்கலாம்[3].

புலம்பெயரல் சக்கரத்தின் அத்தியாவசியமான பகுதியாக, தேசிய மீள்ஒருங்கிணைப்பு பொறியமைப்புக்கான தேவை தற்காலிக புலம்பெயர்வின் மத்தியில் நீண்ட காலமாக இருக்கின்ற போதிலும், இந்த தேவைக்கான அங்கீகாரம் மிகவும் மெதுவாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கைக்கான வெளிநாட்டு பரிமாற்ற வருமானத்தில் மூன்று பிரதான மூலங்களில் ஒன்றாக[4] புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் கட்டுதல் காணப்படுகின்ற நிலையில்,

---

1 *இந்த அறிக்கையின் பிரதான எழுத்தாளர் மியூரு குணசிங்க, அவர் கொழும்பு, Law & Society Trust (LST)*, இன், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் நிகழ்ச்சியின் *(ESCR)* ஆய்வாளராகும். இந்த *ESCR* நிகழ்ச்சி ஆய்வு கற்கையில் அனுஷயா கொளூரின் பங்களிப்பும் பாராட்டுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த அறிக்கை *ESCR* நிகழ்ச்சித் தலைவர் பீ. ஸ்கந்தகுமாரினால் தொகுக்கப்பட்டது. நிதிஉதவி (42139-6896/2010) வழங்கிய டயக்கோனியாவும் (சுவீடன்) நன்றிக்குரியது.

2 ஒச்சி, மசமி ஹெலன் (2005). Return Migration of Filipina Overseas Workers – Some implications from "Reintegration" Programmes. மனிதநேய மற்றும் விஞ்ஞானத்திற்கான பட்ட கற்கை பாடசாலை Ochanomizu, பல்கலைக்கழகம், டோக்கியோ, ஜப்பான், ப. 2, http://lames.mmsh.univ-aix.fr/Papers/Ochi.pdf

3 சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (2007).). International Labour Standards on Migrant Workers' Rights – Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific, பெங்கொக் 2007, ப. 37, http://www.ilo.org/public/libdoc/ilo/2007/107B09_314_engl.pdf

4 2009 ஜூன் 16ஆம் திகதி *The Island* பத்திரிகையில் "Contribution of women in Sri Lankan society", என்ற கட்டுரையில் ரத்னாயக்க ஜயந்தவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 2008ஆம் ஆண்டு மத்திய வங்கி வருடாந்த அறிக்கைக்கு அமைய,

2010ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அதிகபட்ச வெளிநாட்டு வருமானம் ஈட்டப்பட்ட பகுதியாக இது காணப்படுகின்றது[5]. எனவே, மீள திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களின் தேவை தொடர்பில் அரசாங்கம் மேலதிக கவனஞ் செலுத்தல் வேண்டும். மீள் திரும்பியவர்கள், விசேடமாக தோல்வியடைந்தவர்கள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். 25வருடங்களாக வேலைவாய்ப்புக்காக மக்கள் புலம்பெயர்ந்த பின்னரும், மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான நிகழ்ச்சி அல்லது இலங்கையின் வருடாந்த மீள் திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பன குறித்த உத்தியோக பூர்வமான பொறியமைப்பு ஒன்றும் அமுலில் இல்லை[6]. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டம்[7] மாத்திரமே, புலம்பெயர்வை ஒழுங்கு முறைப்படுத்துவதாகும். இந்தச் சட்டத்தின் பிரதான குறிக்கோளாக இருப்பது, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உருவாகுவதற்கு சந்தர்ப்பமளித்தலாகும். அதாவது, அதன் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை ஒழுங்குபடுத்துவது, அதன் முந்தைய சட்டங்களை செல்லுபடியற்றதாக்கல் என்பன அவற்றில் அடங்கும். எவ்வாறாயினும், இலங்கைக்கு வெளியில் கடமை புரிந்துவிட்டு மீள இலங்கை திரும்புபவர்களுக்கான மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை முன்னெடுப்பதற்கு அதில் அதிகாரம் இல்லை[8].

எவ்வாறாயினும், 2008ஆம் ஆண்டின் தேசிய தொழிலாளர் புலம்பெயரல் கொள்கையின் கீழ், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்[9]. துரதிருஷ்டவசமாக, இரண்டு வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் இந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தல் இதுவரை தொடரப்படவில்லை. புலம்பெயர்பவர்களின் மீள் ஒருங்கிணைப்புக்கான புலம்பெயர்வை

பிரதான வெளிநாட்டு வருமானம் ஈட்டும் துறையாக தொழிலாளர் புலம்பெயர்வு உள்ளது. http://www.island.lk/2009/06/16/business7.html

5 சோமரத்ன, ரசிக்க (2010), *Daily News*, "Remittances top Forex earnings", 2010, ஜூலை 5, http://www.dailynews.lk/2010/07/05/news01.asp

6 குடிவரவு அதிகாரியுடனான நேர்காணல், குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களம், உள்நிர்வாக அமைச்சு (ஆகஸ்ட் 2010).

7 இணையத்தளத்தில் http://www.slbfe.lk/downloads/applications/Act_English.pdf

8 S. 15 (s), 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம்.

9 வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சு (2008), தேசிய தொழிலாளர் குடிபெயர்வு கொள்கை, 'Protection and Empowerment of Migrant Workers and their Families: Return and Reintegration' என்பதில் பக்கம் 28-31 இல் உள்ள அத்தியாயத்தை பார்க்கவும், http://www.ilo.org/public/english/protection/migrant/download/mpolicy_srilanka_en.pdf

ஒழுங்குமுறைப்படுத்தும் நிகழ்ச்சியான, அரசாங்கத்தின் பிரதான நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இந்த அறிக்கை கடந்த மற்றும் நிகழ் காலத்தில் வெளியிடப்பட்ட பிரதிபலிப்புக்கள் மற்றும் மீள்திரும்பும் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது. அது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீள்ஒருங்கிணைப்பில் உள்ள இடைவெளிகள், ஒழுங்கு முறையின்மை மற்றும் பயனுறுதியற்ற தன்மை என்பன சார்ந்த கருத்தாக்கம் மற்றும் நிகழ்ச்சிகளை பரிசீலிக்கின்றது. அத்துடன், மீள திரும்பும் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், முக்கியமான விடயங்கள் தொடர்பில் தற்போது அமுலில் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை பகுப்பாய்வு செய்து, பயன்பாட்டில் உள்ள மற்றும் எதிர்கால மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குகின்றது.

## முறைமை

இது கள அடிப்படையிலான கற்கையாகும். புலம்பெயரல் செயன்முறையின் போதான நலன் பங்காளர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணலில் இருந்து பெறப்பட்ட முடிவுகள் இதில் உள்ளடங்கியுள்ளன. இதில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் அமைப்பு, தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின் மூன்று பிரதேச செயலகங்கள், வேறுபட்ட அரச சார்பற்ற நிறவனங்கள் மற்றும் மீள் திரும்பிய பெண் புலம்பெயரல் தொழிலாளர்கள் ஆகிய அம்சங்கள் உள்ளடங்குகின்றது. 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் போதான ஆலோசனையின் போது நலன் பங்காளர்களிடம் இருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், அதிக எண்ணிக்கையிலான பெண் புலம்பெயர் தொழிலாளர்கள்[10] பதிவு செய்யப்படும் மாவட்டங்கள் மற்றும் அவர்களது வேறுபட்ட இனரீதியிலான பின்னணிகள் என்பன சார்ந்ததாக வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த குருநாகல் மற்றும் புத்தளம், மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்கள் ஆய்வுக்கான பகுதிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. குருநாகலில் பெரும்பாலான பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் சிங்களவர்கள், புத்தளத்தில் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் முஸ்லீம்கள், கண்டியில் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லீம்கள் எனக் கலந்து உள்ளனர். புத்தளத்திலும், குருநாகலிலும் பெரும்பாலானவை கிராம மற்றும் பின்தங்கிய பகுதிகள் உள்ளன.

10 வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான SLBFEஇன் 2008ஆம் ஆண்டு வருடாந்த புள்ளிவிபர அறிக்கை ப.3-6, http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf

கண்டி, ஏனைய இரண்டு மாவட்டங்களையும் விட கொஞ்சம் முன்னேற்றகரமான நகரப் பகுதியாக காணப்படுகின்றது. இந்த பகுதிகளின் பிரதான வாழ்வாதாரத் தொழில்களும் வேறுபடுகின்றன. தெங்குப் பயிர்ச்செய்கை, உப்பளங்கள் மற்றும் மீன்பிடியில் புத்தளம் பிரதேசம் தங்கியுள்ளது. குருநாகல் பிரதேசம் தெங்கு மற்றும் நெற் செய்கையில் தங்கியுள்ளது. கண்டிப் பிரதேசம் தேயிலை உற்பத்தி, மசாலாப் பொருட்கள் செய்கை மற்றும் சுற்றுலாத் துறையில் தங்கியுள்ளது. இந்த பகுப்பாய்வானது மீள் ஒருங்கிணைப்பு உண்மையாக எப்போது ஆரம்பிக்கின்றது, வெளியேறுவதற்கு முன்னரா, திரும்பியதன் பின்னரா?, பொருளாதார மீள் ஒருங்கிணைப்பா அல்லது முழுமையான மீள் ஒருங்கிணைப்பா[11]? இந்த செயற்பாட்டின் நலன் பங்காளர்கள் யாவர்- அரசாங்கம்[12], அரச சார்புற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள்? போன்ற விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது.

## மீள் ஒருங்கிணைப்பு எனும் கோட்பாடு

ஒவ்வொரு தனிநபர், திணைக்களம் மற்றும் நிறுவனத்திற்கு அமைவாக 'மீள் ஒருங்கிணைப்பு என்பதற்கான கற்பிதம்' வேறுபடும் என்பதனை இந்த ஆய்வின் முடிவு வெளிப்படுத்தியுள்ளது. வெற்றிகரமான மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை வடிவமைப்பதில் உள்ள மீள் ஒருங்கிணைப்பு மற்றும் அடிப்படைத் தடைகள் தொடர்பான தேசிய கொள்கையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் இது சுட்டிக்காட்டுகின்றது. மீள் ஒருங்கிணைப்பு, புதிய நிகழ்ச்சி மற்றும் அதன் அளவு தொடர்பில் வேறுபட்ட கருத்துக்களை கொண்ட திணைக்களங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்குள் உள்ளன. மீள் ஒருங்கிணைப்பானது வெளியேறுவதற்கு முன்னரா[13] அல்லது திரும்பியதன் பின்னரா வழங்கப்படல்

---

[11] முழுமையான மீள் ஒருங்கிணைப்பு என்பது, மீள்ஒருங்கிணைப்பின் பொருளாதார, சமூக, உளச்சமூக, கலாசார மற்றும் அரசியல் அம்சங்களுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

[12] குடிபெயர்வ நடைமுறையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்கள் உதாரணமாக, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார, மகளிர் விவகார, தொழில், கல்வி மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற சட்டரீதியான நிறுவனங்கள்

[13] மீள்ஒருங்கிணைப்பு தொடர்பான குறுக்கு வெட்டான பார்வைகள் பின்வரும் SLBFEஇன் திணைக்களங்களிடம் இருந்து பெறப்பட்டன: சந்தைப்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் இணக்கப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர், (30.06.2010): "மீள்ஒருங்கிணைப்பு என்பது புறப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்படல் வேண்டும். சாத்தியமான குடிபெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் ஒன்றாக அது இருத்தல் வேண்டும்" சமூகவியல் திணைக்கள அதிகாரிகள் (30.06.2010): "மீள்ஒருங்கிணைப்பு என்பது புறப்படுவதற்கு முன்னரே ஆரம்பிக்கின்றது. அத்துடன், மீண்டும் தாயகம் திரும்புவதன்

வேண்டும் என்பது தொடர்பில் தொடர்ந்தும் சிக்கல் கின்றது. அது முழுமையாக பொருளாதாரம்[14] [15] சார்ந்ததாக இருக்குமாயின், அல்லது சமூக மற்றும் கலாசார மீள் ஒருங்கிணைப்பும் உள்ளடக்கப்படுமா[16], தேசிய தொழிலாளர் புலம்பெயரல் கொள்கையே புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்க அடிப்படையா, மீள் ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக நலனோம்பு பயன்கள் வழங்கப்படுகின்றனவா மற்றும் இவ்வாறான நிகழ்ச்சிகளில் யார் ஈடுபடுத்தப்படல் வேண்டும்[17] என்பன தொடர்பிலும் குழப்பங்கள் நிலவுகின்றன.

வெளிநாடு செல்வதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் பயிற்சிகளின் ஊடான மீள் ஒருங்கிணைப்பு உதவிகள், மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் ஒழுங்கு முறையான கொள்கை, கட்டமைப்பு மற்றும் நடைமுறை ஆகியவற்றின் குறைபாட்டிற்கான ஆதாரமாக உள்ளது. உணவு தயாரித்தல், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தல், செல்லும் நாட்டின் மொழி, எய்ட்ஸ்/எச்.ஐ.வி பாதுகாப்பு மற்றும் நிதி முகாமைத்துவம்[18] என்பன தொடர்பில் இந்த பயிற்சியின்போது கவனஞ் செலுத்தப்படுகின்றது. இவற்றில், நிதி முகாமைத்துவம் என்ற பிரிவில், உள் நாட்டுக்கு அனுப்பும் பணம், உள் நாட்டுக்கு அனுப்பும் பணம் பரிமாற்றம், நிதித் திட்டமிடல் மற்றும் சேமிப்புக்கள் போன்ற மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான

---

அவசியம் குறித்து குடிபெயர் தொழிலாளர்கள் விழிப்புணர்வுடன் மற்றும் தயாராக இருத்தல் வேண்டும்" சந்தைப்படுத்தல் முகாமையாளர் (07.07.2010): "புறப்படுவதற்கு முன்னரே எந்தவொரு மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியும் ஆரம்பிக்கப்படல் வேண்டும்"

14 SLBFE இன் நலன்புரி திணைக்கள அமைச்சரின் கருத்துக்கு அமைய (07.06.2010): "பணியாளர் மீள திரும்புவதுடன் மீள் ஒருங்கிணைப்பு ஆரம்பமாவதுடன், அதில் பொருளா-தார உதவியும் உள்ளடங்கியுள்ளது"

15 SLBFEஇன் தலைவருடனான நேர்காணலின் போது, (07.07.2010) அவரது பார்வையாக இருந்தது: "வருகை தந்தமையின் பின்னர் மீள்ஒருங்கிணைப்பின் மிகவும் அவசியமான அம்சமாக இருப்பது பொருளாதார உதவி"

16 SLBFEஇன் சமூகவியல் திணைக்கள அதிகாரிகளுக்கு அமைய: "மீள்ஒருங்கிணைப்பு உதவிகள் முழுமையானதாக இருக்க வேண்டும். வாழ்வாதார மற்றும் வீடமைப்பு கடன் நிகழ்ச்சிகள் போன்ற பொருளாதார உதவிகளில் இருந்து, அழுத்தத்தில் உள்ள மீள்திரும்பியவர்களுக்கான உளச்சமூக உதவி வரை". அதேவேளை, சந்தைப்படுத்தல் திணைக்கள, முகாமையாளருக்கு அமைய: "உளச்சமூக, சுகாதார மற்றும் கலாசார விடயங்கள் உள்ளடங்கலாக பொருளாதார, சமூக விடயங்களை மீள்ஒருங்கிணைப்பு உள்ளடக்க வேண்டும்"

17 'வெற்றிகரமாக திரும்பியவர்கள்' மற்றும் தமது ஒப்பந்தங்களை நிறைவு செய்தவர்கள் மற்றும் முதலீடு செய்வதற்கான திறமைகள் அல்லது பணம் உள்ளவர்களுக்கே புதிய மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியின் ஊடாக பராமரிப்பு வழங்கப்படும். அழுத்தத்தில் உள்ள மீள்திரும்பியவர்கள் தேவையான உதவிகளுக்கு நலன்புரி திணைக்களத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் என SLBFEஇன் தலைவர் நேர்காணலின் போது குறிப்பிட்டார்.

18 SLBFE பயிற்சி கையேடு 2010, 'Breakdown of Course Content and Time Logs'

விடயங்களாக இருந்த போதிலும், அதற்காக 3 மணித்தியாலங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன[19].பயிற்சியின் சாரம் விரிவானதாக இருந்த போதிலும், அவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நேரம் போதியதாக இருக்கவில்லை. இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் தகைமைகளை கருத்திற் கொண்டு பார்க்கும்போது[20] புதிய உணவு பழக்கங்கள், மொழித் தகைமை,நிதி முகாமைத்துவம், கலாசார கல்வி, பராமரிப்பு தகைமைகள் மற்றும் புலம்பெயரல் நடைமுறைகள் போன்ற விடயங்களை நபர் ஒருவர் புரிந்து கொள்வதற்கு 15 நாட்கள் என்ற அவகாசம் போதியது அல்ல. இந்தப் பயிற்சி நெறியின் ஒரு அங்கமாக புலம்பெயரல் தொழிலாளர்களுக்கு நவீன மலசல கூடங்களைப் பயன்படுத்துவதற்கான 30நிமிடங்களுக்கான நிகழ்ச்சி நிரலும் குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனைத்து திணைக்களங்களும், அதிகாரிகளும் பொருளாதார மீள் ஒருங்கிணைப்பு அத்தியாவசியமானது எனவும், அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என ஒப்புக் கொள்கின்றனர். புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியானது 'வெற்றி பெற்றவர்களுக்கு' மாத்திரமானது எனவும், அவல நிலையில் திரும்புபவர்களுக்கானது அல்ல எனவும் அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

## கருத்து நிலைமாற்றம்

புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்கான மூல மீள் ஒருங்கிணைப்பு கருத்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சமூகவியல் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டது[21]. இந்த நிகழ்ச்சி வள நிலையம் ஊடாக முன்னெடுக்கப்படுவதோடு, மூன்று வருட காலப் பகுதிக்குள் மீளத் திரும்பிய அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர். மீளத் திரும்பியவர்களுக்கு வழங்கப்படும் விரிவான வினாக்கொத்தின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்படல் வேண்டும்.

---

19 SLBFE பயிற்சி கையேடு 2010, p. 78

20 பெரும்பாலான குடிபெயர் தொழிலாளர்கள் தகைமை அற்றவர்கள், 20-44 வயதுக்கு இடைப்பட்டவர்கள், திருமணமானவர்கள், குணதிலக்க, கொட்பிறி (1991), Migration to the Arab World – Experience of Returning Migrants, United Nations University Press, ப. 290-352. 2008வரை ஆண் குடிபெயர் தொழிலாளர்களைவிட பெண் குடிபெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது, வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான SLBFEஇன் 2008ஆம் ஆண்டு வருடாந்த புள்ளிவிபர அறிக்கை, ப. 3, T1, http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%202008%20-%20SLBFE.pdf

21 சமூகவியல் திணைக்கள முகாமையாளர், மற்றும் வேறு திணைக்கள ஊழியர்களுடனான நேர்காணல்

அரசாங்கத்தினால் நடத்தப்படும் வேறுபட்ட செயற்றிட்டங்களுக்கு[22] ஏற்றதாக தமது திறமைகள் மற்றும் தகைமைகளின் அடிப்படையில் அவர்கள் தெரிவு செய்யப்படுவர். அதில் தகைமை பயிற்சி, நிதியுதவி: சுயவேலைவாய்ப்பு மற்றும் சிறு நிதி, உளவள ஆலோசனை, சுகாதார பராமரிப்பு மற்றும் பண முகாமைத்துவம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. வேறுபட்ட அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் அரச வங்கிகளின் உதவியுடன் இந்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் தனியார் துறையின் உதவியும் பெறப்படும். மீளத் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களை சென்றடைவதற்கு மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலகத்தின் தொழில் அதிகாரிகளை நியமிப்பது தொடர்பிலும் இந்த நிகழ்ச்சி முயற்சித்து வருகின்றது. கருத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து, இந்த நிகழ்ச்சி தற்போது சந்தைப்படுத்தல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமது 2 வருட ஒப்பந்தத்தை நிறைவு செய்து மீள் திரும்பிய – 'வெற்றிகரமான புலம்பெயர்ந்தவர்கள்' மற்றும் கடந்த மூன்று வருடங்களுக்குள் சேமிப்பு மற்றும் அல்லது தகைமைகளுடன் திரும்பியவர்கள் தொடர்பில் மாத்திரமே புதிய மீள் ஒருங்கிணைப்பு கருத்து கவனஞ் செலுத்துகின்றது[23]. எங்களால் நேர்காணப்பட்ட பெரும்பாலான புலம்பெயர் தொழிலாளர்கள், கூறிய கருத்துக்களிலிருந்து புதிய ஓய்வூதியத் திட்டம் மீளத் திரும்பியவர்கள் அனைவருக்கும் பொதுவானது என்ற எண்ணக் கருவைக் கொண்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிந்தது. 2010 பெப்ரவரி மாதம் நடைபெற்ற "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சிக்கு முன்னர் இந்த தகவலை வேறுபட்ட மூலங்களில் இருந்து அறிந்து கொண்டதாக அவர்கள் கூறினர். இதன் விளைவாக 2010 பெப்பரவரி நான்காம் திகதி பல்லேகலையில் இடம்பெற்ற ஆரம்பகட்ட பதிவில் புலம்பெயர் தொழிலாளர் அனைவரும் புதிய 'ஓய்வூதிய' திட்டத்திற்கு முண்டியடித்து பதிவினை மேற்கொண்டிருந்தனர்[24].

---

[22] SLBFEஇன் சமூகவியல் திணைக்கள ஊழியர்களுக்கு அமைய, உண்மையான மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி கருத்தாக்கத்தின் கீழ், தொடர்பு விபரங்கள் மற்றும் மீள்திரும்பிய திகதி என்பவற்றை கோரி மாத்திரம் மீள்திரும்பியவர்களுக்கு ஆரம்ப வினாக்கொத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மூன்று வருட காலப்பகுதியில் திரும்பியவர்களுக்கு முழுமையான வினாக்கொத்தை அனுப்பி வைப்பதற்கான முன்னேற்பாடாக இது உள்ளது.

[23] புதிய மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்கான இந்த பிரமாணம் 07.07.2010 நடைபெற்ற நேர்காணலின் போது SLBFEஇன் தலைவரால் அமைக்கப்பட்டு, சந்தைப்படுத்தல் திணைக்கள முகாமையாளரால் உறுதி செய்யப்பட்டது.

[24] இரகசியங்கள் மறைக்கப்பட வேண்டும் என கோரிய சாட்சியங்களுக்கு அமைய, 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாத தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி பதிவுக்காக வரிசையில் நின்று வரிசை குழப்பமடைய காயமுற்ற ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் உள்ளார்.

இவ்வாறான தவறாக வழி நடத்தக் கூடிய தகவல்கள் மட்டுமன்றி தகவல் சேகரிக்கும் நடைமுறையில் ஏற்பட்ட மாற்றமும் கடந்த மூன்று வருடங்களுக்குள் நாடு திரும்பியவர்கள் என்பதற்குப் பதிலாக மீள திரும்பிய அனைவரும் பதிவு செய்யலாம் என்ற கருத்து மயக்கத்தைத் தோற்றுவித்தது. இதன் காரணமாக இரண்டு மாதங்களில் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது பெயர்களை பதிவு செய்தனர். இதன் விளைவாக தம்மிடம் பதிவு செய்து கொண்டுள்ள மீள திரும்பியவர்களின் தரவு தளத்தை உருவாக்கும் ஆரம்ப கட்டப் பணியிலேயே இன்னும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உள்ளது[25]. மேலதிகமாக, இந்தப் புதிய கருத்தின் பிரதான நோக்கமாக இருப்பது பொருளாதார உதவியாகும். முன்னர் இதற்குப் பொறுப்பான திணைக்களமாக சமூகவியல் திணைக்களம் இருந்த போதிலும், தற்போது, புலம்பெயர் தொழிலாளர்களின் சமூக மற்றும் கலாசார விடயங்கள் தொடர்பில் எதுவிதமான செயற்பாடுகளிலும் இதுவரை ஈடுபடாததும் புலம்பெயரல் தொடர்பில் பொருளாதார மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகளில் மட்டுமே அனுபவத்தை உடைய சந்தைப்படுத்தல் திணைக்களத்திற்கு இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது[26]. இவ்வாறு பொறுப்பு நிலைமாற்றம் செய்யப்பட்டமைக்கான காரணம் தெளிவற்றதாகவே இருக்கின்றது.

மேலதிகமாக, சிலாபத்தில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கிளையின் அதிகாரிகளை நேர்கண்ட சந்தர்ப்பத்தில்[27], பதிவு செய்தல் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமையகத்தினால் வெளியிடப்பட்ட விளம்பரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக அறிந்து கொள்ள முடிந்தது. மிகவும் மோசமான வறுமையின் காரணமாக, பத்திரிகைகளை வாங்குவதற்கோ, சிலாபம் நகரத்திற்கு வந்து கிளை அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுச் செல்வதற்கோ

---

25 SLBFEஇன் ஊழியர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணலின் போது, இந்த தரவுத்தளத்தில் தகவல்களை பதிவு செய்யும் வரை, நடைமுறையின் அடுத்த படிநிலை தொடர்பில் எதுவும் அறிந்திருக்கவில்லை என குறிப்பிட்டனர்.

26 SLBFEஇன் சந்தைப்படுத்தல் திணைக்களமே நிறுவனத்தின் பிரசார அங்கமாகும். இலங்கை தொழிலாளர் மற்றும் புதிய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை வெளிநாடுகளில் கண்டறிவதற்கான பணியை இது மேற்கொள்கின்றது. எச்.ஐ.வி/எய்ட்ஸ், கிளை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கல், குடிபெயர் தொழிலாளர்கள் தொடர்பு கொள்வதற்கான மையமாக விளங்குவது மற்றும் தொடர்ச்சியான மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது போன்ற குடிபெயரல் தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்து குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல் என்பவற்றில் சமூகவியல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

27 இந்த புதிய முறை தரவுகளை சேகரிப்பதற்கு பயன்படுவதாக SLBFEஇன் சமூகவியல் திணைக்கள ஊழியர் மற்றும் சந்தைப்படுத்தல் திணைக்கள முகாமையாளர் ஆகியோருடனான நேர்காணல்களின் போது உறுதிப்படுத்தினர்.

இயலாதவர்களாக உள்ளனர். இந்தத் திட்டம் தோல்வியடைவதற்கான காரணங்களில் ஒன்றாக இதனை கருத முடியும். இவ்வாறான தெளிவற்ற தகவல்களை வெளியிடுவதன் மூலம், இந்தத் தொழிலாளர்களை மேலும் சுரண்டி இலாபம் சம்பாதிப்பதற்குத் தீய சக்திகளுக்கு வழிசமைக்கும்[28].

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் அக்கறை மிகுந்த முக்கியமான அரசாங்க நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 1985ஆம் ஆண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 21ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு, 1994ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு அது மேலும் திருத்தியமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் தொழில் அமைச்சின் கீழ் இது இயங்கி வந்தது. பின்னர், 2007ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் (MFEPW) கீழ் மாற்றப்பட்டு, 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. மீண்டும், நவம்பர் மாதம் 2010ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்த மாற்றங்களின் காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை ஸ்தாபன ரீதியான மற்றும் தனிநபர் ரீதியான தொடர்புகளுக்கான நிபுணர்கள் நிறைந்த நம்பககரமான கட்டமைப்பாக ஏற்றுக் கொள்ளும் நிலை தோல்வியடைந்துள்ளது. தொழில் அமைச்சின் கீழ் அனைத்து பிரதேச செயலகங்களிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஸ்தாபிக்கப்பட்டபோது அங்கம் வகித்த பணியாளர்கள் தற்போதைய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செயற்றிட்டத்தில் அங்கம் வகிக்கவில்லை. இதன் காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செயற்பாடுகள் முன்னேற்றம் அடையாத நிலையிலும், ஊழியர்களின் தகைமை மற்றும் அனுபவம் என்பன மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது. திடீரென அமைச்சு மாற்றப்படும்போது, விசேடமாக குறித்த விடயம் தொடர்பில் முன் அனுபவம் இல்லாத, தொழிலாளர் விடயங்கள் தொடர்பிலான ஒழுங்கு முறைமைகள் அறியாத அமைச்சுக்கு மாற்றப்படும்போது, கண்காணிப்பு மற்றும் நம்பகத்தன்மையில் பாதிப்பு ஏற்படுகின்றது.

---

[28] சிலாபத்திற்கு வெளியேயும், உள்ளேயும் உள்ள பல நிறுவனங்கள் குடிபெயர் தொழிலாளர்களை தவறான இடங்களுக்கு அழைத்துச் சென்று இறுதியில் நீண்ட செலவினை அவர்களுக்கு ஏற்படுத்தி விடுகின்றன.

வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களுடனான தொலைபேசி நேர்காணல்கள்[29] ஊடாக மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் அவர்களின் ஆதரவை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. அத்துடன், 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அமைச்சுக்களுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலும், அதன் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியிலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் என்பன அனைத்து கட்டமைப்புக்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றன. அதுதவிர, இந்த ஸ்தாபனங்களுடன் ஆரம்ப தொடர்பாடல் மற்றும் வலையமைப்பை உருவாக்கல் தொடர்பான நடவடிக்கைகளை சமூகவியல் திணைக்களம் மேற்கொண்டிருந்த நிலையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சந்தைப்படுத்தல் திணைக்களத்திற்கு நட்புறவுகளை மீளக் கட்டியெழுப் வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இது பணியகத்தின் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளில் மேலும் தாமதம் ஏற்படுவதற்கு வழி கோலியுள்ளது.

கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தாமதமான நிலை, திணைக்களங்களுக்கு இடையிலான குறைந்த அளவிலான ஒருங்கிணைப்பு, அதிகார மட்டங்களுக்கிடையிலான நெருக்கடி என்பன பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் பயனைப் பெறுவதில்[30] அல்லது பயனுக்கான கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்வதில்[31] இருந்து புறக்கணிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி விடுகின்றன. புலம்பெயரல் சட்டம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றில்

---

29 உண்மையான மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தொடர்பான SLBFE சமூகவியல் திணைக்களத்துடனான முதல் சுற்று கலந்துரையாடல்களில் பங்குபற்றிய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பட்டியலில் உள்ளவர்களுடன், தொலைபேசி நேர்க-ாணல் முன்னெடுக்கப்பட்டது நிறுவனங்கள் மற்றும் நேர்காணல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் மட்டுப்படுத்தப்படவில்லை. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மக்கள் வங்கி, இன்னபிற.

30 நலன்புரி பயன்களை பெறுவதில் தடைகளை உருவாக்கும் கடுமையான முன்நிபந்தனைகளே, காப்புறுதி பயன்களை பெறுவதற்கான கடுமையான ஆவண ஆதார தேவையாகும்: தற்போதும் வெளிநாடுகளில் தங்கியிருந்து மாதாந்தம் $500 மிகுதியை தமது NRFC வங்கிக் கணக்கில் வைத்திருப்பவர்களுக்கே வீடமைப்பு கடன்கள் வழங்கப்படுகின்றன. புலமைப்பரிசில் தேவையாக இருப்பின் பரீட்சைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னரே சிறுவர் பதிவுசெய்யப்பட்டு இருக்க வேண்டும்: சம்பளம் வழங்கப்படாமையை காப்புறுதி உள்ளடக்காது:

31 மீளத் தாயகம் திருப்பி அனுப்பப்பட்ட இரண்டு பணியாளர்கள் காப்புறுதியின் கீழ் பயணச்சீட்டுக்கான கொடுப்பனவாக ரூ 25,000ஐ கோரியிருந்த போதிலும், இதுவரை அவர்களுக்கு ரூ 17,000மாத்திரமே கிடைத்துள்ளது. அவர்கள் மீளதிரும்பி ஒரு வருடமாகியுள்ள நிலையில் மிகுதிப் பணம் கிடைக்குமா என்பது தொடர்பில் உறுதியற்று உள்ளனர். (புத்தளம் மற்றும் குருநாகலில் முறை மே மற்றும் ஆகஸ்ட், 2010 நடத்தப்பட்ட நேர்காணல்கள்).

காணப்படும் குறைபாடுகளால் ஏற்படும் ஒரு சில பிரச்சினைகளே இவை.

## வேறு முகவரமைப்பு நிறுவனங்கள்

புலம்பெயரல் மற்றும் பொருளாதார மற்றும் சமூகஞ் சார்ந்த, பெரும் எண்ணிக்கையிலான விடயங்கள் என்பவற்றின் விளைவாக, பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சில அரசாங்கக் கட்டமைப்புக்குள்ளடங்கிய நிறுவனங்கள் ஆகியன முழுமையான நலன் பங்காளர்களாக புலம்பெயரல் செயன்முறையில் விளங்குகின்றன. இவற்றில் பெரும்பாலானவை அதிக அளவிலான புலம்பெயரல் தொழிலாளர்கள் காணப்படும் பகுதியில் செயற்படுவதுடன், அடிமட்ட மக்களுக்கான வாழ்வாதாரத் திறன் பயிற்சிகள், கடன்கள் மற்றும் நிதி முகாமைத்துவம், உளவள ஆலோசனை என்பவற்றை மீள் ஒருங்கிணைப்பு உதவியாக வழங்குகின்றன. ஆய்வாளர்கள் கொழும்பைத் தளமாக கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களையும், இலக்கு வைக்கப்பட்ட சில இடங்களான கண்டி, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் இத்தேவைக்காகத் தொடர்பு கொண்டனர். உள்ளூர் புலம்பெயரல் தொழிலாளர்களுடன் செயற்படுவதன் ஊடாக, மீள் திரும்பியவர்களின் தேவைகள் தொடர்பான தெளிவினை அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டுள்ளன. இதன் மூலம் முறைசாரா கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செயற்பாடுகளையும் கடந்து சென்று பணியாற்றுவதற்கு இவர்களுக்கு இயலுமாய் உள்ளது. எவ்வாறாயினும், நிறுவனங்களுக்கு இடையில் தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பில் காணப்படும் குறைபாடு காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட சீரான போக்கைக் கொண்டிருக்கவில்லை.

இதன் காரணமாக, புவியியல் ரீதியாக சில பகுதிகளில் மேலதிக் கவனமும் அதேவேளை சில பிரதேசத்தவர் முற்றாகப் புறக்கணிக்கபடுவதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தனிப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பிலேயே அரச சார்பற்ற நிறுசனங்கள் அதிகளவு கவனஞ் செலுத்துகின்றன. இதன் காரணமாக இவை பிரச்சினைகளின் தெளிவான பின்னணியை நோக்கத் தவறிவிடுகின்றன. பரந்த அளவில் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கு, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு அத்தியாவசியமானதாகும்.

பல சந்தர்ப்பங்களில், பயனாளிகளுக்கு வாழ்வாதார சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட சவர்க்காரம் தயாரித்தல், தையல் வேலை, கைவினைப் பொருட்கள் உற்பத்தி, கூடை பின்னல், நெசவு, வீட்டுத்

தோட்டம், கால் நடை வளர்ப்பு, உணவு பதனிடல் போன்ற திறன்சார் பயிற்சிகளின் சாத்தியப்பாடு தொடர்பான ஆய்வில் குறைபாடு உள்ளது. ஏனெனில், இந்த பயிற்சிகளின் விளைவாக பெறப்படும் உற்பத்திகளுக்கு உள்ளூர் மற்றும் தேசிய சந்தைகளில் எவ்வாறான கேள்வி நிலவுகின்றது என்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும். உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் தொடர்பிலான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டியது குறித்த குறைபாடு, தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும், ஏற்கனவே பிரபல்யம் பெற்றுள்ள பண்டக் குறியீடுகளுக்கு மத்தியில் சந்தைகளில் போட்டியிட்டு கேள்வியை அதிகரிப்பதற்கான வாய்ப்பினை குறைத்து விடுகின்றன.

கொழும்பில்

## புலம்பெயரலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)[32]

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச ஒன்றியமானது ஐரோப்பாவில் இடம்பெயர்ந்த நபர்கள், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களுக்கு உதவி புரியும் வகையில் 1951ஆம் ஆண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது உலகெங்கிலும் பாதுகாப்பான குடிபெயரலை நிர்வகித்து அதற்கு ஆதரவு வழங்கும் நடவடிக்கைகளை IOM உள்ளடக்கியுள்ளது. அதன் பிரதான நிதியுதவியாளர்களாக அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், சுவீட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் கனடா ஆகிய அரசாங்கங்கள்[33] உள்ளடங்கியுள்ளன. அத்துடன், சர்வதேச நிறுவனங்களான ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி (UNDP) என்பனவும் அங்கம் வகிக்கின்றன.

தோல்வியடைந்த புகலிடம் கோருவோர் மற்றும் சட்டத்துக்கு விரோதமாகக் குடியேற முயன்றவர்கள், கைவிடப்பட்ட புலம்பெயர்ந்தவர்களுக்கென 'தாமாக விரும்பி மீளத் திரும்பல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை' இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து IOM முன்னெடுத்து வருகின்றது. அண்ணளவாக ஒருவருக்கு 3000 யூரோக்கள் என்ற அளவில் சுயவேலைவாய்ப்பு திட்டத்தையும் அது முன்னெடுக்கின்றது. புலம்பெயர் தொழிலாளர் பயனாளிகள் சாத்தியமான பிரேரணைகளை சமர்ப்பிப்பதுடன், அவர்களது பங்கும் இருத்தல் வேண்டும். IOM பிராந்திய

32 16.06.2010 நிகழ்ச்சி முகாமையாளருடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன)

33 இருபக்க நிறுவனங்கள் உள்ளடங்கலாக, ஆனால், சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய நிறுவனம் (AusAID), UK Home Office, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம் (USAID) மற்றும் இன்னபிறவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. http://www.iomsrilanka.org/iom/?page_id=10

அலுவலகங்களினால் உளவள ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. IOM நன்கு ஸ்தாபிக்கப்பட்ட, நிதியுதவியளிக்கப்பட்ட அரச மட்டத்தில் இயங்கும் சர்வதேச நிறுவனமாக இருப்பதன் காரணமாக, நிதி வளத்திலும், வழங்கள் ஏற்பாடுகளிலும் சிறந்த கட்டமைப்பு கொண்ட அமைப்பாக விளங்குகின்றது. அத்துடன், சில உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் உதவி அளிக்கின்றது.

மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் அவர்களிடம் விளக்கக் கூடிய எண்ணம் மற்றும் கருத்து உள்ளது. பயனாளிகளின் தகைமைகள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் சந்தைத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் அவர்கள் உதவி வழங்குகின்றனர். அனைவருக்கும் 'பொதுவாக வடிவமைக்கப்பட்ட தீர்வு' என்ற கோட்பாட்டின் மீது அவர்கள் நம்பிக்கை இல்லாதிருப்பதே இதற்கக் காரணம். எவ்வாறாயினும், யாருக்கு உதவி செய்ய வேண்டும் என்பது குறித்து தமது நிதியுதவியாளர்களின் விருப்பங்கள் தொடர்பில் அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக உள்ளனர். ஐரோப்பிய நிதியுதவி என்பதன் அடிப்படையில் ஐரோப்பாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் மற்றும் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களுக்கான மீள் ஒருங்கிணைப்பு தொடர்பிலேயே இவர்கள் அதிகம் கவனஞ் செலுத்துகின்றனர்.

இங்கு மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மீளத் திரும்புபவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்[34]. எவ்வாறாயினும், புத்தளத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தவறாக அழைத்துச் செல்லப்பட்டு நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கு IOM உதவி வழங்குகின்றது. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவமான கிராம அபிவிருத்தி நிதியத்தின் (Rural Development Fund) ஊடாக வாழ்வாதார உதவிகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. குழு சார்ந்த உதவியிலும் பார்க்க, தனி நபர் சார்ந்த உதவிகள், இவர்களால் உதவி பெறப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணமாக உள்ளது.

## புலம்பெயர்பவர் சேவை நிலையம்[35]

சுயாதீன தொழிற்சங்கமான தேசிய தொழிலாளர் காங்கிரஸின் செயற்படும் கரமாக MSC விளங்குகின்றது. சுயவேலைவாய்ப்பு நிகழ்ச்சிகள், சிறு கடன் உதவிகள்,

[34] கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் போது குவைத் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் இருந்து குடிபெயர் தொழிலாளர்கள் மீள் திரும்ப IOM உதவியது. அவர்களுக்கு ஈராக்கில் கிளை இருப்பதுடன், குடிபெயர் தொழிலாளர்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தி வேறு நாடுகளிலும் கிளைகளை திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

[35] 17.06.2010, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன).

மற்றும் சேமிப்பு திட்டங்கள் ஊடாக மீள்திரும்பும் புலம்பெயர்ந்தவர்களின் மீள் ஒருங்கிணைப்புக்கு இந்த நிலையம் உதவி செய்கின்றது. பாதுகாப்பான புலம்பெயரல்[36] மற்றும் வெற்றிகரமான மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நாடு முழுவதிலும் அடிமட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 'திரட்டிகளை'[37] பயன்படுத்தல் என்பன தொடர்பில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இந்தத் திரட்டிகள் MSC மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நடவடிக்கை கட்டமைப்பு (ACTFORM) ஆகியவற்றுக்கு இடையில் பகிரப்பட்டுள்ளன. பரந்த அளவிலான வெளிப்பாடு, செல்வாக்கு மற்றும் அனுபவத்தைப் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவும்போது பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

MSC ஆனது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், சர்வேத தொழிலாளர் கூட்டொருமைப்பாட்டுக்கான அமெரிக்க நிலையம் (ACILS) மற்றும் ஆசியாவின் புலம்பெயர்வோர் மன்று (Migrant Forum in Asia) ஆகியவற்றுடன் நெருக்கமான உறவு கொண்டுள்ளது. இதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கின்றது.

மறுபுறத்தில், அடிமட்டத்தில் இருந்து புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் நெருக்கம் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளனர். இதன் காரணமாக, இவர்கள் புலம்பெயரல் நடைமுறையில் மிகவும் பெறுமதி மிக்க காரணியாக உள்ளனர்.எவ்வாறாயினும், தமது தற்போதைய நடவடிக்கைகள் அல்லது புதிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான போதிய நிதியுதவியின்றி அவர்கள் உள்ளனர்.

தகவல்களை சேகரிப்பதற்கும், விநியோகிப்பதற்கும் மற்றும் புதிய நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் MSC ஐ பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

---

36 நிகழ்ச்சி முகாமையாளருக்கு அமைய (30.11.2010), வெளிநாடுகளுக்கு ஆட்கள் தவறாக கொண்டு செல்லப்படுவதனை தடுப்பதற்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு MSC க்கு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் நிதியுதவி வழங்கியுள்ளது. அது, மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் மீள்திரும்பியவர்களுடனும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தகவல் விநியோகத்தில் செயற்பட்டு வருகின்றது.

37 மக்களை ஒன்று திரட்டுபவர்கள் பயிற்சி பெற்ற, தகுதி பெற்ற பணியாளர்கள். அவர்கள் கண்காணிப்பு செய்தல், ஆலோசனை வழங்கல், குடிபெயர் தொழிலாளர்களுக்கு பயற்சி அளித்தல், தகவல்களை சேகரித்தல் மற்றும் குடிபெயர் தொழிலாளர்கள், நிறுவனங்கள் என்பவற்றுடன் வலையமைப்பை ஏற்படுத்தல் என்பவற்றில் ஈடுபடுவர்.

## லங்கா பிளஸ்[38]

எச்.ஐ.வி/எய்ட்ஸ்[39] ஆகியவற்றுடன் வாழ்பவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவை இந்த நிறுவனம் வழங்குகின்றது. இதில் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகம் காணப்படுகின்றது. இந்த நிலையம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்துடன் இணைந்து பணியாற்றி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதுடன், சுயவேலைவாய்ப்பு திட்டங்களிலும் உதவி புரிகின்றது[40] [41]. நாட்டின் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் இந்த நிறுவனம் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இலங்கையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், ஆனால் அவற்றில் பெரும்பாலானவை பதிவு செய்யப்படுவதில்லை எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். துரதிரு'டவசமாக போதிய நிதி வசதியின்மை காரணமாக இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. புலம்பெயர் தொழிலாளர்கள் மிகவும் சிக்கலான நிலையில் உள்ளதாகவும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் போதியதாக இல்லை எனவும் அவர்கள் உணர்கின்றனர். இதனால், புலம்பெயர் தொழிலாளர்கள் தடுப்பு முறைகள் மற்றும் தவிர்த்தல் முறைகள் தொடர்பில் தெளிவற்றவர்களாக இன்னலுக்கு உள்ளாகின்றர் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிறுவனத்தின் அறிவு மற்றும் அனுபவத்தை கவனத்திற் கொண்டு தகவல்களை விநியோகிப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இவர்களை பயன்படுத்துவது பாராட்டப்படக் கூடியது. தற்போது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் பயிற்சி வழங்கப்பட்டு வந்தாலும், தமது பங்களிப்பை வழங்குவதற்கு லங்கா பிளஸ் விருப்பம் தெரிவித்துள்ளது.

---

38 26.06.2010 லங்கா பிளஸ் நிகழ்ச்சி அதிகாரி நேர்காணப்பட்டார் (விளக்கங்கள் கீழே)

39 நேர்காணலின் போது, இலங்கையிலிருந்த கணவன் வேறொரு பெண்ணுடன் பாலுறவு கொண்டு, அதன் மூலம் ஏற்பட்ட எச்,ஐ.வி/எய்ட்ஸ் நாடு திரும்பிய பெண்ணுக்கு, தொற்று ஏற்பட்டுள்ளது என்ற சம்பவம் ஒன்று பதிவாகியது.

40 எச்,ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை நீண்ட கால தொழிலில் வைத்திருப்பது சிக்கலான காரியம். இதன் காரணமாக இவர்களை தொழில் வைத்திருக்க பெரும்பாலான தொழில் வழங்குநர்கள் விரும்புவதில்லை. அல்லது குறித்த நிலை அறியக் கிடைத்ததும் அவர்களது ஒப்பந்தங்களை இடைநிறுத்துகின்றனர். இதன்பொருட்டான மருத்துவ சிகிச்சைகளும் செலவு மிகுந்தவையாகும்.

41 எச்,ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்களின் தகைமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்க பயிற்சி நிகழ்ச்சிகள் அவசியம் என லங்கா பிளஸ் ஊழியர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நல்லாயன் நிலையம்[42]

இந்த நிலையம் கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவரின் தலைமையில் இயங்குகின்றது. லெபனானில் இடம்பெற்ற இஸ்ரேல்-ஹிஸ்புல்லா யுத்தத்தின்[43] போதான மீள் திரும்பும் பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்பு, மீள வீடுகளுக்கு அனுப்புதல் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இது குறித்த அடிப்படையான ஆய்வு முக்கியமான அஸ்திவாரத்தை உருவாக்கியுள்ளது[44]. இதன்போது கண்டறியப்பட்ட பிரதான விடயங்களாக, புலம்பெயர் தொழிலாளர்களின் மனநிலையைக் கட்டியெழுப்பல், பொருளாதார வலுவூட்டல், திறன் விருத்தி மற்றும் குடும்ப உளவள ஆலோசனை என்பன காணப்படுகின்றன[45]. மீள திரும்பிய பெண்களுக்கு வருமானம் ஈட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. அத்துடன், இந்த சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ 10,000 வரையான நிதியுதவியும் வழங்கப்பட்டன. அம்பாந்தோட்டையில் பயிர்ச்செய்கை, செங்கல் உற்பத்தி என்பனவற்றிலும், புத்தளத்தில் கோழி வளர்ப்பு, கால் நடை வளர்ப்பு என்பனவற்றிலும் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அடிப்படை அறிவு வழங்கப்பட்டது. மேலதிகமாக, ஒவ்வொரு வாரமும் சமூக ஒருங்கிணைப்பாளர்கள் இந்த குடும்பங்களை விஜயம் செய்து பார்வையிட்டனர்[46]. தமது கிராமத்தில் உள்ள சமூகங்களுக்கு உதவும் வகையில் புலம்பெயர் தொழிலாளர்கள் சுய உதவிக் குழுக்களை[47] உருவாக்குவதற்கும் இந்த நிலையம் ஊக்குவிப்பு வழங்கியது. தனிநபர் மற்றும் சமூகங்களின் தேவை, மற்றும் உள்;ர் சந்தைகள் என்பன

42 24.06.2010 சிஸ்டர் ஏன்ஜலா மற்றும் வேறு நிறுவன ஊழியர்களுடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

43 சிஸ்டர் ஏன்ஜலாவுக்கு அமைய யுத்தம் காரணமாக 2006ஆம் ஆண்டு சுமார் 6,200 குடிபெயர் தொழிலாளர்கள் மீள திரும்பியுள்ளனர்.

44 விமானநிலையத்தில் இருந்தே மீள்திரும்பும் பெண் குடிபெயர் தொழிலாளர்கள் தொடர்பில் நல்லாயன் நிலையத்தினர் தகவல்களை சேகரிக்கின்றனர். வேறுபட்ட கத்தோலிக்க மறைமாவட்டம் மற்றும் மிகவும் தூரமான மற்றும் பின்தங்கிய மூன்று மாவட்டங்களான அனுராதபுரம், புத்தளம் மற்றும் ஹம்பாந்தோட்டை என்ற அடிப்படையில் சேகரிக்கப்படும் தகவல்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த காலப்பகுதியில் ஸுனாமி அனர்த்தங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பில் நாடு கவனஞ் செலுத்தி வந்தமையால் மீள் திரும்பியவர்கள் தொடர்பில் போதியளவு கவனஞ் செலுத்தப்படவில்லை.

45 குடிபெயர்வுக்கு முன்னர் பெரும்பாலான பெண்கள் தமது சாதாரண தர கற்கையை நிறைவு செய்யவில்லை என்பது அடிமட்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இந்த நிலையின் காரணமாக அவர்களை தலைவர்களாக உருவாக்குவதற்கான அறிவுசார் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை தயாரிப்பது சவாலாக உள்ளது.

46 புத்தளத்தில் உள்ள 60 பெண்கள் மற்றும் ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த 45 பெண்களுடன் இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

47 சிகிச்சைக்கு வருகை தரும் கர்ப்பிணித் தாய்மாருக்கு கொலகந்த இலவசமாக வழங்குவதும் இதில் உள்ளடங்குகின்றது.

தொடர்பான முழுமையான அடித்தள ஆய்வு நடைமுறைப்படுத்தலுக்கு முன்னராக இடம்பெற்ற இது மிகவும் அரிதான சந்தர்ப்பமாக உள்ளது. மீள் ஒருங்கிணைப்பானது பொருளாதாரத் தேவைகளைப் போன்றே, சமூக தேவைகளையும் அடையாளங் காட்டுவதாக இருக்கின்றது. துரதிஸ்டவசமாக, தமது பணிகளை தொடர்வதற்கான போதிய நிதி இன்றி இந்த நிறுவனம் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. இதனால், இதன் செயற்பாடுகளின் அளவு குறைந்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது தமது புதிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஆரம்பக்கட்ட ஆய்வுத் தகவல்களையும் தம்முடைய அனுபவத்தையும் பயன்படுத்த வேண்டும்.

## மகளிர் மற்றும் ஊடக ஒன்றியம் (WMC)/ புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நடவடிக்கை கட்டமைப்பு (ACTFORM)[48]

சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி செய்வதற்கான கூட்டமைப்பினால் (CATAW) சுனாமி அனர்த்த காலத்தின்போது வழங்கப்பட்டு, எஞ்சியிருந்த நிதியை கோழி வளர்ப்பு, மர முகமூடி தயாரித்தல், சுப்பர் மார்க்கட்டுக்காக உலர் பலா பொதி செய்து வழங்கல் மற்றும் தபால் உறைகள் தயாரித்தல் போன்ற சிறிய வர்த்தகங்களை நடைமுறைப்படுத்துவதற்கு WMC/ACTFORM பயன்படுத்தியது[49]. மீள் திரும்பும் பெண்கள் வீட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான சந்தையை உருவாக்கிக் கொடுப்பதே இதன் திட்டமாகும்.

மீள திரும்பியவர்கள் உள்ளடங்கிய குழுக்களை அமைத்து ஒவ்வொரு குழுவுக்கு ஸ்தாபன நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் உறுப்பினர்கள் தமது பங்களிப்பையும் வழங்கி கடன் வழங்கக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன[50]. மீள் புலம்பெயரலுக்கு மாற்றுத் திட்டங்களை வழங்கும் எதிர்பார்ப்புடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் தமது உறுப்பினர்களுக்கும், குடும்பத்தினருக்கும் என்றும் நிழல் தரும் குடையாக பொருளாதார மற்றும்

---

48 பாரபட்சமற்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்காகவும், தீர்மானம் எடுத்தல் மற்றும் ஆட்சிமுறையில் சமமான பிரதிநிதித்துவத்தை கொண்டுவருவதற்கும் மகளிர் மற்றும் ஊடக ஒன்றியம் (WMC) ஆதரவு திரட்டுகின்றது. (http://www.womenandmedia.net), என உறுப்பினர்களுக்கு தலைமைத்துவ தகைமைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கும் மற்றும் குடிபெயர் சேவைகள் நிலையத்துடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்கி வரும் குடிபெயர் தொழிலாளர்களுக்கான நடவடிக்கை கட்டமைப்பின் (ACTFORM) ஸ்தாபகரும், WMC நிகழ்ச்சி அதிகாரியுடனான நேர்காணலின் போது 30.06.2010 தெரிவித்தார்.

49 எதிர்காலத்தில் அழகியல் கலை தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கும் WMC/ACTFORM திட்டமிட்டு வருகின்றது.

50 மீள்திரும்பும் குடிபெயர் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக:கும் தலா ரூ 100,000 வழங்கும் வகையில் நிதி ஒதுக்குவதற்கு ACTFORM திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

சமூக உதவிகளை வழங்குகின்றன. கொள்கை அளவில் பங்குபற்றுதல் மற்றும் செல்வாக்கை செலுத்தக் கூடியதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் WMC/ACTFORM சிறந்த உறவை பேணி வருகின்றது. ACTFORM[51] தளத்தின் ஊடாக புலம்பெயரல் தொடர்பில் சர்வதேச அக்கறையையும் அது வெளிப்படுத்தி வருகின்றது. எனவே அது மேலதிகமாகத் தமது அறிவு மற்றும் நிபுணத்துவத்தை பொதுவான இலக்கு ஒன்றை அடையும் நோக்கத்துடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் சமூக நிறுவனங்கள் உள்ளிட்ட வேறு நலன் பங்காளர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## கூட்டொருமைப்பாட்டுக்கான நிலையம்[52]

கூட்டொருமைப்பாட்டுக்கான நிலையம் (முன்னர் சர்வதேச தொழிலாளர் கூட்டொருமைப்பாட்டுக்கான அமெரிக்க நிலையம் என அழைக்கப்பட்டது) என்பது ஐக்கிய அமெரிக்காவின் தொழிலாளர் கூட்டமைப்பின் வெளிநாடுகளுக்கான சம்மேளனமாகும் (ALF-CIO). சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்கள் மற்றும் வேறு புலம்பெயரல் தொழிலாளர் நிகழ்ச்சிகளை அது முன்னெடுக்காது. அதற்குப் பதிலாக அவர்கள் பங்காளர் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவர். உதாரணமாக MSC மற்றும் ACTFORM என்பனவற்றுக்குத் தமது சார்பில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

நேர்காணலின்போது, கூட்டொருமைப்பாட்டுக்கான நிலையமானது MSC ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தெரிவு செய்யப்பட்ட மிகவும் முக்கியமான புவியியல் சார்ந்த பகுதிகளில் மீள் திரும்பியவர்களுக்கான சுயவேலைவாய்ப்பு நிகழ்ச்சிக்கான திறன்சார் பயிற்சியின் ஆரம்பக் கட்ட திட்டமிடல் நிலையில் ஈடுபட்டிருந்தது. குறித்த பகுதிகளில் மீள் திரும்பியவர்களிடம் முன்னுரிமைகள் அல்லது தேவைகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் ஆய்வு ஒன்றை நடத்துமாறு MSC யிடம் கோரப்பட்டிருந்தது.

அவர்களது கண்டறிதல்கள் மூலமாக மீள் திரும்பியவர்கள் குறிப்பாகப் பலாப்பழம் உலர வைத்தல், அதனைப் பதனிடல், மற்றும் டின்னில் அடைத்தல் போன்ற திறன்பயிற்சியைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாயிருப்பது தெரியவந்தது.

---

[51] ஆலைகளில் இருந்து குறைந்த விலைக்கு நெல்லினை கொள்வனவு செய்து, அதிகளவு இலாபம் வைத்து கூட்டுறவு நிலையங்களுக்கு விற்கும் இலாபகரமான வர்த்தக நடவடிக்கைகளை பிலிப்பைன்ஸ் ஸ்தாபித்துள்ளதாக நேர்காணப்பட்டவர்கள் தெரிவித்தனர். இதேநிலையே எண்ணெய்க்கும் காணப்படுகின்றது.

[52] 09.07.2010 நிகழ்ச்சி அதிகாரியுடன் நேர்காணப்பட்டது (விளக்கங்கள் கீழே)

கூட்டொருமைப்பாட்டு நிறுவனம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமைகள் தொடர்பில் ஒரு விழிப்புணர்வை தமது திட்டங்களில் உள்ளடக்க விருப்பம் தெரிவித்தாலும் அதேபோன்று செய்ய பங்காளர் நிறுவனங்களை ஊக்குவித்தாலும் புலம்பெயர் தொழிலாளர்கள் சுயவேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சிகள், நிதியுதவி அல்லது கடன் வசதிகள் என்பவற்றிலேயே அதிக ஆர்வம் செலுத்தி இருந்தனர். இந்த வேற்றுமையின் காரணமாக, நிதியுதவியாளர்களின் தேவைகளுக்கும், பயனாளிகளின் விருப்பங்களுக்கும் இடையில் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி சேகரித்தலில் தடை உருவாகின்றது. எனவே, பயனாளிகள் சுய வேலைவாய்ப்பு தகைமைகள் தொடர்பில் பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு முன்னர் உரிமைகள் தொடர்பில் பயிற்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையை பங்காள நிறுவனங்களுக்கு கூட்டொருமைப்பாட்டுக்கான நிலையம் விதிக்கின்றது. எனவே, நடைமுறைப்படுத்தில் இது சில தடைகளை ஏற்படுத்துகின்றது. புலம்பெயர் தொழிலாளர்களின் அறிவை உரிமைகள் மற்றும் சுயவேலைவாய்ப்பு தகைமையில் விருத்தி செய்வது சிறந்த முறையாகும். இது கடினமானதொரு காரியமாகவிருந்தாலும், இது தான் அவசியமாகத் தேவைப்படும் அணுகுமுறையாகும். மீள் திரும்பிய புலம் பெயர் தொழிலாளர்களை வெறுமனே பயனாளிகள் என்று பார்க்காமல் அவர்கள் தம்மை உரிமைகள் உடையவர்கள் என்று கருதுவதற்கு வகை செய்யவேண்டும்.

### கண்டியில்...

### பெண்கள் அபிவிருத்தி நிலையம் (*WDC*)[53]

WDC ஆனது 10 மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றது. நாடு முழுவதிலும் 14 மன்றங்களையும் அல்லது திறன் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான பெண்கள் குழுக்களையும் ஸ்தாபித்துள்ளது[54]. எச்.ஐ.வி/எய்ட்ஸ் [55] உள்ளிட்ட புலம்பெயரல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது குறித்தாகவே மன்றங்கள் அதிகம் கவனஞ் செலுத்துகின்றன. மன்றத்தின் ஊடாக தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்புக்கான கடன்களையும் WDC

---

[53] WDC என்பது கண்டியில் அமைந்துள்ள நிறுவனமாகும். இது அழுத்தத்தில் உள்ள பெண்களுக்கு நிதி உதவி, பாதுகாப்பு மற்றும் உளவள ஆலோசனை என்பவற்றை வழங்குகின்றது. 28.07.2010 தலைவர் நேர்காணப்பட்டார் (விளக்கங்கள் கீழே).

[54] தையல் மற்றும் சமையல் போன்ற அடிப்படை தகைமைகளுக்காக வருடாந்தம் 40 பயிற்சிகள் நடத்தப்படுவதாக WDC தலைவர் குறிப்பிட்டார்.

[55] 2009ஆம் ஆண்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் அச்சுறுத்தல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வீதி நாடகங்கள் WDCஇனால் நடத்தப்பட்டன. அது மிகவும் வெற்றிகரமானதாக இருந்ததோடு, புலம்பெயர் தொழிலாளர் மற்றும் அவர்களது கணவருக்கானதாக இருந்தது.

வழங்குகின்றது[56].

இந்த நிலையத்தினால் 'ஸ்திரீ' என்ற சூழலுக்குத் தீங்குபயக்காத அன்பளிப்புப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றும் நடத்தப்படுகின்றது. இங்கு பெண்களினால் வீடுகளில் தயாரிக்கும் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. உயர்ந்த தரமுடைய பொருட்கள் [57] வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. மரத்தாலான சிற்பங்கள், கைகளால் நெய்யப்பட்ட துணிகள், கைகளால் தயாரிக்கப்பட்ட ஆபரணங்கள் மற்றும் மீள் சுழற்சி செய்யப்பட்ட காகிதங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

துரதிஸ்டவசமாக, வேறு பகுதிகளிலும் இதேபோன்ற கடைகளை ஸ்தாபிப்பதற்கான போதியளவு நிதியின்மையால் நிறுவனம் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. இதேவேளை, இந்த நிலையத்தினால் ஏற்கனவே நடத்தப்பட்டு வரும் கடை இலாப நோக்கற்ற வர்த்தகமாக இருக்கின்ற போதிலும், உதவியில்லாத பெண்களின் நலன் கருதி ஆரம்பிக்கட்ட இந்த விற்பனை நிலையத்திற்கு வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக நாம் அறிந்தோம்.

WDC இல் சட்டத்தரணி மற்றும் உளவள ஆலோசகர் போன்ற வசதிகளை வழங்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இங்கு மாதாந்தம் சுமார் 80பேர் வருகை தருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து மீளத் திரும்பி, தமது குடும்பத்திற்கு செல்வதற்கு முன்னர் சமூகத்திற்குத் தெரியாமல் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் கர்ப்பிணைத் தாய்மாரும் இங்கு தங்கியுள்ளனர்[58]. WDC தொடர்ச்சியாக துஸ்பிரயோகத்திற்கு இலக்காகி மீள திரும்பியுள்ள பெண்களுடன் இணைந்து பணியாற்றி, அவர்களுக்கான உளவள ஆலோசனை மற்றும் சுயவேலைவாய்ப்புக்கான உதவிகளை வழங்குகின்றது[59].

---

56 மீள்கொடுப்பனவு என்பதன் அடிப்படையில் ஆரம்பக் கடனாக ரூ 5000 வழங்கப்பட்டது. மேலதிக கடன் ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

57 தாம் பணிபுரியும் பிரதேசங்களுக்கான வழமையான விஜயங்களின் போது நிறுவனத்தினால் அல்லது பெண்களாலேயே தரமான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும். தர நியமப்படுத்தல் கனடிய வளவாளர் மற்றும் நிறுவனத்தின் தலைவரினால் இந்த சுயவேலைவாய்ப்பு உற்பத்திப் பொருட்களின் தரம் பரிசோதிக்கப்படும்.

58 மீள்திரும்பும் இந்த குடிபெயர் பெண்களின் புதிதாக பிறந்த குழந்தைகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திற்கு அல்லது சட்டரீதியான நிர்க்கதியானவர்கள் இல்லத்தில் ஒப்படைக்கப்படும்.

59 குறைந்த வயதில் குடிபெயர் தொழிலாளராக சென்று, குறித்த நாட்டில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர் எச்.ஐ.வி.'.எய்ட்ஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக தலைவர் குறிப்பிட்டார். அவர் மீள குடிபெயர முடியாதவராகவும், வீட்டுக்குச் செல்ல முடியாதவராகவும் உள்ளார். அவருக்கு தேவையான உதவி மற்றும்

இவ்வாறான உதவிகள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், எதிர்காலத்தில் பெண்கள் புலம்பெயர்ந்து செல்வதற்கான ஆர்வத்தையும் குறைக்கின்றது. கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதை நோக்காகக் கொண்டே இந்த கடை என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது.இது சிறந்ததொரு முறையாக இருந்த போதிலும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக சந்தைகளுக்கான பிரவேசம் மற்றும் குறைந்தளவிலான தொழில் நுணுக்க அறிவு என்பன காணப்படுகின்றன. எவ்வாறாயினும், சிறிய எண்ணிக்கையிலான, உயர்ந்த தரமான பொருட்கள் வெளிச் சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

அத்துடன், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேடமான நிகழ்ச்சிகள் எதுவும் WDC யிடம் இல்லை. எனவே, புலம்பெயர் தொழிலாளர்களை அவர்களுடைய பரந்த செயற்றிட்டங்களின் ஒரு பகுதியாகவே கவனிக்கக் கூடியதாக உள்ளது. இதனால், புலம்பெயர்தல் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளை நேரடியாக அடையாளங் காண முடியாதுள்ளது.

### கரிடாஸ்-செடிக் (***CARITAS***[60]***-SETIK*** [61])

CARITAS என்பது கத்தோலிக்க தேவாலயத்தினால் நடாத்தப்படும் சர்வதேச நிறுவனமாகும். நாடு முழுவதும் பல கிளைகள் உள்ளன[62]. அதன் ஒரு கிளையாகவே கண்டியில் அமைந்துள்ள SETIK காணப்படுகின்றது[63]. இந்த நிறுவனம் தனித்து குடிபெயரும் தொழிலாளர்களில் பெண்களுக்காக மாத்திரம் செயற்படுவதோடு, விழிப்புணர்ச்சியை வளர்த்தல், உளவள ஆலோசனை, திறன் பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு உதவி என்பவற்றின் ஊடாக மீள் ஒருங்கிணைப்பு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. லெபனானில்[64] யுத்தம் காரணமாக மீள திரும்பிய பெண்களுக்கு உதவும்

உளவள ஆலோசனை WDCஇனால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

60 கரிட்டாஸ் இலங்கை-சிடெக் என்பது இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் சமூக அங்கம் மற்றும் 162 கத்தோலிக்க நிவாரண நிறுவனங்கள், அபிவிருத்தி மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் என 200 நாடுகளில் பணியாற்றி வரும் கரிட்டாஸ் இன்டர்நெஷனலின் ஒருங்கிணைப்பில் செயற்படுவதாகும். http://www.caritaslk.org/

61 28.07.2010 பாதிரியார் ஜான்ஸ் மற்றும் வேறு ஊழியர்களுடன் நேர்காணல் இடம்பெற்றது (விளக்கங்கள் கீழே)

62 2003ஆம் ஆண்டு கரிட்டாஸ் இலங்கை கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது காலி, பதுளை, குருநாகல், அனுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களில் கிளைகள் உள்ளன.

63 தொழிலாளர் குடிபெயர்ந்து செல்லும் ஜோர்தான், குவைத், லெபனான் மற்றும் சைப்ரஸ் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் கரிட்டாஸுக்கு கிளைகள் உள்ளன.

64 லெபனானில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட குடிபெயர் பெண் தமது சுயவேலைவாய்ப்பை

வகையிலேய SETIK ஆரம்பிக்கப்பட்டது. இதன் பொருட்டு 'பாதுகாக்கும் குடை'[65] (ரக்கவருண ஹவுலா) என்ற நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.எவ்வாறாயினும், புதிய இலக்குக் குழுவில் அனைத்து மீள் திரும்பியவர்களும், ஆற்றல் உள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்கள் உள்ளடங்குகின்றன[66]. தகைமையற்ற பணிகளுக்காக புலம்பெயர்வதனை தவிர்க்குமாறு பெண்களிடம் கடந்த 4-5 வருடங்களாக CARITAS வலியுறுத்தி வருகின்றது.

இதன் பொருட்டு தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் மற்றும் பிரசாரங்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்[67]. எவ்வாறாயினும், தொழில் செய்தல் என்பது அடிப்படை உரிமையாகும்[68]. எனவே, தற்போது நிறுவனம் தமது பிரசாரத்தை 'பாதுகாப்பான புலம்பெயரல்' என்ற ரீதியில் மாற்றி அமைத்துள்ளது[69]. அதனைத் தவிர, இந்த நிகழ்ச்சி நிரலின் கீழ் சாத்தியமான புலம்பெயர் தொழிலாளர்களுக்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து விசேட பயிற்சிகளை வழங்கி வருகின்றது[70]. மற்றொரு முக்கிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சியாக இருப்பது ஆட்கடத்தல் சார்ந்ததாகும் [71].

---

முன்னெடுப்பதற்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

65 ரக்கவரன ஹவுல என்பது லெபனானில் இருந்து மீள்திரும்பியவர்களின் குழுவாகும். இது வாழ்வாதார மற்றும் நிதி உதவி, விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல், உளவள ஆலோசனை மற்றும் குடிபெயர் ஆலோசனை என்பவற்றை தமது உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது. அது தற்போது மீள்திரும்பியவர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தினரையும் உள்ளடக்கியுள்ளது. பெண்கள் குடிபெயர்வது, விசேடமாக மீள் குடிபெயர்வதனை தவிர்ப்பதே இந்த குழுவின் நோக்கமாகும்.

66 ஹவுலவில் தற்போது 150க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

67 ஐந்து வயதுக்கு குறைவான பிள்ளைகளை உடைய தாய்மார் குடிபெயர்ந்து வெளிநாடு செல்வதனை தடை செய்யும் வகையில் 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசாங்கம் கொண்டு வந்த உத்தரவை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்த்தன (Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, ஜுன் 2008, ACTFORM & WMC ப. 9).

68 1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பு, உறுப்புரை 14 (g)-(i)

69 பாதுகாப்பான குடிபெயரல் என்பது, SLBFEயுடன் பதிவு செய்தல் மற்றும் அதன் புறப்படுவது சார்ந்த பயிற்சிகளை பயன்படுத்தல், அத்துடன், கரிட்டாஸ் மற்றும் அதேபோன்ற பங்கதாரர் நிறுவனங்களால் வழங்கப்படும் பயிற்சிகளை பயன்படுத்தல் என்பனவாகும்.

70 SLBFEயுடன் முகவரின் தகவல்களை பரிசோதித்தல், மற்றும் சவூதி போன்ற நாடுகள் முஸ்லீம் நபர்களையே தொழிலாளர்களாக விரும்புவதனால், முகவர்கள் தமக்கு ஏற்ற வகையில் தகவல்களை மாற்றிவிடும் சந்தர்ப்பம் இருப்பதனால் தாமாகவே சென்று கடவுச்சீட்டுக்களை பெறல் போன்றன தொடர்பில் குடிபெயர் தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

71 கரிட்டாஸ் கள அதிகாரிகளை நியமித்துள்ளது. அவர்களில் ஒவ்வொருவரும் நான்கு பகுதிகளுக்கு பொறுப்பாக இருப்பார்கள். அத்துடன், இவர்கள் குடிபெயர் தொழிலாளர்கள், குடிபெயர்ந்து செல்வதற்கு முன்னர் பல்வேறுபட்ட குடிபெயர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள்

சுயவேலைவாய்ப்பு மற்றும் தகைமை பயிற்சி என்பன தவிர[72], புலம்பெயர் தொழிலாளர்களின் கல்வி/திறன் அளவு, அவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் வழங்கக்கூடிய நிதிப் பங்களிப்பு என்பன தொடர்பில் ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டது[73]. சுயவேலைவாய்ப்பு நிகழ்ச்சிகளில் பண முகாமைத்துவ பயிற்சிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன[74].

உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துஸ்பிரயோகத்திற்கு இலக்கான மீள் திரும்பியவர்களுக்கான உளவள ஆலோசனைகள் மற்றும் உதவி நிகழ்ச்சிகளை SETIK முன்னெடுத்து வருகின்றது. புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகளும் இலக்கு வைக்கப்பட்டு, அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் மற்றும் வாழ்க்கைத் திறன் வழிகாட்டி நிகழ்ச்சிகளும், இளைஞர் குழுக்களுக்கிடையில் முன்னெடுக்கப்படுகின்றது[75]. வாழ்வாதாரத்தைத் தெரிவு செய்வதற்கு முன்னர் புலம்பெயர் தொழிலாளர்களின் கல்வி மற்றும் தகைமை மட்டம் தொடர்பில் ஆரம்ப ஆய்வினை முன்னெடுப்பதானது SETIK இன் பொருளாதார மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய உதவும். IOM உடன் அவர்களுக்கு இருக்கும் கவன ஈர்ப்புத் தன்மை இதனை மேலும் உறுதி செய்கின்றது. இதற்குப் புலம்பெயர் தொழிலாளர்கள் ஆரம்ப நிதி பங்களிப்பை வழங்க வேண்டும். எவ்வாறாயினும், சந்தை மற்றும் பயனாளிகள் தொடர்பில் எதுவிதமான ஆய்வும் நடத்தப்படவில்லை. பயனாளிகள் தமது முயற்சிகள் மூலமாகவே சந்தை வாய்ப்பைத் தேடிக் கொள்ள வேண்டியதாயுள்ளது. பயனுறுதித் தன்மை மற்றும் இலாபம் ஈட்டலுக்கு இது கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றது.தெரிவு நடைமுறையிலும் சில கட்டுப்பாடுகள் உள்ளமையை உணர முடிகின்றது. ஏனெனில், இவர்களில் பெரும்பாலனோர் தேவாலயம் மற்றும் அதனை வலையமைப்பின் ஊடாக தெரிவு செய்யப்படுகின்றனர்[76].

---

உள்ளடங்கிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை வழங்கல் என்பவற்றை கிராம சேவகர் மற்றும் சமூர்த்தி அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவார்கள்.

72 தையல், கால்நடை வளர்ப்பு, காளான் வளர்ப்பு, சவர்க்காரம் தயாரித்தல் என்பவற்றிலும் தகைமைகள் பயிற்சி வழங்கப்படுகின்றது.

73 குடிபெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார கடனில், குடிபெயர் தொழிலா-ளர்களும் பங்களிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதன் மூலம் வெற்றிக்கான உழைப்பு அதிகம் இருக்கும் என நம்பப்படுகின்றது.

74 உதாரணமாக, குடிபெயர் தொழிலாளர்கள் இரண்டு வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்குமாறு கோரப்பட்டு ஒன்று சேமிப்புக்கும், ஒன்று நாளாந்த நுகர்வுக்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

75 குடிபெயர் தொழிலாளர்களின் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் விசேடமாக கவனஞ் செலுத்தப்பட்டு, நடத்தை மற்றும் போதைப் பொருள் பாவனையை தவிர்த்தல் தொடர்பில் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

76 மீள்திரும்புபவர்கள், குடிபெயர் தொழிலாளர்களாக மாறக் கூடியவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உறுப்புரிமையை

இதனால் இது ஒரு வெளிப்படையான கொள்கைக்கான தன்மையை இழக்கின்றது. குறித்த பகுதியில் நாம் நேர்கண்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் வேறு சிவில் சமூக அமைப்புக்கள் தெரிவித்த கருத்துக்களே இவை.

இதன் காரணமாக கத்தோலிக்க மதத்தைச் சாராத அல்லது கிறிஸ்தவரல்லாத சில குறிப்பிட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மீள திரும்பியவுடன் இந்த நிறுவனத்தை அடைய முயற்சிப்பது தடுக்கப்படுவதுடன் நிறுவனத்தின் செயற்திட்டம் அதிகளனவானோரை சென்றடைவது தடுக்கப்படுகின்றது.

## மானிட அபிவிருத்தி நிறுவனம் (***HDO***)[77]-

HDO என்பது குறித்த பகுதியில் உள்ள பெருந்தோட்டப்புற பணியாளர்களின் நலன்புரிக்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். CARAM ஆசியா[78] சார்பில் பெருந்தோட்டத் துறை புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பில் ஆய்வு ஒன்றினை இந்த நிறுவனம் நடத்தியிருந்தது. இந்த ஆய்வின் போது மீள் திரும்பிய சுமார் 100 பெண்கள் நேர்காணப்பட்டனர். அளவிட முடியாத வறுமையின் காரணமாக பெண்கள் தொழில் தேடி புலம்பெயர வேண்டிய அழுத்தம் குடும்பங்களில் இருப்பதனை இந்த ஆய்வின் மூலம் அவர்கள் கண்டறிந்துள்ளனர்[79]. அதேவேளை, கணவனும் மனைவியும் பிரிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிப்பதன் காரணமாகவும், பெண்கள் புலம்பெயர்ந்து செல்ல நேரிடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் முறையற்ற பாலுறவு போன்ற சம்பவங்கள் அதிகரிக்கவும் பெண்கள் புலம்பெயர்ந்து செல்வது காரணமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், பெருந்தோட்டத் துறையில் பல புலம்பெயர் தொழிலாளர்கள் இருக்கின்ற போதிலும், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் எதுவும் HDO யிடம் இல்லை.

---

மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக தேவாலய வலையமைப்புக்கள் உள்ளன.

77 30.07.2010 நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

78 இந்த ஆய்வுக்கு ஐ.நாவின் பொருளாதார மற்றும் சமூக பேரவையின் விசேட தூதுவர் அந்தஸ்து உள்ள Coordination of Action Research on AIDS and Mobility (CARAM Asia) நிதி வழங்கியுள்ளது.

79 வறுமை, போதிய வாழ்வாதாரம் இன்மை மற்றும் குறைந்த அளவிலான கல்வி என்பவற்றுக்கு மேலதிகமாக, காணி உரிமைகள் அந்தஸ்து இன்மையை நேர்காணப்படுபவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நிலம் அல்லது வீடமைப்பு இல்லாதவர்கள் எவரும்வீடமைப்புத் திட்டத்துக்கு தகுதியானவர்களாக இல்லை. இதன் காரணமாக இவர்கள் குடிபெயருவதற்கு நேருகின்றது என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பிரதேச செயலகம் [80]-

கண்டியின் கங்க வட்ட கோரளை பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி அதிகாரி சுமார் 1000 பெண்களுடன் இணைந்து பணியாற்றுகின்றார். இதில் புலம்பெயர் தொழிலாளர்களாக இருந்து மீள திரும்பியவர்களும், புலம்பெயர் தொழிலாளர்களாக செல்லக் கூடியவர்களும் [81], மீள திரும்பும் சாத்தியம் உள்ளவர்களும், அவர்களது குடும்பங்களும் உள்ளடங்குகின்றனர்.

பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பு உதவி மற்றும் பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக பெண்கள் புலம்பெயர்ந்து தொழிலுக்காக செல்வதனை தவிர்ப்பதற்கு பிரதேச செயலகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது[82]. வீட்டு உற்பத்திப் பொருட்களான, விசேடமாக மரக்கறிகள் (பானைகளில் வளர்க்கப்படக்கூடியன), ஊதுவர்த்திகள், சவர்க்காரங்கள் என்பன உள்ளடங்குகின்றன. மானிய விலையில் அவர்களுக்கு பிரதேச செயலகத்தினால் உப்பு விற்கப்படுகின்றது. இதனை இவர்கள் குறித்த இலாபத்துடன் மீளவிற்பனை செய்யக் கூடியதாக உள்ளது.

மீள் திரும்பியவர்களால் தயாரிக்கப்படும் பழச்சாறுகள், சட்னி என்பன 'விதாதா வள நிலையத்திற்கு[83]' விற்கப்படுகின்றன. அங்கு அவை தரம் பரிசோதிக்கப்பட்டு 'சல்பில' அல்லது பிரதேச செயலகப் பிரிவிற்குள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கூடும் சந்தையில் விற்கப்படுகின்றன[84]. இவை மிகவும் பயனுள்ள மற்றும் ஸ்திரமான வாழ்வாதார முறையாகும். விசேடமாக தரமானது மிகவும் முக்கியமானது. பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், பெண்கள் தமது வீடுகளில் சுய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பத்தை பிரதேச செயலகம் உருவாக்குகின்றது. அத்துடன், சிறந்த சந்தை பிரவேசத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. வருந்தக்கூடிய விதத்தில், செயலகமானது அரச

---

80 03.07.2010 பெண்கள் அபிவிருத்தி அதிகாரியுடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

81 தாம் பணிபுரியும் பகுதிகளில் குடிபெயர சாத்தியமானவர்கள் மற்றும் மீள் குடிபெயர திட்டமிட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 250 என WDO தெரிவித்தார்.

82 பிரதேச செயலகமும் இலவச ஆயுர்வேத சுகாதார நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. WDO மற்றும் வேறு DSஇனால், சிறுவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களது விடயங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு (உ-ம். செயலகத்தில் அமைந்துள்ள தேசிய நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை) கொண்டு செல்லப்பட்டுள்ளன.

83 விதாத்த என்பது 2005ஆம் ஆண்டு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். தொழில்நுட்ப மற்றும் தகவல் அறிவு கொண்டு செல்லப்படாத பகுதிகளுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை உருவாக்கி, வறுமையை போக்கும் எண்ணத்தில் கிளை நிறுவனங்கள் ஊடாக குறித்த பயிற்சிகளை கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும். http://www.most.gov.lk/programmes.php

84 சவர்க்காரம் போன்ற நுகர்வோர் பொருட்கள், விற்பனை திகதியின் போது WDOஇனால் கண்காணிக்கப்பட்டு அலுவலகத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் தங்கியிருக்க வேண்டிய நிலைமையில் உள்ளது. இதனால் வளங்கள் பற்றாக்குறையாகவும் கிரமமின்றியும் கிடைக்கின்றன. நிதிப் பற்றாக்குறை காரணமாக வேண்டிய போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் தொடர்ச்சியான கள விஜயத்திற்கு தடையாக இருக்கின்றது. சில தூரப் பிரதேசங்களுக்குப் பொது போக்குவரத்து வசதி கிடைப்பதில்லை.

புலம்பெயரல் தொடர்பான சில விடயங்கள் பாராட்டப்படக் கூடியதாக இருக்கின்ற போதிலும், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் எதுவும் வடிவமைக்கப்படவில்லை. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பிரதேச செயலகத்துடன் இணைந்து பணியாற்றுவதில்லை என்று பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் குறிப்பிடுகின்றது. அத்துடன், புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தொடர்பில் தமக்கு அறியத் தரப்படவில்லை எனவும் பிரதேச செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (***SLBFE***) - கண்டி கிளை[85]-

நலன்புரி விடயங்கள், புலம்பெயரல் நடைமுறைகள் மற்றும் முறைப்பாட்டு பொறியமைப்புக்கான தொடர்பு கொள்ளும் மத்திய நிலையமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கண்டி கிளை காணப்படுகின்றது. தற்போது, புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியுடன் அவர்கள் தரவு பதிவில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை சுமார் 50,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், 1000 விண்ணப்பங்கள் மாத்திரமே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன[86]. இந்தத் தேக்க நிலைக்குக் காரணம் போதிய மனிதவளமின்மை ஆகும். நாட்டின் பிற பாகங்களிலுள்ள SLBFE அலுவலகங்கள் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி ஒன்றியத்தின் பயிலுனர்களை இப்பணிக்காகப் பயன்படுத்தும் வேளையில், கண்டி அலவலகம் மட்டும் இந்த மாற்றுத் தெரிவைப் பற்றி அறியாதிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அடுத்த கட்டம் என்ன என்பது தொடர்பில் அதிகாரிகளுக்கு எவ்விதமான முன்யோசனையும் இல்லை. எவ்வாறாயினும், அது மீள் திரும்புபவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. மீள் ஒருங்கிணைப்பு என்ற கருத்து 2008ஆம் ஆண்டின் தேசிய கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், உத்தியோகபூர்வமாக இந்த நிகழ்ச்சி 2010 தொடக்கப் பகுதியிலேயே

---

85 30.07.2010 SLBFE அதிகாரிகளுடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

86 விண்ணப்பங்கள் ஒருமுறை SLBFEதரவுதளத்தில் பதிவு செய்யப்பட்டவுடன், பதிவு இலக்கத்துடன், கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படும் என நேர்காணப்பட்டவர் தெரிவித்தார்.

ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இந்த நிகழ்ச்சி தொடர்பில் கிளை அதிகாரிகளுக்குப் போதியளவு விளக்கம் அளிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், மீள் திரும்புபவர்களுக்கு பல நலன்புரி வசதிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளதாக SLBFE அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார். ஆனால், கடுமையான முன்நிபந்தனைகள் காரணமாக பெரும்பகுதி மக்களுக்கு இந்த வசதிகள் கிடைப்பதில்லை என்பதனை சுட்டிக்காட்டிய வேளையில் அதற்குப் பதில் கிடைக்கவில்லை. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கண்டி கிளையில் தமிழ் பேசும் அதிகாரிகள் குறைவாக இருக்கின்றமையும் புலம்பெயர் தொழிலாளர்கள் சென்று சேவையை பெற்றுக் கொள்வதில், முறைப்பாடுகள் தெரிவிப்பதில் கஷ்டத்தை ஏற்படுத்துவதாக HDO அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### புத்தளத்தில்

### மனித உரிமைகள் ஆணைக்குழு (***HRC***)[87]

புத்தளம் பகுதியில் பல அரசியல், சமூக மற்றும் கலாசார பிரச்சினைகள் நிலவுகின்றமை செயற்றிட்ட அதிகாரியின் நேர்காணலின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இதற்கான மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்றாக பெண்கள் புலம்பெயர்ந்து தொழிலுக்குச் செல்வது உள்ளது. பெண்கள் புலம்பெயர்ந்து தொழிலுக்காகச் சென்றுள்ள இல்லங்களில் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பாலியல் தொந்தரவுகள் போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையையும் விசாரணைகள் மூலம் HRC கண்டறிந்துள்ளது. வீடுகளில் இவ்வாறான துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதனை தவிர்க்கும் வகையில் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளையும், வலுவூட்டல் நிகழ்ச்சிகளையும் குடும்பங்களுக்கும், இளைஞர்களுக்கும் HRC வழங்கி வருகின்றது.துரதிஸ்டவசமாக, இந்த அலுவலகம் பெரும்பாலும் இடம்பெயர்ந்த முஸ்லீம்களின் (IDP) [88]

[87] HRCஇன் தேசிய பாதுகாப்பு மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுகள் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட அதிகாரியுடன் 19.07.2010 நேர்காணல் இடம்பெற்றது (விளக்கங்கள் கீழே).

[88] 1990ஆம் ஆண்டு சுமார் 15,000க்கும் அதிகமான முஸ்லீம்கள் எல்.ரி.ரி.ஈயினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் புத்தளத்தில் குடியேறினர். இந்த இடம்பெயர்ந்த சமுதாயத்தினர் தற்போதும் தற்காலிக வீடுகளிலேயே தங்கியுள்ளனர். தேர்தல் தொகுதியிலும் பதிவு செய்யப்பட்டவர்களாக இல்லை. அவர்களுடைய பாரம்பரிய தொழிலான மீன்பிடியை அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை. தற்போது அங்குள்ள சமுதாயத்தினரே அவர்களுக்கு உதவியாக உள்ளனர். குறைவான வளங்கள், வாழ்வாதாரங்கள், கல்வி, நில உரிமைத்துவம் மற்றும் வேறு சமூக மற்றும் அரசியல் விடயங்கள் என்பன பெரும்பாலான பெண்கள் வெளிநாட்டுக்கு குடிபெயர்வதற்கு காரணமாகியுள்ளன. HRC அதிகாரிகளுக்கு அமைய, சிறுவர் துஷ்பிரயோகங்கள், திருமண முறிவுகள் என்பன புத்தளத்தில் அதிகரித்துள்ளன.

சூழ்நிலை தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றது. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவி செய்தல் அல்லது அவர்களுக்கான மற்றும் அவர்களது குடும்பத்திற்கான மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் எதுவும் HRC யிடம் இல்லை. HRC இன் இந்தக் குறிப்பிட்ட கிளை சமூகங்களுக்கு இடையில் பரந்த வலையமைப்புக்களை கட்டியெழுப்பியுள்ளது. அத்துடன், சட்ட அமுலாக்கல் பொறியமைப்புடன் சிறந்த தொடர்புகளை கொண்டுள்ளது. இது ஒரு அரசாங்க நிறுவனம் என்ற அங்கீகாரத்தையும் மற்றும் சமூகத்தில் மக்களின் நலன்புரியை பாதுகாப்பதற்காக அளப்பரிய சேவை புரியும் நிறுவனம் என்ற நற்பெயரையும் பெற்றுள்ள நிறுவனம். எனவே, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இவர்களது உதவியைப் பெறுவது பயனுள்ளது என ஆலோசிக்கப்படுகின்றது. விசேடமாக புத்தளத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளைகள் இல்லை.

கிராம அபிவிருத்தி நிதியம் (***RDF***[89])

2008ஆம் ஆண்டு IOM இன் நிதியுதவியுடன் பொருளாதார மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி ஒன்றை RDF ஒழுங்கு செய்திருந்தது. ஆட்கள் வஞ்சக் கடத்தப்பட்டு வெளிநாடு அழைத்துச் செல்லப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களை இலக்கு வைத்து இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது[90]. நாட்டிற்குள்ளும், தொழிலாளர்களாகப் புலம்பெயரும் போதும் ஏற்படும் வஞ்சக் கட்டத்தப்பட்டு வெளிநாடு அழைத்துச் செல்லப்படுவதனை இலக்கு வைத்ததாக இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்கான ஆரம்பகட்ட ஆய்வு ஒன்று RDF இனால் நடத்தப்பட்டிருந்தது. IOM இனால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தைப் பயன்படுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அடையாளங் காணப்பட்ட 60 நபர்களில், 32 பேர் வாழ்வாதார உதவி மற்றும் மருத்துவ உதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். இயலுமை மற்றும் தேவைகள் மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையில் வாழ்வாதார உதவி அமைந்திருந்தது. மெழுகுவர்த்தி தயாரித்தல், சில்லறை கடை, கால்நடை வளர்ப்பு மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் என்பன இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சில வாழ்வாதார உதவிகளாகும்.மருத்துவ கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பயனாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு, மருத்துவப் பரிசோதனை, மருந்துப் பொருட்கள் வாங்குவதற்கான உதவி ஆகியன வழங்கப்பட்டன. அவர்களுக்குப் போக்குவரத்துக்கான கொடுப்பனவும்

[89] 19.07.2010 நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிகழ்ச்சி ஊழியர்களுடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

[90] தவறாக ஆட்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படுவது தொடர்பான IOMஇன் வரைவிலக்கணத்தில், குறைந்த வயதுடைய பணியாளர்கள், உறுதியளிக்கப்பட்ட இயலுமை அல்லது வேலை தகுதியற்றவர்கள், உறுதியளிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படாதவர்கள் மற்றும் பாதுகாப்பற்ற பணிபுரியும் சூழல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

கொய்யாவடி கிராமம், ஆடு வளர்ப்பு – 20/07/2010

கால்நடை வளர்ப்புக்காக 5 ஆடுகளை வாங்குவதற்கு தமது மகளுக்கு ரூ 35,000 கிடைத்ததாக பயனாளியின் தாயார் ஒருவர் நமக்கு தெரிவித்தார். இந்த ஆடுகள் கிலோ ஒன்று ரூ 275 என்ற வகையில் விற்கப்பட்டன. ஆரம்பத்தில் 2008ஆம் ஆண்டு கிடைத்த முதலீட்டில் ஐந்து ஆடுகளை விற்று, தற்போது மேலும் புதிதாக 5 ஆடுகள் வாங்கி உள்ளனர். அவற்றில் 2 ஆடுகள் மேலும் 4 ஆட்டுக் குட்டிகளை ஈன்றுள்ளன. தாய் இந்த ஆடுகளை பராமரிக்கும் நிலையில், மகள் அருகில் உள்ள தோட்டத்திற்குச் சென்று தொழில் புரிகின்றார். ஆடுகளை விற்றதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு தமது கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் நோக்குடன் மேலும் 8 கோழிகளை வாங்கியுள்ளனர். அவர்கள் இப்போது முட்டைகளையும் விற்பனை செய்வதுடன் ஆட்டெரு மூலம் கிலோ ஒன்றுக்கு 50 ரூபா வீதம் வருவாய் பெறுகின்றனர்.

வழங்கப்பட்டது. சிறு வர்த்தகங்களின் வெற்றி மற்றும் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் நோக்குடன் தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான பயனுள்ள நிகழ்ச்சிகள் ஊடாக குறித்த பகுதியில் வசிக்கும் முஸ்லீம் சமூகத்துடன் சிநேகபூர்வமான உறவை இந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. துரதிஸ்டவசமாக, புலம்பெயர் தொழிலாளர் மீளத் திரும்பும்போது வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கான நிதி RDF இடம் தற்போது இல்லை.

## மாவட்ட செயலகம்[91]

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் தொடர்பில் அறியாதவர்களாக மாவட்ட செயலக அதிகாரிகள் காணப்படுகின்றனர். செயலகத்தில் அங்கம் வகிக்கும் தொழில் அதிகாரிகள் அத்துடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், (NCPA)[92] ஆகியோர் மிகவும் முக்கியமானவர்களாக உள்ளனர். பணியகத்தின் புதிய நிகழ்ச்சித் திட்டம் பயனுறுதித் தன்மையுடையதாக இருப்பதற்கும் அதன் வெற்றிக்கும் இவர்களின்

91 21.07.2010 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளச்சமூக ஒருங்கிணைப்பாளருடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

92 குடும்பம் மற்றும் சமுதாய மட்டங்களிலும், பாடசாலைகள், நிறுவனங்களிலும் விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் அறிவை வளர்த்தல், பயிற்சி மற்றும் தலைகமை அபிவிருத்தியை உள்வாங்கல், சட்ட திருத்தத்தை பரிந்துரைத்தல் மற்றும் சட்ட அமுலாக்கலை கண்காணித்தல், விசேட விசாரணைகளை முன்னெடுத்தல் மற்றும் சட்ட உதவியை வழங்கல் என்பன ஊடாக அனைத்து சிறுவர்களுக்கும் பாதுகாப்பான சூழலை மேம்படுத்தல் மற்றும் உருவாக்குதலே NCPAஇன் இலக்காகும்.

பங்களிப்பு தேவைப்பட்டாலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இவர்கள் புறக்கணிக்கப்படுகின்ற தோற்றப்பாட்டை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உண்மையான மீள் ஒருங்கிணைப்பு என்பது மேற்கூறப்பட்ட மனித மற்றும் நிறுவன மயப்பட்ட வளங்களை சரியான வகையில் பயன்படுத்துதலை உள்ளடக்கியதாகும்.மாவட்ட செயலக அலுவலகத்திற்கு உட்பட்ட NCPA இன் உளச்சமூக ஒருங்கிணைப்பாளரினால் நடத்தப்படும் உளச்சமூக கலந்துரையாடல் மன்றை சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் அனாதை இல்லங்களைக் கண்காணிப்பதற்காகவும் பயன்படுத்துகின்றார். தகவல்களை சேகரித்தல், சமூக ஆற்றுப்படுத்தல் வசதிகள், பாடசாலைகளுடன் ஒருங்கிணைப்பு செய்தல், பாடசாலைகளுக்கு முறைப்பாட்டு பெட்டிகளை வழங்கல், மற்றும் கிராமங்களில் விழிப்புக் குழுக்களை அமைத்தல் என்பவற்றிற்கான குழுக்களும் அவர்களிடம் உள்ளன. தாய் புலம்பெயர்ந்து தொழிலுக்கு சென்றுள்ள நிலையில் தந்தையால் அல்லது குடும்ப தொடர்புடைய உறவினர்களால் சிறுவர்கள் துஸ்பிரயோகத்துக்கு இலக்காகும் ஆறு-ஏழு வரையான முறைப்பாட்டுச் சம்பவங்கள் தொடர்பில் செயலகம் செயற்பட்டு வருகின்றது. வளங்கள் பற்றாக்குறை காரணமாக முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் மாத்திரமே இந்தப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. புதிய நிகழ்ச்சிகள் மற்றும் தரவுத் தளத்தை பராமரிப்பதற்கான நடைமுறைப்படுத்தலில் உதவி புரிவதற்கு கிடைக்கக் கூடியதாக உள்ள உள்ளூர் வலையமைப்புக்களை சிறந்த நிலையில் பயன்படுத்துவதில் மனித வளங்களை குறைவாகவே மாவட்ட செயலகம் பயன்படுத்துகின்றது. செயலகத்தில் தற்போது தொழிலாளர் அதிகாரியாக பதவி வகிப்பவர், முன்னாளில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்கள் தொடர்பான தரவுத் தளத்தை பேணுபவராக இருந்தவர்.

எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்தத் தொடர்புகள் அனைத்தும் சிதைவடைந்துள்ளன. இந்த நடவடிக்கையின் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான பெறுமதி மிக்க தகவல்கள் மற்றும் மிகவும் முக்கியமான நடைமுறைப்படுத்தல் கருவி ஒன்றின் இழப்பும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு ஏற்பட்டுள்ளது. மிகவும் அண்மையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளையாக சிலாபம் கிளை காணப்படுகின்றது. இந்த தொடர்புகள் மீள கட்டமைக்கப்பட வேண்டும் என்பதற்கு இவை முக்கியமான ஆதாரமாகத் திகழ்கின்றன. போதிய தொழில்நுட்ப வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை என்பன காரணமாக

செயலகம் பல்வேறு வளச்சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிகழ்ச்சிகளை கண்காணிப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன[93].

## பிரதேச செயலகம்[94]

பிரதேச செயலகத்தில் பணிபுரியும் பெண்கள் அபிவிருத்தி அதிகாரி மற்றும் தொழில் அமைச்சின் அதிகாரிகளை ஆய்வு குழு நேர்கண்டது. மீள திரும்பியவர்களிடம் இருந்து பதிவு செய்யும் விண்ணப்பம் தொடர்பில் பலர் விசாரித்தபோதும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய நிகழ்ச்சித் திட்டம் பற்றி எதுவும் தமக்கு அறிவிக்கப்படவில்லை என இரண்டு அதிகாரிகளும் குறிப்பிட்டனர். இந்த விடயம் குறித்து மேலதிக விபரங்களை அறிந்து கொள்வது தொடர்பிலும் அவர்கள் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. பொதுவில் பெண்களுக்கான[95] பல பயிற்சி நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நேர்காணலின் போது அவர்கள் தெரிவித்தாலும், அவை மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியின் ஒரு கட்டமல்ல என அவர்கள் சுட்டிக்காட்டினர். தமக்கு நிதி கிடைக்கும் பட்சத்தில் இவ்வாறான நிகழ்ச்சிகளை மீள் திரும்பியவர்களுக்கும் நடத்துவதற்குத் தயாராக உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், இதற்கான ஆரம்ப கட்ட நிதியை சேகரிப்பது தொடர்பில் அவர்கள் தரப்பில் இருந்து எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்- சிலாபம்[96]

புத்தளத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பு கொள்ளக் கூடிய முக்கியமான இடமாக சிலாபம் கிளை காணப்படுகின்றது. இரண்டு இடங்களுக்கும் இடையிலான

---

[93] மாவட்ட செயலக அலுவலகங்களில் அடிப்படை தொழில்நுட்பமான கணனி மற்றும் இணையத்தள பாவனை தொடர்பான அறிவு குறைவாக உள்ளது. இதன் காரணமாக அதிகாரிகள் வினைத்திறனுடன் செயலாற்ற முடியாதுள்ளது. குறைந்தளவான நிதி காரணமாக சிறுவர் துஷ்பிரயோகம், உள்ளக வன்முறை அல்லது வேறு விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு அல்லது விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தவும் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது. எவ்வாறாயினும், குடிபெயர் தொழிலாளர்களின் சிறுவர்களை கண்காணிப்பதற்கு சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அதிகாரி, நன்னடத்தை அதிகாரிகள், மற்றும் பொலிஸார் உள்ளடங்கிய அரசாங்க அதிகாரிகளின் வலையமைப்பை ஸ்தாபிக்க செயலகம் திட்டமிட்டு வருகின்றது.

[94] 21.07.2010 பதில் மகளிர் அபிவிருத்தி அதிகாரி மற்றும் தொழிலாளர் அதிகாரியுடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

[95] அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியிடல் தொடர்பில் சுயவேலைவாய்ப்பு தகைமைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு மற்றும் உணவு பதனிடல் என்பன சார்ந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

[96] 21.07.2010 நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

தூரம் அதிகமாக இருப்பதுடன், புத்தளம் பகுதியில் அளவிட முடியாத வறுமை நிலவுவதன் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் தமது உரிமைகள், பயன்கள் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு சிலாபம் கிளைக்குச் செல்வதில் சிக்கல்கள் உள்ளன. மீள் திரும்புபவர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே 15,000 பேர் தம்மிடம் பதிவு செய்துள்ளதாகவும் கிளையின் பொறுப்பதிகாரி நமக்குத் தெரிவித்தார். புலம்பெயர்ந்து தொழிலாளர்களாகச் சென்று மீள திரும்பியவர்கள் அனைவரும் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை அருகில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும் என தலைமையகத்தினால் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதேச செயலகத்துக்கோ அல்லது மாவட்ட செயலகத்துக்கோ இதுபற்றி அறியத்தரப்படவில்லை.எவ்வாறாயினும், புத்தளத்தில் நாங்கள் நேர்கண்ட எந்தவொரு புலம்பெயர் தொழிலாளியும்[97] இந்த விடயம் பற்றி அறிந்தவர்களாக இல்லை. இந்த பகுதியைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்களின் மத்தியில் வறுமை மற்றும் எழுத்தறிவின்மை காரணமாக பத்திரிகைகளில் வரும் செய்திகளை வாசித்து அறிந்து கொள்வதில் தடை உள்ளதனையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இந்த புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியானது தகைமையற்ற, வீட்டுப் பணியாளர்களுக்கானதல்ல என்பதனை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். எவ்வாறாயினும் தேவை ஏற்படும் பட்சத்தில் சிறுவர் பராமரிப்பு மற்றும் வீட்டு பராமரிப்பு மற்றும் மத்திய கிழக்கு சமையல்களில் தேர்ச்சி போன்றவற்றில் காணப்படும் திறமையைப் பொறுத்து மீள் திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் வகுப்பில் உள்ளடக்கும் சாத்தியப்பாடு இருப்பதாக அவர் இணங்கினார்.

குருநாகலில்

பிரதேச செயலகம்[98]

சிறியந்தியின் கதை (2010, மே 07ஆம் திகதி நேர்காணப்பட்டவர்)

49 வயதான சிறியந்தி, தகரத்தாலும், பிளாஸ்டிக்காலும் அமைக்கப்பட்ட கூரையைக் கொண்ட பலகை தூண்களையுடைய சின்னஞ்சிறிய வீடொன்றில்

[97] SLBFEஇனால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் போதிய அறிவினை கொண்டில்லை.

[98] 07.05.2010 WDOஉடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

வசிக்கின்றார். அவர் 2003ஆம் ஆண்டு வீட்டுப் பணிப்பெண்ணாக குவைத் நாட்டுக்கு சென்றுள்ளார். அவரது கணவர் அவரை விட்டுச் சென்று வேறு திருமணம் செய்து கொண்டதால், தமது ஐந்து பிள்ளைகளையும் உறவினரிடம் விட்டு விட்டு வெளிநாடு சென்றுள்ளார். ஆறு மாதங்களாக சம்பளம் ஏதும் இன்றி பணிபுரிந்த அவர், அங்கிருக்கும் இலங்கை தூதரகத்திற்கு சென்று அங்கிருந்தவர்களின் உதவி பெற்று அடுத்த ஒரு மாதத்தில் இலங்கை திரும்பியுள்ளார். அவருக்குத் தேவையான விடயங்கள் அனைத்தும் பெறப்பட்டன என்ற கடிதத்துடனேயே அவர் திரும்பியுள்ளார். குறித்த கடிதம் ஆங்கிலத்தில் இருந்தமையினால் அதில் எழுதப்பட்டிருந்த விடயங்கள் அவருக்கு தெளிவாகவில்லை. தற்போது அவர் பெறும் வருமானம் அவரது தேவைக்கு போதியதாக இல்லை.

புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தொடர்பில் பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி அதிகாரிக்கு தெரியாது. எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உதவி கோரும் பட்சத்தில், உதவி புரியுமாறு மகளிர் விவகார அமைச்சிடம் இருந்து தமக்கு கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் அவருக்கு கிடைத்துள்ள ஒரேயொரு ஆவணம் அது மாத்திரம்தான். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இவ்வாறான மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தியுள்ள போதிலும், இவ்வாறான அரசாங்க நிறுவன அதிகாரிகளை நடைமுறைப்படுத்தலில் பயன்படுத்துவது அவசியமாகும். பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள இந்த பெண்கள் அபிவிருத்தி அதிகாரி திறன் பயிற்சிகள்[99], விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல் மற்றும் உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள் என்பவற்றை பொதுவாக பெண்களுக்காக நடத்தி வருகின்றார். ஆனால், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சிகள் எதுவும் இவரிடம் இல்லை. தமது உறுப்பினர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் தமது கண்காணிப்பில் உள்ள பகுதியில் வசிக்கும் பெண்கள் தொடர்பான தகவல்களை அறியத்தருவதற்கு உதவும் வகையில் கிராமங்களில் சிறு சிறு குழுக்களை இப் பெண்கள் அபிவிருத்தி அதிகாரி உருவாக்கியுள்ளார். தமது பகுதிகளைக் கண்காணிப்பதில் இந்த குழுக்களின் உறுப்பினர்கள் மிகவும் செயற்றிறனுடன் உள்ளனர். இவ்வாறான குழுக்களின் உறுப்பினர்கள் ஊடாக

[99] இந்த சமுதாயத்தின் உறுப்பினர்களான மீள்திரும்பியவர்களை நேர்காணும் போது, அவர்களில் பெரும்பாலானவர் ஆடை தைக்கக் கூடியவர்களாகவும், கையால் நெய்யப்பட்ட பை தயாரிப்பவர்களாகவும், கூடை, பலகையிலான சமையலறை பொருட்கள் சார்ந்த தகைமைகள் உள்ளமையை கண்டறிந்துக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. துரதிருஷ்டவசமாக, இந்த வழியை முயற்சித்து பார்த்து போதிய சந்தை வாய்ப்புக்கள் இன்மையால் கைவிட்டுள்ளனர்.

பெண்கள் அபிவிருத்தி அதிகாரி எமக்கு மீள் திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.நிதிப் பற்றாக்குறை காரணமாகப் போக்குவரத்து வசதிகளில் பிரதேச செயலகம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. இந்த பெண்கள் குழுக்களை ஒன்று சேர்ப்பதன் ஊடாகவே, பெண்கள் அபிவிருத்தி அதிகாரி மகளிருக்கான பரந்த வலையமைப்பு ஒன்றை குறித்த பகுதியில் ஏற்படுத்தி தக்க வைத்துள்ளார். போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை மற்றும் வறுமை காரணமாக இந்தப் பெண்களால் இலாபகரமான சந்தையை[100] உருவாக்கிக் கொள்ள முடியாதுள்ளது. இது பரந்த அளவில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.புலம்பெயர் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படும் இரண்டாவது இடமான இங்கு, புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சிகள் இல்லாமை மிகப் பெரிய குறைபாடு ஆகும்.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - குருநாகல்[101]

புதிய நிகழ்ச்சிக்காக புலம்பெயர் தொழிலாளர்களைப் பதிவு செய்வதில் இந்தக் கிளை பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. விநியோகிக்கப்பட்ட 45,000 தொடக்கம் 50,000 வரையிலான விண்ணப்பப்படிவங்களில், மீளப் பெறப்பட்டவற்றில் 3,000 விண்ணப்பங்கள் மாத்திரம் தரவு தளத்தில் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன. மீள் திரும்பியவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தனியார் துறையுடன் தொடர்புகொள்ளுமாறு குருநாகல் கிளை ஊழியர்கள் கோரப்பட்டுள்ளனர். எனினும், தமக்குள்ள வேலைப்பளு காரணமாக இதனை முன்னெடுப்பது கடினமாக உள்ளதாக ஊழியர்கள் குறிப்பிடுகின்றனர். அது மாத்திரமின்றி, அவர்களது தகைமைகளுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வது என்பதும் சாத்தியமற்றது என அவர்கள் தெரிவிக்கின்றனர். பெரும்பாலான மீள் திரும்பியவர்களின் தகைமைகளை கருத்திற் கொண்டு பார்க்கும்போது, அவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சியளிப்பதே சிறந்தது என அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஏனைய கிளைகளில் நேர்காணலை முன்னெடுத்த போது, பதிலளித்தவாறே இந்த கிளையில் உள்ளவர்களும் அடுத்த கட்டம் தொடர்பில் விழிப்புணர்வு அற்றவர்களாக உள்ளனர். நாம் நேர்கண்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு

---

[100] தனிப்பட்ட விற்பனையாளர்களாக இல்லாது, ஒருங்கிணைந்த விற்பனையாளர்களாக இவர்கள் சந்தைக்குச் செல்ல வேண்டும் என ஆய்வாளர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். சாத்தியமான சந்தை தொகுதியான ஸ்திரீ தொடர்பில் WDO அறிவுறுத்தியுள்ளது.

[101] 10.08.2010 கிளை நலன்புரி அதிகாரியுடன் நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

பணியகத்தின் கிளைகளில் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தொடர்பில் அறிந்து வைத்திருத்தல் குறைபாடு மற்றும் மெதுவான செயற்பாடு என்பன பொதுவான விடயமாக இருந்தன.

## வுமின் இன் நீட் (*Women In Need- WIN*) [102]- பெண்களுக்கான சர்வதேச அரச சார்பற்ற அமைப்பு

குருநாகல் WIN அலுவலகத்தில் இரண்டு உளவள ஆலோசகர்களும், சட்ட அதிகாரி ஒருவரும் உள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இவர்கள் உளவள ஆலோசனையும், சட்ட உதவியும் வழங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக அவர்களிடமும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை. வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவது குறித்தே அவர்கள் அதிக கவனஞ் செலுத்துகின்றனர். எவ்வாறாயினும், வழக்கு நிலுவையில் உள்ள இரண்டு மீள திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்காக அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.நிறுவனத்தின் நிபுணத்துவம் மற்றும் வலையமைப்பு என்பன புலம்பெயர் தொழிலாளர்களின் விடயங்களை அடையாளப்படுத்துவதில் பெறுமதி மிக்க கருவியாக இதனை மாற்றியுள்ளன. குறித்த பகுதியில் புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் அடையாளங் காண வேண்டியது இந்த நிறுவனத்தின் அவசியமான தேவையாக உள்ளது.

### தேவசரன[103]

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பில் மீள் திரும்பியவர்கள், சாத்தியமான புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்கலாக 60பேருக்கு 2010ஆம் ஆண்டு தேவசரன நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அவர்களது கருத்திற்கு அமைய, குருநாகலில் அதிக எண்ணிக்கையில் புலம்பெயர் தொழிலாளர்கள் இருப்பதனால், எய்ட்ஸ் பரவுவதற்கு அதிக சாத்தியப்பாடு உள்ள இடமாக குருநாகல் உள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த அறிவுறுத்தல்களின் ஒரு பகுதியாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகாமல் இருப்பது தொடர்பிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள சமூகங்கள் தொடர்பிலேயே தேவசரன அதிகளவு அக்கறை செலுத்துகின்றது. புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காகவே நிகழ்ச்சிகள்

---

[102] WIN உளவள ஆலோசகரும், சட்ட அதிகாரியும் 11.08.2010 நேர்காணப்பட்டனர். (விளக்கங்கள் கீழே)

[103] 11.08.2010 நிகழ்ச்சி அதிகாரியுடன் நேர்காணல்

வடிவமைக்கப்படுகின்றன. நேரம், நீர் மற்றும் வள முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன. உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறையின் காரணமாக முழுக்கிராமமும் பிற கிராமங்களுடன் தொடர்புகளைப் பேணமுடியாமலும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் காணப்படுவதாக நிகழ்ச்சித் திட்ட அதிகாரி குறிப்பிட்டார். இந்த கிராமங்களில் நீர் பற்றாக்குறையும் காணப்படுவதுடன், காட்டு யானைகளின் தாக்குதலுக்கும் இலக்காவதாக அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான கிராமங்களில் அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் இருப்பதுடன், ஆகக் குறைந்தது வீட்டுக்கு ஒருவராவது புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கின்றனர். வெளி உலகுடனான தொடர்பு மிகவும் குறைந்த நிலையில் உள்ளமையினால் இந்தக் கிராம மக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தி புலம்பெயர்தல் தொடர்பில் உள்ள பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நிகழ்ச்சி திட்ட அதிகாரி சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தினால் பயிற்சி அளிக்கப்பட்டவர். அத்துடன், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்களது பிரச்சினைகளை அடையாளங் காண்பது தொடர்பில் சிறந்த பயிற்றுவிப்பாளராக விளங்கக் கூடியவர். புலம்பெயர் தொழிலாளர்களுக்கான விசேட நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு போதிய நிதியின்மையே இவ்வமைப்பின் துரதிருஷ்டம்.

## மீள்திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களின் பிரச்சினைகள்

### பொருளாதார பிரச்சினைகள்

பெரும்பாலான பெண்கள் புலம்பெயர்ந்து தொழிலுக்குச் செல்வதற்கான முதற் காரணமாக பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. அதே விடயமே அவர்கள் மீள திரும்ப முடியாமைக்கும் காரணமாக உள்ளது.குடிபெயரும் பெண்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த, மிகவும் அரிதான வாழ்வாதார தெரிவுகளை கொண்டவர்களாகும். இவர்களில் பெரும்பாலானோர் மீளத் திரும்பும் போது சேமிப்புடன் வருவதில்லை.அவ்வாறு வருபவர்களும், தமது அன்றாட நுகர்வுத் தேவைக்கு அதனை பயன்படுத்தி விடுகின்றனர்[104]. புலம்பெயர்ந்து செல்வதற்காக வாங்கும் கடன்களைத் திருப்பி வழங்குவதற்கே பல புலம்பெயர் தொழிலாளரின்

[104] குடிபெயர்வு சார்ந்த பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பான தரவுகள் 2010 மே மற்றும் ஆகஸ்ட் காலப்பகுதியில் குருநாகல், புத்தளம் மற:றும் கண்டி குடிபெயர் தொழிலாளர்களுடனான நேர்காணல்கள் ஊடாக சேகரிக்கப்பட்டன.

வருமானம் தீர்ந்து விடுகின்றது.

இதன் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் மீள திரும்பும்போது சேமிப்பு இன்றித் திரும்ப நேர்கின்றது. அல்லது கடன்களைத் திருப்பி செலுத்துவதற்கு மாற்று வழிகளைத் தெரிவு செய்ய நேர்கின்றது.

இவ்வாறான கடன்கள் பெண்களால் அதிகம் பெறப்படுகின்றன. எனவே, புலம்பெயர்ந்து சென்றவுடன் அதனை மீள செலுத்த வேண்டிய அழுத்தம் அவர்கள் மீது விழுந்து விடுகின்றது. துரதிருஷ்டவசமாக, பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் சென்றவுடன், இங்கிருக்கும் அவர்களது கணவர்கள் பெறும் கடன்களையும் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இவ்வாறான கடன்களை உள்ளூரில் இருக்கும் வட்டிக்காரர்களிடமே பெறுகின்றனர். ஏனெனில், வங்கிகளில் கடன் வாங்குவதற்கான சொத்துக்கள் அவர்களிடம் இல்லை[105]. வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணமும் குடும்ப உறுப்பினர்களால் வீணாகச் செலவிடப்படுகின்றது[106].

## சமூகப் பிரச்சினைகள்

நீண்ட காலமாக கணவனை விட்டுப் பிரிந்து இருக்கின்றமையினால் திருமண வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மிகவும் பிரதானமான விடயங்களாக பிறன் மனை புணர்தல் சம்பவங்களே அதிகம் காணப்படுகின்றன[107]. இவ்வாறான சம்பவங்கள் மேலும் பல பிணக்குகளுக்கு வழிகோலுகின்றன. பெண் புலம்பெயர் தொழிலாளியின் பணத்தில் கட்டப்பட்ட வீடு, உள்ளடங்கலாக சொத்து உரிமம் தொடர்பிலான பிரச்சினைகள் இதற்கு உதாரணம். அத்துடன், பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல் மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மீண்டும் புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை அல்லது ஸ்திரமான வாழ்வாதார தொழிலைத் தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் என்பனவும் ஏற்படுகின்றன. புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகள் துஸ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்புக்கும் இலக்காகுகின்றனர். இது தொடர்பிலும் புலம்பெயர் தொழிலாளர் திரும்பியவுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இதில் உடல்

---

105 Gamburd, Michele Ruth (2000), The Kitchen Spoon's Handle – Transnationalism and Sri Lanka's Migrant Housemaids ப. 75

106 2010 மே மற்றும் ஆகஸ்ட் காலப்பகுதியில் குருநாகல், புத்தளம் மற்றும் கண்டி குடிபெயர் தொழிலாளர்களுடனான நேர்காணல்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட தரவுகள்

107 சராசரியை விட குடிபெயர் தொழிலாளர்கள் மத்தியில் விவாகரத்து அதிகமாக இடம்பெறுகின்றது. cf. Gunatilleke, Godfrey (1986), Migration of Asian Workers to the Arab World at p. 208

மற்றும் பாலியல் சார்ந்த துஸ்பிரயோகங்கள் உள்ளடங்குகின்றன[108]. பெற்றோரிடம் இருந்து பிரிந்து இருப்பதனால் ஏற்படும் உளவியல் ரீதியான மனவேதனை, புறக்கணிப்பு காரணமாக கல்வி மற்றும் ஆரோக்கியத்தில் குறைபாடு, தாய் அன்பு குறைதல் என்பவற்றையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது[109]. சில குடும்பங்களின் பெண்களின் பாத்திரம் மாற்றமடைகின்றது. ஆண்களுடையது என கருதப்படும் பொறுப்பை, புலம்பெயர்ந்து தொழில் செய்து மீள திரும்பும் பெண்கள் வீட்டின் பொருளாதார சுமையை பொறுப்பேற்க வேண்டியுள்ளது[110]. இவ்வாறான நடவடிக்கைகள் குடும்ப உறவில் விரிசல் ஏற்படுவதற்கும் காரணமாக அமையும்[111].

புலம்பெயர் தொழிலாளர்கள் என்ற அடையாளம் மீள திரும்பும் பெண்களுக்கு வழங்கப்படுவதனால், சமூகத்தில் முன்னர் வாழ்ந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதில் இந்தப் பெண்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்களது குடும்பமும், சமூகமும் அவர்களைப் புறந்தள்ளுகின்றன[112]. மறுபுறத்தில், உளவியல் ரீதியான, உடலியல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களுக்கு இலக்கான பெண்கள் மீண்டும் சமூகத்துடன் அல்லது குடும்பத்துடன் இணைவதில் தயக்கம் காட்டுகின்றனர்[113].

---

108 புத்தளம், HRCஇன் நிகழ்ச்சி அதிகாரியுடன் நேர்காணல், இலங்கை சேவ் த சில்ரன் (2006), Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad ப. 6-7: "தாய் குடிபெயர்ந்து சென்றவுடன் பிள்ளையில் குறிப்பிட்டளவு தவறான நடத்தையை பராமரிப்பவர்கள் அவதானித்தனர். 22.1% ஆன சிறுவர்கள் பசி குறைந்தவர்களானர். அதே குழுவைச் சேர்ந்த 5%ஆனோர் உடல் எடை குறைந்தவர்களானர். அனைத்து வயது குழுவையும் சேர்ந்த 20%ஆன சிறுவர்கள் அதிக கோபப்படுபவர்களாக இருந்தனர்."

109 Gamburd, Michele Ruth (2000), The Kitchen Spoon's Handle – Transnationalism and Sri Lanka's Migrant Housemaids ப. 196

110 Gunatilleke, Godfrey (1986), Migration of Asian Workers to the Arab World ப. 208

111 Gamburd, Michele Ruth (2000), The Kitchen Spoon's Handle – Transnationalism and Sri Lanka's Migrant Housemaids ப. 175

112 மீள் திரும்பியதும் திருமண வாழ்க்கை நிறைவு பெற்ற மற்றும் தனிப்பட்ட துயரங்கள், பொறாமைகள் மற்றும் வேறு காரணங்களினால் கிராமத்தினால், குடும்பத்தினால் ஒதுக்கி வைக்கப்பட்ட குருநாகலைச் சேர்ந்த பெண் குடிபெயர் தொழிலாளர்களுடன் நேர்காணல் (09.08.2010).

113 2006 இஸ்ரேல்-ஹிஸ்புல்லாஹ் (லெபனான்) யுத்தத்தின் போது திருப்பியனுப்பப்பட்ட ஒருவருடனான (கண்டி 29.07.2010) நேர்காணலின் போது சேகரிக்கப்பட்ட தரவு. வீட்டை பாதுகாப்பதற்கு அவரை வீட்டில் அடைத்து வைக்கும் தொழில் வழங்குநர், தாம் மாத்திரம் பத்திரமான இடத்திற்கு சென்றுள்ளார். உணவு மற்றும் நீருக்காக பல நாட்கள் தவித்திருந்து, ஏனைய இலங்கை குடிபெயர் தொழிலாளர்களுடன் தப்பியுள்ளார். அதன் பின்னர் பெய்ரூட்டில் உள்ள இலங்கை தூதரகம் குறித்து அறிந்து, அங்கு சென்றுள்ளார். இவர் உளரீதியாக மற்றும் உடல்ரீதியாக அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளார். தற்போது உள மற்றும் உடல் உபாதைகளை எதிர்கொண்டுள்ளார். இதனால் வாழ

சில பெண்கள் கர்ப்பிணிகளாக நாடு திரும்புகின்றனர். சிலர் தமது சட்டமுறையற்ற பிள்ளைகளை வேறெங்காவது விட்டு வருகின்றனர். இவ்வாறான கர்ப்பணிப் பெண்களுக்கு பிள்ளை பேறு வரையாவது பாதுகாப்பான தங்குமிடம் வழங்கப்படல் வேண்டும்[114].

புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் போன்ற தொற்றுக்கள் ஏற்படுவதற்கான காரணங்களும் இதனுடன் தொடர்புபட்டவையாகும். பாலியல் துஸ்பிரயோகம், பலாத்காரமாக உறவு கொள்ளல் அல்லது பாலியல் தொழிலாளியாக பணிபுரிதல் என்பன இதற்கு காரணமாய் அமையலாம். மிகவும் குறைந்த அளவிலான எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோய் பரவல் உள்ள நாடாக இலங்கை யுஎன்எய்ட்ஸினால் கணிக்கப்பட்டுள்ளது. அதன் கணிப்பீட்டின்படி அண்ணளவாக 3,500 பேர் இலங்கையில் எச்.ஐ.வி/எய்ட்சுடன் வாழ்கின்றனர்[115]. எவ்வாறாயினும், எச்.ஐ.வி/எய்ட்சுடன் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் புலம்பெயர்ந்து தொழில் செய்து மீள திரும்பியவர்கள் என லங்கா பிளசுடனான நேர்காணலின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. அத்துடன், இவ்வாறான சில சம்பவங்கள் பதிவு செய்யப்படாது இருப்பதனால், சமூகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் உள்ளதாக அறியக் கிடைக்கின்றது. இங்கு வதியும் கணவர் அல்லது மனைவிக்கும் புலம்பெயர் தொழிலாளர்களினால் இந்த அச்சுறுத்தல் உள்ளது[116]. புலம்பெயரல் காரணமாக அதிகளவான பொருளாதார பிரச்சினைகள் காணப்படுவதிலும் பார்க்க, சமூக பிரச்சினைகள் அதிகம் காணப்படுவதனை இதன் மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளே இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரியதாகும். இதேவேளை, மீள் திரும்பும் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொதுவான வேறு சில பிரச்சினைகள் இருப்பதனையும் எமது கள ஆய்வின் ஊடாக நாம் கண்டறிந்தோம். மேலதிகமான இந்தப் பிரச்சினைகள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக

முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. திரும்பிய முதல் அவருக்கு அரச நிறுவனத்திலிருந்தோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களில் இருந்தோ அவருக்கு எதுவிதமான உளவள ஆலோசனை உதவிகளும் வழங்கப்படவில்லை.

114 திருமண நிலையில் பாதிப்பு ஏற்படுவதனை தவிர்த்து, பெண்களுக்கு வேறு சில சமூக நெருக்கடிகளும் ஏற்படுகின்றன.

115 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி (2008), HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice ப. 85

116 வெளிநாட்டில் இருந்த போது உள்ளூர் பெண்ணுடனான தொடர்பினால் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான கணவன் மூலம் எய்ட்ஸ் தொற்றைப் பெற்ற மீள்திரும்பியவரின் நேர்க-ாணல். அவரது கணவர் எச்.ஐ.வி.'.எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான கணவன் உயிரிழந்ததுடன், அவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. தமது வாழ்க்கை மற்றும் தமது மகளின் எதிர்காலம் தொடர்பான அச்சத்தில் அவர் உள்ளார் (கொழும்பு 26.06.2010).

பிரச்சினைகள் சார்ந்ததாக உள்ளன. வேறுபட்ட தமது வதிவிடத்தைப் பொறுத்து இந்த பிரச்சினைகளும் வேறுபடுகின்றன. மீள் திரும்புபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து இதனை விலக்கி வைக்க முடியாது. பொதுவாக இவை அடிப்படை காரணம் சார்ந்ததாக இருக்கும். எனவே, எந்தவொரு மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை வடிவமைக்கும் போதும் இந்தப் பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

## இடம் சார்ந்த முக்கிய பிரச்சினைகள்

### புத்தளம்

1990இல் எல்.ரி.ரி.ஈ யினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையிலான முஸ்லீம்கள் புத்தளத்தில் வசித்து வருகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கின் ஐந்து வேறுபட்ட பகுதிகளில் இருந்து சுமார் 15,250 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. இவற்றில் பெரும்பாலான குடும்பங்கள் புத்தளத்தில் குடியேறின. துரதிஸ்டவசமாக, மீள் குடியேற்றமானது திட்டமிட்டு இடம்பெறவில்லை. ஏற்கனவே வளப் பற்றாக்குறை காணப்பட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் குடியேற்றப்பட்டனர். இதன் காரணமாக பூர்வீக மக்களுக்கும், இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கும் இடையில் பதட்ட நிலை உருவெடுத்தது[117].

இந்தக் குடியேற்ற கிராமங்களில் தற்போது தற்காலிக அல்லது குறையாக பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளே அதிகம் இருப்பதனை காண முடியும். நில உரிமம் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக இவர்கள் விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலை உள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான தொழில் துறை, உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறை, குறைந்த அளவிலான கல்வியறிவு மற்றும் இயற்கை வளத்திற்கான அதிகளவான போட்டி என்பன காரணமாக இங்கு வேலையில்லாப் பிரச்சினையும் உள்ளது[118]. இடம்பெயர்ந்தவர்கள் மீன்பிடித் தொழிலாளர்களாக இருக்கின்ற போதிலும், பூர்வீக குடிகளினால் தமக்கு சொந்தமான படகு வைத்துக் கொள்ள முடியாதுள்ளதாக குறிப்பிடுகின்றனர். அத்துடன், உப்பளங்களிலும்

---

[117] புத்தளம் மீள்குடியேற்ற கிராமங்களில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் குடிபெயர் தொழிலா-ளர்கள், புத்தளம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்ச்சி அதிகாரியுடனான நேர்காணல்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட தரவுகள்.

[118] தென்னந்தோட்டங்கள் மற்றும் கடல் அல்லது குடா வளங்களை தவிர்த்து இயற்கை வளங்களுக்கான பற்றாக்குறை புத்தளத்தில் காணப்படுகின்றது. இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் பாரம்பரியமாக மீன்பிடியில் தங்கியுள்ளனர். தென்னந்தோட்டங்கள் பாரிய-தாகவும், தனியாருக்குச் சொந்தமானதாக உள்ளதாலும் போதியளவு வேலைவாய்ப்புக்கள் இல்லை.

குறைந்த அளவிலான வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களே வழங்கப்படுகின்றன[119]. பல பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்கள் அரசாங்க உணவு, நீர் வழங்கல் மற்றும் மானியங்களையே நம்பியுள்ளனர். துரதிஸ்டவசமாக இவையும் முறையாகக் கிடைப்பதில்லை. மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் காணப்படும் குறைந்த அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை காரணமாக இவர்கள் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதும், பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதும் சிரமமாக உள்ளன. இதன் காரணமாக புத்தளத்தில் உள்ள பெரும்பாலான இடம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர்வதற்கு தீர்மானிக்கின்றனர்.

எவ்வாறாயினும், மீள திரும்பியதும் இப்பகுதிகளில் காணப்படும் மிகவும் மோசமான வறுமை காரணமாக போதியதல்லாத வாழ்வாதாரம் மற்றும் முதலீட்டு சந்தர்ப்பங்கள் இல்லாமை மற்றும் சுயவேலைவாய்ப்பின் ஊடாக தயாரிக்கப்படும் பொருட்களுக்கு ஒழுங்கான சந்தை வசதி இன்மை[120] என்பன காரணமாக அவர்கள் மீண்டும் இதே பிரச்சினைகளையே எதிர்கொள்கின்றனர். இந்த இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பிலான பல அரசியல் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக வாக்குரிமை இன்மையைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொள்வதற்கு புலம்பெயர வேண்டிய அல்லது மீண்டும் புலம்பெயர வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த 10 வருடங்களுக்கும் அதிகமாக புத்தளத்தில் வசிக்கின்ற போதிலும், தேர்தல் பட்டியல்களில் இவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக இவர்கள் வதியும் பகுதியில் சட்டரீதியான வதிவிட உரிமை அற்றவர்களாக உள்ளனர்.

இந்த நிலை அவர்களது அடிப்படை உரிமைகளின் மீறல்களாக இருப்பதோடு, பூர்வீக குடிகளின் மத்தியில் பலவீனமானவர்களாகவும் இவர்களை வைத்துள்ளது. புத்தளத்தில் அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ள போதிலும், சிலாபத்திலேயே இவர்களுக்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அமைந்துள்ளது. இதனால் இவர்கள் தமக்குத்

[119] யுத்தம் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் காணப்படும் பாதுகாப்பு விடயங்கள் காரணமாக மீன்பிடியில் ஈடுபடுவதும், ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதும் சிக்கலுக்குரியதாக உள்ளது.

[120] அதிக எண்ணிக்கையிலான மீள்திரும்பிய ஆண் குடிபெயர் தொழிலாளர்களை கொண்ட கிராமத்தில், மீள்திரும்பியதும் கப்பல்களில் பணியாற்றி, வேறுபட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பலில் சென்றுள்ளதாகவும், அவர்களில் பலர் சட்டவிரோத குடியேற்றவாசிகளாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் புத்தளம், உடப்பு பகுதியில் பணியாற்றும் IOM நிகழ்ச்சி அதிகாரி தெரிவித்தார். மீள் திரும்பியதும் தமது வாழ்வாதாரத்திற்கான வழி எதுவும் அற்றவர்களாக அவர்கள் உள்ளனர்.

தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுகின்றது.

## குருநாகல்

குருநாகல் நகரம் அபிவிருத்தியடைந்த நகரமாக இருக்கின்ற போதிலும், இந்த மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்கள் பல காணப்படுகின்றன. அவை மிகவும் மோசமான வறுமைக்குட்பட்ட கிராமங்களாக உள்ளன. இந்தப் பகுதியில் மலைக்குன்றுகள் காணப்படுவதனால், நீருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இதன் காரணமாக வாழ்வாதார தெரிவுகள் குறைவாக உள்ளதுடன், வீட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தையைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல் நிலவுகின்றது. புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையில் அதிக புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கையை கொண்ட இரண்டாவது மாவட்டமாக குருநாகல் இருக்கின்றது. எனினும், அரசாங்க திணைக்களங்கள், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தினால் எந்தவொரு புலம்பெயர் தொழிலாளருக்குமான விசேட நிகழ்ச்சிகளும் இங்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களும் சில நோக்கங்களுடன் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ஆனால், அவற்றில் மீள் ஒருங்கிணைப்பு குறித்த பிரதான நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டதாக இல்லை. அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர், மீள் திரும்புபவர்கள் மற்றும் வறுமை, அபிவிருத்தியின்மை என்பனவே குருநாகலில் காணப்படும் நிலைமையாக இருக்கின்றது.

## கண்டி

வீடு, சொத்து மற்றும் பிரஜாவுரிமைகள் குறைவாக உள்ளமை மற்றும் அளவிட முடியாத வறுமை என்பன பெருந்தோட்டப் புறங்களில் பலர் புலம்பெயர்வதற்கு காரணமாக மாறியுள்ளது. துரதிஸ்டவசமாக மீள திரும்பியோரும் இதேவகையான பிரச்சினைகளையே எதிர்நோக்குகின்றனர். எவ்வாறாயினும், அதிக வேலைவாய்ப்புக்கள் மற்றும் சிறிய கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைகள் என ஏனைய இரண்டு பகுதிகளுடனும் ஒப்பிடும்போது கண்டி சிறந்த இடமாக இருக்கின்றது. அத்துடன், நாட்டின் மிகவும் பிரசித்தமான சுற்றுலா மற்றும் மத வழிபாட்டுத் தலமாகவும் கண்டி விளங்குகின்றது. இயற்கை வளமும், அமைதியான சுற்றாடலையும் கொண்டுள்ளமையாலும் பொருளாதார ரீதியாக சாதகத் தன்மைகளை கொண்ட பிரதேசமாக உள்ளது.புலம்பெயர் தொழிலாளர்களுக்காகப் பல நிறுவனங்கள் இந்த பகுதியில் செயற்பட்டு வருகின்ற போதிலும், அவற்றைப் பெரும்பாலானவை குறிப்பிட்ட குழுக்களை இலக்கு வைத்ததாக இருப்பதனால் பலர் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி -

1. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒட்டு மொத்த புலம்பெயர் தொழிலாளர்கள் மீள திரும்பியமை தொடர்பில் நேர்த்தியான தரவுகளை பதிவுசெய்து கொள்வதற்கான முறையான பொறியமைப்பு ஒன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் இல்லை. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை வடிவமைப்பதில் மிகவும் முக்கியமான பின்னடைவாக இது காணப்படுகின்றது.

2. சந்தைப்படுத்தல் திணைக்களத்தினால் தற்போது முன்னெடுக்கப்படும் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியானது தகைமைகளுடன் அல்லது முதலீடு செய்வதற்கான பணத்துடன் வெற்றிகரமாக மீள திரும்பியவர்களை மாத்திரமே இலக்கு வைக்கின்றது.

3. கொள்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மாற்றம் (உண்மையான கோட்பாடு அனைத்து மீள் திரும்பியவர்களுக்கும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உதவி வழங்குவதைத உத்தரவாதப்படுத்தியிருந்தது) பாரபட்சமானது என்பதுடன் தீங்கு பயக்கக்கூடியதுமாகும். விசேடமாக தகைமைகளற்ற பெண் வீட்டுப் பணியாளர்களுக்கே அதிகளவு மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி அவசியமாக இருக்கின்றது.

4. மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் தேசிய கொள்கை அல்லது கருத்தாக்கத்தின் பற்றாக்குறை என்பன இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வேறுபட்ட திணைக்களங்களுக்கு இடையில், மீள் ஒருங்கிணைப்பு நடைமுறையில் அவர்களது பாத்திரங்கள் தொடர்பில் சிக்கலைத் தோற்றுவித்துள்ளன.

5. தற்போது மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியைக் கையாளும் பிரிவிற்கு புலம்பெயர்வு அல்லது மீள் ஒருங்கிணைப்பு தொடர்பிலான சமூக விடயங்களில் சிறிதளவு அனுபவமே உள்ளது.

6. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளக அரசியல் காரணமாக பல்வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்படுவது சிக்கலையும், தாமதத்தையும் தோற்றுவித்துள்ளது.

7. கருத்தாக்கத்தை மாற்றுவதற்கு முன்னர் சந்தைப்படுத்தல் திணைக்களத்தினால் எதுவிதமான ஆரம்பகட்ட ஆய்வோ

அல்லது பகுப்பாய்வோ நடத்தப்படவில்லை. முந்தைய நிகழ்ச்சி அவதானமான ஆய்வு மற்றும் பல வருடங்கள் அனுபவத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

8. சர்வதேச தரத்தில் அமைந்த சிறந்த நடைமுறைகளுடன் எதுவிதமான ஒப்பீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

9. நலன்புரி திணைக்களத்தின் பயன்கள் மீள் திரும்பியவர்களுக்கு உதவி புரிவதற்கானதாக இருக்கின்றபோதிலும், கடுமையான முன்நிபந்தனைகள் காரணமாகப் பெரும்பாலானவர்களால் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

10. தற்போது மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தனித்த பொருளாதார மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் மாத்திரமே கவனஞ் செலுத்துகின்றது. சமூக மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் கவனஞ் செலுத்தவில்லை.

11. அத்துடன் பொதுவான ஒரு நிகழ்ச்சியே காணப்படுகின்றது. தேவைகள், விருப்பங்கள், பொருளாதார அல்லது சமூக விடயங்கள் மற்றும் ஒவ்வொரு பகுதியினதும் சந்தை நிலைவரம் என்பவற்றை கவனத்திற் கொள்ளாது "அனைவருக்கும் பொருத்தமானது" என்ற எதிர்பார்ப்புடன் இந்த நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளை தயாரிப்பது என்பது எளிதானது அல்ல. எவ்வாறாயினும், தேவைகளிலும், சூழ்நிலைகளிலும் சில பொதுவான வேறுபாடுகளை அடையாளங் கண்டு அவற்றுக்கு ஏற்ற வகையில், புவியியல் ரீதியாக நிகழ்ச்சி தயாரிக்கப்படல் வேண்டும்

12. தரவுகளை சேகரிப்பதன் ஊடாக நிகழ்ச்சி எதிர்பார்க்கும் விடயம் என்ன என்பது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கிளை அதிகாரிகளுக்கு எவ்வித தெளிவும் இல்லை. நிறுவனத்திற்குள்ளே எந்தவொரு திட்டமிடலும், நடைமுறைப்படுத்தப்படலும் சாத்தியமில்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

13. பூர்த்தி செய்யப்படாத மற்றும் திருத்தமற்ற தகவல்களை விநியோகித்தல் மற்றும் அரசியல் வாக்குறுதிகள் போன்றவை மீள் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் குழப்ப நிலையை உருவாக்கியுள்ளது. மீண்டும் நாட்டை விட்டுச் சென்று தொழில் புரிவதற்கு இந்த நிகழ்ச்சி தடையாக இருக்கும் என சிலர் கருதும் வேளையில், இந்த நிகழ்ச்சியின் ஊடாக ஓய்வூதியம் கிடைக்கும் என சிலர் கருதுகின்றனர்.

14. 2010 ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அமைச்சு பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. மீள் திரும்பிய பெண்களுக்கு உதவிகள் வழங்குவதாக வாக்குறுதியளித்த அமைச்சுக்கள் அதனைக் கைவிட்டுள்ளன.

15. தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதியதாக இன்மையின் காரணமாக, மீள திரும்பிய பணிப் பெண்கள் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. எனவே, பால்நிலை சார்ந்த பிரச்சினைகள் புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

16. அராபிய, லெபனான், மத்திய கிழக்கு உணவு வகைகளை தயாரிப்பதில், வீடுகளை பராமரிப்பதில், வீட்டுத் தோட்டம் மற்றும் குழந்தை பராமரிப்பு அத்துடன் தையல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல் என்பவற்றில், மீள் திரும்பிய பல வீட்டுப் பணிப் பெண்கள் சிறந்தவர்களாக உள்ளனர். எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்கு அமைய, இவை அனைத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய வேலைவாய்ப்பு தகைமைகள் அல்ல[121].

17. புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் முகவர்களிடம் இருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பெறும் பணமானது, புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், பரவலாக்குவதற்கும் பயன்படுத்தப்படல் வேண்டும். துரதிஸ்டவசமாக இது தோல்வியடைந்துள்ளது. இதனால் மீள் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக உள்ளனர்[122].

18. புதிய நிகழ்ச்சி தொடர்பில் மாவட்ட, பிரதேச செயலகங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தவறியுள்ளது. இதன் காரணமாக நிகழ்ச்சியின் நடைமுறைப்படுத்தலில் பயனுறுதித் தன்மை குறைவடைந்துள்ளது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மிகவும் முக்கியமானவையாக இருப்பதுடன், உடனடியாக அடையாளங் காணப்பட வேண்டியவையாகும்.

---

[121] 21.07.2010 சிலாபத்தில் SLBFE ஊழியருடனான நேர்காணல் (விளக்கங்கள் கீழே)

[122] 2010 மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் குருநாகல், கண்டி மற்றும் புத்தளம் பகுதிகளில் குடிபெயர் தொழிலாளர்களுடனான நேர்காணல்கள்

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கான பரிந்துரைகள்

1. மீள் ஒருங்கிணைப்பானது சர்வதேச தரங்களுக்கும், நல்ல பயிற்சிகளுக்கும் அமைவானதாக வரைவிலக்கணங்களும், உள்ளடக்கங்களும் இருத்தல் வேண்டும். மீள் ஒருங்கிணைப்பின் வீச்செல்லை மற்றும் அதனை பரவச் செய்வதில் உள்ள குறைபாடுகளையும் இது அடையாளங் காண வேண்டும். அத்துடன், என்ன நிகழ்ச்சிகள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் எந்த திணைக்களத்தின் கீழ் வர வேண்டும் என்பதனையும் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும்.

2. குடிவரவு, குடியகல்வு திணைக்களம், ALFEA, பொருத்தமான வெளிநாட்டின் வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் பொருத்தமான வெளிநாட்டு தூதரகம் ஆகியவற்றுடன் இணைந்து மீள் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் தரவுகளை ஒன்று திரட்டுவதற்கான பொறியமைப்பு ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

3. மீள் ஒருங்கிணைப்பில் மீள் திரும்பிய அனைவரும் உள்ளடக்கப்படல் வேண்டும். விசேடமாகத் தோல்வியடைந்த அல்லது துஸ்பிரயோகத்துக்கு இலக்கானவர்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

4. தனித்து பொருளாதார மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் மாத்திரம் கவனஞ் செலுத்தப்படக் கூடாது. சமூக ஒருங்கிணைப்புக்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்பட்டு, மீள் திரும்புவதற்கு புறப்படுவதற்கு முன்னர் பிரச்சினைகள் அடையாளங் காணப்படல் வேண்டும்.

5. மீள் திரும்பியவர்கள் பொருளாதார மற்றும் சமூக தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான ஆரம்பகட்ட ஆய்வு நடத்தப்படல் வேண்டும். அத்துடன், பிரேரிக்கப்பட்ட தீர்வுகளின் பயனுறுதித் தன்மையையும் மதிப்பீடு செய்ய வேண்டும். இதில் சந்தைப் பகுப்பாய்வு, புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களது தேவைகள் போன்ற மதிப்பீடு என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். இவை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. வாழ்வாதார உதவிகளும், திறன் பயிற்சிகளும் சந்தைக்குப் பொருந்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். இயலுமைகள், தேவைகள் மற்றும் பயனாளிகளின் விருப்பங்கள் ஆகியவற்றை கவனத்திற் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

7. குறிப்பிட்ட புவியியல் பகுதியின் விடயங்கள் மற்றும் தேவைகளின் வேறுபாடுகளுக்கு ஏற்ற வகையில் மாறக்கூடிய தன்மையுடையதாக மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும்.

8. புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களையும் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் உள்வாங்க வேண்டும். சிறுவர்கள் மற்றும் தங்கியுள்ள குடும்பங்களுக்கும் ஆதரவு மற்றும் உதவிகளை வழங்க வேண்டும்.

9. தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள், தேசிய கொள்கை ஏற்பாடுகள், அடிமட்ட ஆய்வு முடிவுகள், சிவில் சமூக மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் மற்றும் சர்வதேச பயிற்சிகள் என்பனவற்றை கருத்திற் கொண்டு புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தயாரிக்கப்படல் வேண்டும்.

10. அராபிய சமையல் கலை, வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு ஆகிய தகைமைகள் வேலைவாய்ப்பு தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

11. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புறப்படுவதற்கு முன்னதான பயிற்சி காலம் ஆகக் குறைந்தது 3 மாதங்களாக இருக்க வேண்டும் எனவும், தரமான பரீட்சையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் எனவும் WMC பரிந்துரைத்துள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களுக்கான இந்தப் பரீட்சையில் தோல்வியடைபவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படக் கூடாது எனவும் WMC கூறுகின்றது[123]. தகைமைகளற்ற தொழில்கள் சிலவற்றை குறிப்பிட்ட வகைக்குள் இணைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சுக்கான பரிந்துரைகள்

1. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சபையில் மீள் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்கள், தொழிற் சங்கம், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் என்போர் அங்கம் வகிக்க வேண்டும்.

2. புலம்பெயர் செயன்முறையில் பால் நிலை சார்ந்த விடயங்கள் எழுப்பப்படுவதாலும், பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் அதிகமாக

---

[123] SLBFE இன் சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளருக்கு அமைய, கற்கை நெறியின் இறுதியில், பயிற்சி பெறுபவர்களுக்கு மதிப்பீடு நடத்தப்படும் நிலையில், அனைவரும் தேர்ச்சி பெறுகின்றனர். இதில் மொழி, உள்ளக தகைமைகள், எச்.ஐ.வி/ எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி என்பனவும் உள்ளடங்கியுள்ளது.

இருப்பதனாலும், தீர்மானம் எடுத்தல் நிலையில் மேலும் பெண்கள் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

3. பெண்கள் புலம்பெயர்ந்து வீட்டுப் பணிப்பெண்களாக செல்வதனை குறைக்கும் வகையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது, வீட்டுப் பணிப்பெண்ணுக்கு இணையான தகைமையைக் கோரும் வேறு தொழில்களை வகைப்படுத்தி அவர்களுக்கு அறிவுறுத்தலாம்.

4. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியின் மதிப்பீடு மற்றும் மீள் மதிப்பீட்டுப் பிரிவு என்பவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த, அனுபவம் வாய்ந்தவர்கள் அங்கம் வகிக்க வேண்டும்.

5. சர்வதேச வெற்றிகரமான நடைமுறைகள் பற்றிய தொடர்ச்சியான கற்றலும், ஊழியர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பலும் அவசியமாகும்.

6. அதிகளவான மீள் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்கள் எளிதில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நலன்புரி பயன்கள் தொடர்பான முன்நிபந்தனைகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படல் வேண்டும்.

7. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமையகத்திற்கும், அதன் கிளைகள் மற்றும் நலன் பங்காளர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான மற்றும் பயனுறுதி மிக்க தொடர்பாடல் அவசியமாகும்.

8. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கு மாகாண சபைகள், பிரதேச சபைகள், பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்கள் புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் விசேடமாகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான தகவலை சேகரிப்பதற்குப் பயன்படுத்தல்.

## அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்

1. 1985ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக 21அம் இலக்கச் சட்டம் திருத்தப்படல் வேண்டும். அதில் புலம்பெயர் தொழிலாளர்களின் மனித உரிமைகள் மற்றும் நலன்புரி சேவைகள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அமைச்சர் அல்லது அமைச்சுக்கும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகப் பணிப்பாளர் சபைக்கும் இடையிலான நேரடியான தொடர்பு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சபை மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக திணைக்களங்களின் தலைவர்களுக்கு இடையில் நேரடியான தொடர்பாடல் இருக்க வேண்டும்.

3. புலம்பெயரல் செயன்முறையின்போது ஊழலைத் தடுப்பதற்கும், ஆள் மாறாட்டம் மற்றும் வஞ்சக் கடத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், ALFEA, செல்லும் நாடுகளிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரமைப்புகள், இலங்கைத் தூதராலயங்கள் மற்றும் ஏனைய நலன் பங்காளர்களின் ஒத்துழைப்புடன் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

4. அனைத்து பொது, தனியார் துறைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து புலம்பெயர்வு தொடர்பான தேசிய தொழிலாளர் கொள்கை ஒன்றினை விரைவாகவும் செயற்திறன்மிக்க முறையிலும் நடைமுறைப்படுத்தல்.

5. பொருத்தமான சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன சாசனங்களின் பயனுறுதிமிக்க ஏற்புறுதி. விசேடமாக வேலைவாய்ப்புக்கான புலம்பெயரல் சாசனம் (திருத்தப்பட்டது), 1949 (இல 97) மற்றும் புலம்பெயரல் தொழிலாளர்கள் (உப ஏற்பாடுகள்) சாசனங்கள் 1975 ( இல 143) மற்றும் அனைத்து புலம்பெயரல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சாசனம் ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தல்.

6. SAARC ஊடாக ஏனைய தெற்காசிய நாடுகளுக்கு தொழிலுக்காக நபர்களை அனுப்பும் போது அவர்களுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளல். விசேட நடைமுறைகளின் கீழ் குறிப்பிட்ட நாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்பவர்களின் ஆகக் குறைந்த சம்பளத்தின் அளவு, தகவல் மற்றும் வள வலையமைப்பு போன்றன தொடர்பிலான உடன்பாடுகள் இதில் உள்ளடங்க வேண்டும்.

7. புலம்பெயரல் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்துக்கும், அனுப்பப்படும் நாட்டின் அரசாங்கத்திற்கும் இடையில் இருவழி உடன்படிக்கைகளை வலுப்படுத்தல்.

## அரச சார்பற்ற நிறுவனங்களின் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள்

1. புலம்பெயரல் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் அரசா சார்பற்ற நிறுவனங்களுக்கு மத்தியிலான ஒருங்கிணைப்பில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

2. இந்த மீள ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் எழுந்தமானவையாகவும் பாதுகாப்பற்ற அல்லது நெகிழ்ச்சித் தன்மையற்ற நிதிவழங்கலைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. குறிப்பிட்ட மாவட்டங்கள் அதிகளவான சேவையையும் சில பிரதேசங்கள் புவியியல் ரீதியாக ஒதுக்கப்பட்டனவாகவும் உள்ளன.

3. ஏற்கனவே உதவிகளைப் பெறும் பகுதிகள், விசேட கவனஞ் செலுத்த வேண்டிய தேவைகள் மற்றும் சந்தைக்குப் பொருத்தமான திறன் பயிற்சிகளை வழங்குவதற்கான சந்தை ஆய்வு என்பன தொடர்பில் கண்டறிந்து கொள்வதற்கான ஆரம்ப ஆய்வுகளைப் பெரும்பாலான நிறுவனங்கள் முன்னெடுப்பதில்லை. இதன் காரணமாகவே ஸ்திரமற்ற செயற்றிட்டங்கள் உருவாகின்றன.

4. சமூக மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்கு எதுவிதமான கட்டமைப்பும் இன்றி, பொருளாதார உதவி தொடர்பிலேயே பெரும்பாலான நிறுவனங்கள் கவனஞ் செலுத்துகின்றன.

5. சுயவேலைவாய்ப்புக் கடன்கள் பெண் புலம்பெயர் தொழிலாளர்களை இலக்கு வைத்து வழங்கப்படுகின்றன. இவை குறுகிய காலத்திற்கான உதவியாகவே உள்ளன.

6. வாழ்வாதார நிகழ்ச்சியின் கீழ் புலம்பெயர் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் பெரும்பாலான பகுதிகளில் ஆய்வு செய்யப்படுவதில்லை.

## அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பரிந்துரைகள்

1. தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், மிகவும் பயனுறுதி மிக்க நடைமுறைப்படுத்தலுக்கும், ஒரே இடத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதனை தவிர்ப்பதற்கும் ஒரே புவியியல் பகுதியில் செயற்படுபவர்கள் ஒருங்கிணைந்து திட்டமிடல் வேண்டும்.

2. புலம்பெயர் தொழிலாளர் குழுக்களை உருவாக்கி, சந்தையில் சிறந்த

போட்டியை உருவாக்கும் வகையில் வர்த்தகங்களை ஆரம்பித்தல். அத்துடன், விசேடமான நிலையை உருவாக்கல். மீள திரும்பி தனியாக இருக்கும் பெண்கள் சந்தையை அடையாளங் காண்பதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

3. வாழ்வாதார உதவிகளை வழங்கும்போது கிராம அல்லது சமூக தேவைகள், இயலுமை மற்றும் கலாசார தேவைகள் என்பன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

4. பொருத்தமான நிறுவனங்கள் பொருட்களை பரிசோதித்து தரத்தை சான்றுபடுத்தல் வேண்டும். இதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தேசிய தரப்படுத்தல் நிறுவனமான SLS என்பன உள்ளடங்கும்.

5. மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியின் பங்குபற்றுநர்கள் மற்றும் பயனாளிகளுக்கு, விசேடமாக வாழ்வாதார நிகழ்ச்சிகளின்போது சமமான வகையில் பண முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வழங்கப்படல் வேண்டும். வாழ்வாதாரம் மற்றும் கடன் நிகழ்ச்சிகளுக்கு உறுதியான கண்காணிப்பு பொறியமைப்பு ஒன்று அவசியமாகும்.

6. பொருளாதார மற்றும் சமூக மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் இரண்டுமே குடும்பங்களை இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலமே, ஏற்றுக் கொள்ளல் மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய முடியும்.

7. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும், சிவில் சமூகத்திற்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் இருக்க வேண்டியது அவசியமாகும்.

## முடிவுரை

கடந்த கால அரசாங்கங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அதிகளவு கவனஞ் செலுத்தப்படாத பகுதியாக மீள் திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்பு காணப்படுகின்றது. இது தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய தேவையும், பொறுப்பும் உள்ளதாக இலாப நோக்கற்ற துறைகள் தெரிவிக்கின்றன. ஆனால், காலத்துக்கு காலம் இதில் பல இடைவெளிகளும், அத்துமீறல்களும் காணப்படுகின்றன. அதனால் இவற்றைத் தனி ஒரு அமைப்பாக எதிர்கொள்வது சவால் நிறைந்த ஒன்றாகும். 1970 மத்தியிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி ஆயிரக்

கணக்கானோர் தொழில் வாய்ப்புக்காகச் செல்கின்றனர். அவர்கள் மீள திரும்புவது, அவர்களது மீள் ஒருங்கிணைப்பு என்பன கண்காணிக்கப்படவோ, ஆராயப்படவோ இல்லை. வருடாந்தம் மீள திரும்புபவர்களின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொள்வதற்கான பொறியமைப்பும் இல்லை. முழுமையான மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை உறுதி செய்யும் 2008ஆம் ஆண்டு தேசிய தொழிலாளர் புலம்பெயரல் கொள்கை புலம்பெயரல் நடைமுறையின் அனைத்து நலன் பங்காளர்களாலும் வரவேற்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது வரை இந்த கொள்கை பயனுறுதிமிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால், புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலும், தாமதமும் ஏற்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் பிரேரிக்கப்பட்ட மீள் ஒருங்கிணைப்பு கருத்து முழுமையாக மாற்றப்பட்டுள்ளது. அதில் பாரபட்சமான, தீர்மானமற்ற மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. உள்ளக அரசியல் காரணமாக இந்த நிகழ்ச்சி வெவ்வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. பரந்துபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இந்தத் துறை தொடர்பிலான அனுபவம் அற்ற குழு ஒன்றிடம் நிகழ்ச்சித் திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.புதிய கருத்தானது இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால், புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியானது தனித்து பொருளாதார உதவியை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாகவும் 'வெற்றி பெற்ற' புலம்பெயர் தொழிலாளர்களை மட்டும் கவனத்தில் கொண்டதாகவும் விளங்குகின்றது. அவர்கள் தமது சேமிப்புக்களை அரசாங்க வங்கியிலும், நிறுவனங்களிலும் வைப்பிலிடச் செய்வதே பிரதான நோக்கமாக உள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சமூக, கலாசார விடயங்கள் தொடர்பில் இந்த நிகழ்ச்சியில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும், சமூகத்திற்கும் தமது கடனை செலுத்தி விட்டு கையில் ஒரு சதமும் இன்றி, திறனற்றவர்களாக, மன உளைச்சலுடன் மீள் திரும்பியுள்ள வீட்டுப் பணிப்பெண்களுக்கு என்ன நடக்கும்?** மீள் திரும்பியவர்களின் பயன்களிலும் பார்க்க இந்த மாற்றங்கள் அரசாங்கத்திற்கான மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கான அவர்களது நிதி வெளிப்பாட்டுத் தன்மையை கருத்திற் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளன. மீள் திரும்பியவர்களின் தேவைகளை அடையாளங் காண்பதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் விரைவாக செயற்படுகின்ற போதிலும், நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுழைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன இன்மை காரணமாக முயற்சிகள் பயனற்று போகின்றன. இதன் காரணமாக ஏற்கனவே உதவிகள் வழங்கப்படும் புவியியல் பகுதிகளுக்கு மீண்டும், மீண்டும் உதவிகள் வழங்கப்படுவதுடன். சில பகுதிகள் முற்றாக புறக்கணிக்கப்படுகின்றன. சந்தையின் தேவை மற்றும்

புலம்பெயர் தொழிலாளர்களின் இயலுமை மற்றும் தேவைகள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படாது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தகைமை பயிற்சிகளை வழங்கும் போக்கையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிறுவனங்களில் பல போதி நிதியின்மையினால் சவால்களை எதிர்நோக்கியுள்ளன.

எவ்வாறாயினும், வாழ்வாதார பயிற்சிகள், விழிப்புணர்வை ஏற்படுத்தல், ஆலோசனை சேவைகள் மற்றும் சமூகத்தை கட்டியெழுப்பல் போன்ற மீள திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களை இலக்கு வைத்து செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்காக இந்த நிறுவனங்களைப் பாராட்டியாக வேண்டும். இதில் இருக்கும் குறைபாடுகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அடையாளங் காணப்படல் வேண்டும். மீள் ஒருங்கிணைப்பு தொடர்பில் பயனுறுதி மிக்க தேசிய கொள்கை இன்மையால், நலன் பங்காளர்களுக்கு இடையிலான தற்போதைய விடயங்கள், தனிப்பட்ட மற்றும் அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் புலம்பெயர்வு நடைமுறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நிதித் தன்மை குறித்து தீர்மானம் எடுக்க முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக மீள் ஒருங்கிணைப்பு பயனற்றதாக, சில சூழ்நிலைகளில் பாரபட்சமானதாக அமைந்து விடுகின்றது. தேசிய தொழிலாளர் புலம்பெயர் கொள்கை அதில் உத்தரவாதம் அளிக்கப்பட்டவர்கள் அனைவரும் பயனடையும் வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் மீள திரும்புபவர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்படும் வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டம் திருத்தி அமைக்கப்படல் வேண்டும். அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேவைகள் தொடர்பான ஐ.நா சாசனம் துரிதமாக, தேசிய சட்டத்துடனான ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஆழமான அடிப்படையில் மீள் திரும்பியவர்கள் எதிர்நோக்கும் உண்மையான நிலைவரங்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்படல் வேண்டும். பொருளாதார, சமூக மற்றும் கலாசார அக்கறைகளை உள்ளடக்கிய மீள் ஒருங்கிணைப்புக்காக வெளிப்படையான தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும். மீள் ஒருங்கிணைப்பு தேவைக்கான சர்வதேச பயிற்சிகள் ஆராயப்படல் வேண்டும். சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படல் வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடனும் இணைந்து செயற்படல் வேண்டும். ஆழமான அடிமட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் அவசியமாகும்.இறுதியாக, புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்புரிக்கு பொறுப்பான பிரதான பொறியமைப்பை கவரத் தவறிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நடத்தை,

நடைமுறை, வெளிப்படைத்தன்மை நிலைகள் மற்றும் நம்பகத்தன்மை என்பன பூரணமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். அத்துடன், இதன் செயற்பாடுகள் சுயாதீனமான குழுவினால் கண்காணிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

## நேர்காணல்கள் (ஆங்கில அகர எழுத்துக்களின் வரிசையில்)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை இந்த அறிக்கையில் உள்ள கருத்துக்களுடன் சம்பந்தப்படுத்தி விவாதிக்க முடியாது.

- ஏஞ்சலா(Rev.Sister), புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நல்லாயன் சேவைகள் நிலையம், கொழும்பு
- அதிகாரி பிரேம, நிகழ்ச்சி திட்ட அதிகாரி, தேவசரன, குருநாகல்
- பண்டார சத்துரிக்கா, உளச்சமூக ஆலோசகர் (NCPA), மாவட்ட செயலகம், புத்தளம்.
- சமிந்த, சஜித், முகாமையாளர், சந்தைப்படுத்தல் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு
- சந்திரதிலக்க, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், பெண்கள் அபிவிருத்தி நிலையம் (WDC), கண்டி
- ஜான்ஸ், கெமிலஸ் டீ, (Fr.), பணிப்பாளர், (கரிட்டாஸ்-கண்டி), செட்டிக், கண்டி
- ஜீவந்தி, எம்.எல்.ஏ, ஆலோசகர்ள், வுமன் இன் நீட், குருநாகல்
- கன்னங்கரா, நிலோமி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கண்டி
- காசிம், இலாம், பொறுப்பதிகாரி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், சிலாபம்
- குலத்துங்க, பிரியந்த, நிகழ்ச்சி முகாமையாளர், தன்னார்வ மீள் திரும்பல் பிரிவின் உதவியாளர், IOM, கொழும்பு,
- கான், அசர், கிராம அபிவிருத்தி நிதியம் (RDF), புத்தளம்,
- குருகடுவ, செனானி, சட்ட அதிகாரி, வுமன் இன் நீட், குருநாகல்

- லோகேஸ்வரி. பி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், மானிட அபிவிருத்தி நிறுவனம், கண்டி,

- லிஹினியாகுமார, ஹர்சனி, நிகழ்ச்சி உதவியாளர், புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சி, செட்டிக், கண்டி,

- மக்கீன், எம். பைசர், செயலாளர், Associated Licensed Foreign Employment Agnecies (ALFEA), கொழும்பு

- மஹ்ரூப் பசீனா, கிராம அபிவிருத்தி நிதியம் புத்தளம்

- மெனிக்கே, யு.ஆர்.கே, ஆலோசகர், புலம்பெயர்பவர் சேவை நிலையம், கொழும்பு

- முனசிங்க, முகாமையாளர், நலன்புரி மற்றும் ஆய்வு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு

- பெரேரா, வயோலா, நடத்துனர், ACTFORM, Women and Media Collective, கொழும்பு,

- பெரேரா, தில்ருக்ஷி, WDO, கங்கவத்த கோரளை, மாவட்ட செயலகம், கண்டி

- ரணசிங்க, புத்தி, செயற்றிட்ட அதிகாரி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அலுவலகம், புத்தளம்

- ரண்தெனிய, ஆர்.கே.கே.எம்.பி. பதில் பிரதி பொது முகாமையாளர், பயிற்சி, சந்தைப்படுத்தல் மற்றும் இணக்கம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு

- ரணவக்க, கிங்ஸ்லி, தலைவர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு

- ரிலா, சைனுல், எம்.ரி., குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், பொது நிர்வாக அமைச்சு, கொழும்பு

- சகலசூரிய, பிரித்திக்கா, சட்ட அதிகாரி, NCPA, கொழும்பு

- சமந்தி, எம்.எம், பெண்கள் அபிவிருத்தி அதிகாரி, பிரதேச செயலகம், குருநாகல்

- சரத், ஆலோசகர், லங்கா பிளஸ், கொழும்பு

- சண்முகம், சுரேஷ், சமூகவியல் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு

- சாந்தி, பதில் பெண்கள் அபிவிருத்தி அதிகாரிக, பிரதேச செயலகம், புத்தளம்

- ஸ்மித், மொனிக்கா, ஆலோசகர், IOM, கொழும்பு,

- ஸ்டீபன், பேர்ல், பிரதம பணிப்பாளர், பெண்கள் அபிவிருத்தி நிலையம், கண்டி

- தக்ஷிலா, செரீன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், புலம்பெயர் தொழிலாளர்கள் நிகழ்ச்சி, செட்டிக், கண்டி,

- வித்தாரண, மனோரி, நிகழ்ச்சி திட்ட அதிகாரி, சர்வதேச தொழிலாளர் கூட்டொருமைப்பாட்டுக்கான அமெரிக்க நிலையம் (ACILS), கொழும்பு,

- வணிகதுங்க, ஜயந்த, முகாமையாளர், சமூகவியல் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கொழும்பு

## REFERENCES


- Athukorale, Premachandra (1990). "International Contract Migration and the Reintegration of Return Migrants: The Experience of Sri Lanka", *International Migration Review*, Vol. 24, No. 2: 323-246, http://rspas.anu.edu.au/~athu/Journal%20Papers/International%20Migration%20Review,%201990.pdf

- Bahrain Center for Human Rights (2007). Female Domestic Workers living under the Kafala System in GCC States, Paper presented at 1st Inter-Regional Conference on Asian migrant workers in the Arab world, Doha, 10-11 June 2007, http://bchr.net/en/node/1289

- Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978, Chapter III, http://www.priu.gov.lk/Cons/1978Constitution/Chapter_03_Amd.htm

- Dias, Malsiri (2000). Problems of Children of Migrant Workers. Paper presented at SAARC Regional workshop on children of the SAARC Region with special focus on the impact of the SAARC on the girl child (on file at the Centre for Women's Research library in Colombo)

- Fernando, Nimalka (1998). 'Migrant Women Workers' in Sri Lanka: State of Human Rights 1998. Law and Society Trust, Colombo: 219-236

- Gamburd, Michele Ruth (2000). The Kitchen Spoon's Handle–Transnationalism and Sri Lanka's Migrant Housemaids. Cornell University Press, Ithaca

- Government of Sri Lanka (2008). Initial report of the state party to the UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families, CMW/C/LKA/1, 19 June 2008, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G08/426/43/PDF/G0842643.pdf?OpenElement

- Government of Sri Lanka (2009). Written Replies to the List of Issues (CMW/C/LKA/Q1) to be taken up in consideration of the initial report of Sri Lanka UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families (MWC/C/LKA/1), CMW/LKA/Q/1Add.1, 20 August 2009, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G09/444/10/PDF/G0944410.pdf?OpenElement

- Gunatilleke, Godfrey (ed.) (1986). Migration of Asian Workers to the Arab World. United Nations University, Tokyo

- Gunatilleke, Godfrey (ed.) (1991). Migration to the Arab World – Experience of Returning Migrants. United Nations University Press, Tokyo

- Human Rights Watch (2004). Bad Dreams – Exploitation and Abuse of Migrant Workers in Saudi Arabia, http://www.hrw.org/en/reports/2004/07/13/bad-dreams-0

- Human Rights Watch (2007). Exported and Exposed; Abuses against Sri Lankan Domestic Workers in Saudi Arabia, Kuwait, Lebanon, and the United Arab Emirates, http://www.hrw.org/en/reports/2007/11/13/exported-and-exposed-1

- Human Rights Watch (2008). 'As if I'm Not Human': Abuses against Asian Domestic Workers in Saudi Arabia, http://www.hrw.org/en/reports/2010/04/28/

- Masnavi, Nura (2004). "Reforming the Sri Lankan Foreign Employment Act: Increasing Protection for Migrant Workers and Employing Lessons from the Philippines", *Law & Society Trust Review*, Volume 14 Issue 201 (July 2004): 1-19

- Ministry of Foreign Employment Promotion and Welfare, Sri Lanka (2008). National Labour Migration Policy for Sri Lanka, http://www.ilo.org/public/english/protection/migrant/download/mpolicy_srilanka_en.pdf

- Ratnayake, Jayantha (2009). "Contribution of women in Sri Lankan society", *The Island*, 16 June 2009, http://www.island.lk/2009/06/16/business7.html

- Save the Children in Sri Lanka (2006). Left Behind, Left Out – The Impact on Children and Families of Mothers Migrating for Work Abroad. Save the Children in Sri Lanka, Colombo, http://www.crin.org/docs/save_sl_left_out.pdf

- Senadheera, Apeksha (2007). 'Sri Lanka to hone migrant worker skills", *The Island*, 16 June 2007, http://www.island.lk/2007/06/16/business10.html

- Somarathna, Rasika (2010), "Remittances top Forex earnings", *Daily News*, 5 July 2010, http://www.dailynews.lk/2010/07/05/news01.asp

- Sri Lanka Bureau of Foreign Employment Act No 21 of 1985, http://www.slbfe.lk/downloads/applications/Act_English.pdf

- Sri Lanka Bureau of Foreign Employment (2008), Annual Statistical Report of Foreign Employment 2008, SLBFE, Battaramulla, http://www.slbfe.lk/downloads/Annual%20Statistical%20Report%20 2008%20-%20SLBFE.pdf

- Sri Lanka Bureau of Foreign Employment (2009). Middle East Pre-Departure Training Manual, SLBFE, Colombo

- Transparency International Sri Lanka (2010). Integrity in Foreign Employment: An analysis of corruption risks in recruitment, http://www.tisrilanka.org/pub/reports/FES_REPORT.pdf

- UN Committee on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families (2009). Concluding observations on the initial state report of Sri Lanka, CMW/C/LKA/CO/1, 14 December 2009, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G09/467/85/PDF/G0946785.pdf?OpenElement

- United Nations Development Programme (2008). HIV Vulnerabilities of Migrant Women: from Asia to the Arab States – Shifting from silence, stigma and shame to safe mobility with dignity, equity and justice UNDP RCC, Colombo, http://www2.undprcc.lk/resource_centre/pub_pdfs/P1105.pdf

- Women and Media Collective and Action Network for Migrant Workers (2008). Sri Lanka NGO Shadow Report on the International Convention on the Protection of the Rights of All Migrant Workers' and their Families, WMC and ACTFORM, Colombo,http://www2.ohchr.org/english/bodies/cmw/docs/ngos/ANMW_WMC_SriLanka11.pdf

# சமவாயத்தின் 74 வது உறுப்புரையின் கீழ் அரச தரப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பரிசீலிப்பு

## எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான குழுவின் முடிவான அவதானிப்புக்கள்[1]

## இலங்கை

1. 2009 ஒக்ரோபர் 12ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற குழுவின் 119 வது மற்றும் 120 வது கூட்டங்களில் (பார்க்க CMW/C/SR ) குழுவானது இலங்கையின் ஆரம்ப அறிக்கையை (CMW/C/LKA/1) பரிசீலித்ததுடன் ஒக்ரோபர் 15 ஆம் திகதி நடைபெற்ற அதனது 125வது கூட்டத்திலே பின்வரும் முடிவான அவதானிப்புக்களை சேர்த்துக் கொண்டது.

### அ. அறிமுகம்

2 அரச தரப்பின் ஆரம்ப அறிக்கையை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்களுக்காக குழுவானது வருந்தும் அதேவேளையில், அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதையும் பிரச்சினைகளின் பட்டியலுக்கான பதில்களையும் அது வரவேற்கின்றது. அறிக்கை மற்றும் சமவாயத்தை அமுல்படுத்துதல் சம்பந்தப்பட்ட, சட்ட மற்றும் நடைமுறைத் தன்மை வாய்ந்த கேள்விகள் மீதான மிகவும் விசேடித்த பதில்களை, பிரச்சினை நிரல்களுக்கு வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட, தகைமை வாய்ந்த உயர்மட்ட தூதுக்குழுவுடனான உருப்படியான பயனளிக்கும் கலந்துரையாடலை குழு பாராட்டுகின்றது.

3 இலங்கையானது பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தொழிலாளர்களாக வெளிநாடுகளில் பணியாற்றுவோரின் பூர்வீக நாடாக உள்ள நாடு என குழு அங்கீகரிக்கிறது.

4. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை பயன்படுத்திக்கொள்ளும் நாடுகள்

[1] சாசனத்தின் உறுப்புரை 74இன் கீழ் அரச தரப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இடம்பெற்ற அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை பாதுகாத்தல் தொடர்பிலான செயற்குழுவின் 11ஆவது அமர்வின் போது உள்வாங்கப்பட்ட நிறைவான அவதானிப்புக்கள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. http://www2.ohchr.org/english/bodies/cmw/cmws11.htm

சமவாயத்தின் தரப்பினராக இன்னும் இல்லாதிருப்பதனையும் சமவாயத்தின் கீழ் அவர்களுக்கு உரித்தாக உள்ள உரிமைகைள அனுபவிப்பதற்கு இது ஒரு தடையாக உள்ளது என்பதையும் குழு கவனத்தில் எடுக்கிறது.

## ஆ. சாதக அம்சங்கள்

5. அரச தரப்பினுடைய தொழிலாளர் உரிமைகளுக்கான அர்ப்பணிப்பை, அதனுடைய தேசிய அரசியலமைப்பு, சட்டவாக்கம், நீதித்துறை, மற்றும் நிர்வாகப் பொறிமுறைகளை உள்ளடக்கிய சட்டக அமைப்பு என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை குழுவானது பாராட்டுடன் நோக்குகிறது.

6. அரச தரப்பானது, தொழிலாளர் புலம்பெயர்வு பிரச்சினைகளை அங்கீகரித்து, 2007 இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் என்ற புதிய அமைச்சை அமைத்ததை குழு வரவேற்கின்றது.

7. சர்வதேச தொழிலாளர் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட விடயம் சார் உதவியுடன் எடுத்துரைக்கப்பட்ட இலங்கைக்கான தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கை ஒன்று 2008ம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதை குழு வரவேற்பதுடன், புலம்பெயர் தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் உரிமைகள் மீதான இக் கொள்கையின் தாக்கம் மீதான அரச தரப்பின் அடுத்த அறிக்கையின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு அது எதிர்பார்த்து இருக்கின்றது.

8. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் முகாமைத்துவம் மீதான, பிராந்திய ஆலோசனை செயன்முறையில் அரச தரப்பின் முழுமையான பங்களிப்பினையும், ஆசியாவைச் சேர்ந்த நாடுகளுக்கான ஒப்பந்தத் தொழிலையும் அத்துடன் கொழும்பு செயன்முறை மற்றும் அபுதாபி கலந்துரையாடல் என்பவற்றையும் குழுவானது பாராட்டுடன் குறித்துக் கொள்கின்றது.

9. சமவாயத்தின் உத்தியோகபூர்வ அங்கீகரிப்பை சர்வதேச ரீதியில் ஊக்குவிப்பதற்காக சொந்த நாடு, இடைத்தங்கல் நாடு, மற்றும் செல்லும் நாடு என்பவற்றில் செயற்படுத்துவதற்கு, அரச தரப்பானது ஆற்றும் முழுமையான பங்களிப்பை குழுவானது பாராட்டுடன் குறித்துக் கொள்கின்றது.

10. பின்வரும் கருவிகளை அண்மையில் உத்தியோகபூர்வ ரீதியாக ஏற்றுக்

கொண்டதை அல்லது அங்கீகரித்துக் கொண்டதை குழுவானது மேலும் வரவேற்கின்றது அவையாவன:

a. குழந்தைகளை விற்றல், குழந்தைகளை விபசாரத்தில் ஈடுபடுத்தல் மற்றும் குழந்தைகளை பாலியல் படங்களில் பயன்படுத்தல் என்பவை தொடர்பான குழந்தைகளின் உரிமைகள் மீதான சமவாயத்தின் விருப்பத்துக்குரிய பின்னேடு

b. 2000ம் ஆண்டின் நாடுகடந்து இடம்பெறும் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம்

c. 1963ம் ஆண்டின் வெளிநாட்டு தூதுவர் உறவுகள் மீதான வியன்னா சமவாயம்

d. வலிந்து வேலை வாங்குவதை இல்லாதொழித்தல் தொடர்பான 1957ம் ஆண்டின் 105ம் இலக்க ILO சமவாயம்.

## இ. அக்கறைக்குரிய பிரதான விடயங்களும் ஆலோசனை மற்றும் சிபாரிசுகளும்

11 அரச தரப்பால் பொறுப்பெடுக்கப்பட்டுள்ள முனைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆர்வத்துடன் குழு கவனித்துக் கொள்கின்றது. இத்திட்டங்களில் இலங்கை வெளிநாட்டு பணியகத்தால் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்காக புறப்படுவதற்கு முன்னர் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், முன்னோடி பிரதேச புலம்பெயர் தகவல்கள் மற்றும் சேவைக் கருமபீடங்கள் எட்டு அமைக்கப்பட்டமை, புலம்பெயர் தொழிலாளர்களின் சம்பாத்தியங்களையும் சேமிப்புக்களையும் மாற்றி அனுப்புவதற்கான ஏற்பாடுகள், ஒரு 'நலனோம்பல் நிதியத்தை' உருவாக்கியுள்ளமை, மற்றும் ஒரு காப்புறுதி திட்டத்தையும் ஓய்வூதியத் திட்டத்தையும் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்காக செயற்படுத்துகின்றமை, புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டம், மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நாடு தழுவிய ரீதியில் சட்டத்திற்குப் புறம்பான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றமை முதலனவற்றைக் கூறலாம். ஆனாலும் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த

தகவல்கள் இல்லாமையை இட்டு குழு வருந்துகின்றது. அத்துடன் நடைமுறையில் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றின் விழிப்புணர்வும் அமுல்படுத்துகையும் போதியதற்று இருப்பதையிட்டு அது கவலையடைகிறது.

12. அரச தரப்பானது, இந் நிகழ்ச்சித்திட்டங்களின் அறியக்கூடிய தன்மையை முன்னேற்றுவதற்கும், அதனை நடைமுறைப்படுத்து -வதற்குமான தாக்கமான ஏற்பாடுகளை முன்னேற்றுவதற்கு, புலம்பெயர்ந்த குழுக்கள், உரிய சர்வதேச விசேடித்த முகவரமைப்புகள் மற்றும் ஏனைய நலன் பங்காளர்களுடன் ஆலோசிக்க வேண்டுமென குழு சிபார்சு செய்கின்றது.

## I. நடைமுறைப்படுத்தலின் பொதுவான ஏற்பாடுகள (சரத்துகள் 73 மற்றும் 84)

### சட்டவாக்கம் மற்றும் பிரயோகம்

13. தற்போதுள்ள சட்டவாக்கமானது, சமவாயத்தின் பல நியமங்களையும் உத்தரவாதங்களையும் வழங்குவதுடன், தேசிய சட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்களை இனங்காணுவதற்காகவும், சர்வதேச நியமங்களுக்கு இணைவான நிலைக்கு கொண்டு வருதற்காகவும் மனித உரிமைகளின் முன்னேற்றத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவுமான தேசிய செயற்திட்டத்தின் விருத்தியின் சட்டக வேலையின் உருவாக்கச் செயன்முறை நடைபெறுவதாகவும் அரச தரப்பு கூறுவதை குழுவானது அவதானிக்கிறது. ஆனாலும் அதனுடைய சட்டவாக்கமானது சமவாயத்துடன் ஒத்து இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்த ஏற்பாட்டையும் அரச தரப்பு செய்யவில்லையென்று குழு கவலை கொள்கிறது.

14. அதனுடைய சட்டவாக்கமானது சமவாயத்தின் ஏற்பாடுகளோடு ஒருமைப்பாடு உடையதாக இருப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை எடுக்கும்படி குழுவானது அரச தரப்பைத் தூண்டுகிறது.

15 சமவாயத்தின் 76 மற்றும் 77ம் உறுப்புரைகளின் பிரகாரம், அரச தரப்புக்களிடமிருந்து தனிநபர்களிடமிருந்தும் தொடர்பாடல்களைப் பெற்றுக்கொள்ளும் குழுவின் தகைமையை அங்கீகரிக்கும் பிரகடனங்களை இன்னும் இலங்கை செய்யவில்லை என குழு குறிப்பிடுகிறது.

16 சமவாயத்தின் 76 மற்றும் 77 ஆம் உறுப்புரைகளில் வழங்கப்பட்டுள்ள பிரகடனங்களை மேற்கொள்வதற்கு பரிசீலிக்கும்படி அரச தரப்பை குழு ஊக்குவிக்கிறது.

17 வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்தல் (மீளமைக்கப்பட்டது) மீதான (1949ம் ஆண்டு) 97ம் இலக்க ILO சமவாயத்தை அல்லது புலம்பெயர் தொழிலாளர் (மிகை நிரப்பு ஏற்பாடுகள்) மீதான (1975ம் ஆண்டு) 143ம் இலக்க சமவாயத்தையோ இன்னும் உத்தியோகபூர்வ ரீதியாக அரச தரப்பு ஏற்றுக்கொள்ளாததை குழுவானது சுட்டிக் காட்டுகிறது.

18 அரச தரப்பானது கூடுமான வரையில் ILO சமவாயம் இலக்கம் 97 மற்றும் 143 என்பவற்றை உத்தியோகபூர்வ ரீதியாக ஏற்றுக்கொள்வதை பரிசீலிப்பதை துரிதப்படுத்தும்படி அரச தரப்புக்கு அழைப்பு விடுக்கிறது.

19 ஆட்களை விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களை வஞ்சக் கடத்தல் செய்வதை தடுத்தல், ஒடுக்குதல், மற்றும் தண்டனை வழங்குதல் போன்றவற்றின் மீதான விருப்பத்துக்கான பின்னேடு மற்றும் புலம்பெயர்பவர்களை நிலத்தால், கடலால், ஆகாயத்தால் கடத்திச் செல்வதற்கு எதிரான சமவாயத்தின் விருப்பத்துக்குரிய பின்னேடு, நாடு கடந்த குற்றச் செயல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் மிகை நிரப்பீடு என்பனவற்றில் அரச தரப்பானது கையெழுத்திட்டுள்ள போதும் உத்தியோகபூர்வமாக அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை குழுவானது குறித்துக் காட்டுகிறது.

20 சமவாயத்தின் ஏற்பாடுகளையும் உறுப்புரை 68 இல் உள்ளடக்க ப்பட்டுள்ள அனைத்தையும் செயற்திறன் மிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு பின்னேடுகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இக்குழுவானது இப் பின்னேடுகளை கூடுமானளவு விரைவில் உத்தியோகபூர்வ ரீதியாக ஏற்றுக்கொள்ள முன்செல்ல வேண்டுமென குழுவானது அரச தரப்புக்கு சிபார்சு செய்கின்றது.

## தகவல் சேகரிப்பு

21 வெளிநாட்டிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை சட்டத்திற்கு மாறாக ஆட்சேர்த்தமைக்காக சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்ட ஆட்கள்

பற்றிய இலங்கை அரச தரப்பினரால் வழங்கப்பட்ட தரவுகளை குழுவானது விருப்புடன் அவதானிக்கிறது. ஆனாலும் அரச தரப்பானது தனது பிராந்தியத்திலுள்ள வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர் தொடர்பாகவும் அல்லது முறையற்ற முறையில் வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்கள் தொடர்பாகவும் சிறிதளவு தகவல்களையே வழங்கியுள்ளமை குறித்து அது கவலை கொள்கிறது.

22 சமவாயத்தின் அமுல்படுத்துகையை மதிப்பீடு செய்வதற்கும் போதியளவு கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் விருத்தி செய்வதற்கும் அரச தரப்பு புலம்பெயர் தொழிலாளர்களின் நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்கு நம்பத் தகுந்த தரமான தகவல்கள் அவசியமானது என்பதை குழு நினைவு கூருகின்றது. இது சம்பந்தமாக அரச தரப்புக்கள் பின்வருவனவற்றைச் செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிறது:

a) இலங்கையிலுள்ள வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றும் முறையற்ற இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களின் பால்நிலை மற்றும் தேசிய இன ரீதியிலான சராசரிப்படுத்தப்படாத புள்ளிவிபரங்கள் ஊடாகவும் தகவல்கள் போதியதற்றதாக உள்ளபொழுது ஆய்வுகள் ஊடாக அல்லது மதிப்பிடப்பட்ட கணிப்புக்கள் ஊடாகவும் ஒரு சுமுகமான பொறிமுறையைக் கைக்கொள்ளுதல் மற்றும்,

b) தகவல் சேகரிப்பை முன்னேற்றுவதற்காகவும், குறிப்பாக முறையற்ற விதத்தில் இலங்கையிலிருந்து புலம்பெயரும் தொழிலாளர்கள் தொடர்பில் தகவல் சேகரிப்பை முன்னேற்றுவதற்காக இலங்கைத் தூதரங்கள், வெளிநாட்டு தூதுவர்கள், இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் எனபவற்றுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

## சமவாயத்தின் பரப்புகையிலான பயிற்சி

23 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது அதனுடைய நிகழ்ச்சித் திட்டங்களின்போதும் வேறு மன்றங்களிலும் சமவாயத்தின்

ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை குழுவானது ஆர்வத்துடன் நோக்குகின்றது. ஆனாலும் சமவாயத்தின் எல்லா ஏற்பாடுகளும் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை என்பதையும் உரிய அரச அதிகாரிகள், ஊர்காவல் பொலிஸ் அதிகாரிகள், தூதரக மற்றும் தூதராலயப் பணியாளர்கள், சமூகப் பணியாளர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் உரிய அரசாங்க அதிகாரிகள் முதலானவர்களுக்கென விசேடமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எதுவும் அமுலில் இல்லை என்பதையிட்டு குழு கவலையடைகிறது. மேலும் சமவாயமானது தேசிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படவில்லை என்பதையிட்டும் குழுவானது கவலையடைகிறது.

24 அரச தரப்பினர் பின்வருமாறு செயற்படுவதை குழுவானது ஊக்குவிக்கிறது:

a. சமவாயம் குறித்து புலம்பெயர்வு இடம்பெறும் இடங்களில் பணியாற்றும் உரிய அரச அதிகாரிகள் , எல்லைப் பொலிஸ் அதிகாரிகள், தூதராலய அதிகாரிகள், சமூகப் பணியாட்கள் மற்றும் சட்டத்தரணிகள் என்போருக்கு விசேடித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

b. புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்குமான பயிற்சிகள் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன சமவாயத்தின் எல்லா ஏற்பாடுகளையும் உட்படுத்தி யிருப்பதை உறுதிப்படுத்துதல்.

c. சமவாயத்தை எல்லாப் பொதுமக்களும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக அதனை தேசிய மொழிகளில் மொழி பெயர்த்தல்.

2. பொதுக் கொள்கைகள் (உறுப்புரைகள் 7 மற்றும் 83)

பாரபட்சமின்மை

25 இலங்கை அரசியலமைப்பிலுள்ள அநேகமான ஏற்பாடுகள் இலங்கைப் பிராந்தியத்திலுள்ள எல்லா ஆட்களுக்கும் பிரயோகிக்கக்கூடியது என்பதை பாராட்டுடன் குழு அவதானிக்கிறது. ஆனாலும் அரசியல் அமைப்பின்

உறுப்புரை 12(2) மற்றும் 14 கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகளானவை முறையே பாரபட்சத்திற்கு எதிரான பாதுகாப்பையும் அமைதியான ஒன்றுகூடல், சங்கம் அமைத்தல் மற்றும் தொழிற் சங்கங்களை உருவாக்குதல் போன்ற உரிமைகளானவை பிரசைகளுக்கு மாத்திரமே பிரயோகிக்கப்படக்கூடியனவாக உள்ளன.

26 தனது பிராந்தியத்தில் உள்ள அல்லது அதனது நீதித்துறையின் கீழ் உட்பட்டு வாழும் எல்லா புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் எல்லாக் குடும்ப உறுப்பினர்கள் சமவாயத்தின் 7 வது உறுப்புரையுடன் இணங்கக்கூடியவாறாக எந்தப் பாரபட்சமும் இன்றி சமவாயத்தால் வழங்கப்பட்ட உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரச தரப்பானது அவசியமான படிநிலைகளை எடுக்க வேண்டுமென குழுவானது சிபார்சு செய்கிறது.

## 3. அனைத்துப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உறுப்பினர்களது மனித உரிமைகள் (உறுப்புரைகள். 8-35)

27 கலாசார பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் (E/C.12/1/Add.24, பந்தி. 13) மீதான தனது கரிசனையை குழு வெளிப்படுத்தியுள்ளது. இதன்படி நூற்றுக்கணக்கான ஆயிரம் இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளில் வீட்டு உதவியாளர்களாகப் பணிபுரிவதையும், அவர்களில் பலர் குறைவான ஊதியத்துடனும், உண்மையில் அடிமைகளாக நடத்தப்படுவதையும் குறித்து அதனது அக்கறையை குழு நினைவூட்டுகிறது. புலம்பெயர் வீட்டுத் தொழிலாளர்களுக்கான நியம அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் உருவாக்கம் மற்றும் குறைந்த சராசரி சம்பளம் என்பன தொடர்பாக அரச தரப்பால் வழங்கப்பட்ட தகவல்களை நோக்கும் அதேவேளையில், குழுவானது பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் வேலை வழங்கும் நாடுகளிலும், அத்துடன் புறப்படுவதற்கு முன்பதாக விமானநிலைய ஆட்களாலும் உடல் மற்றும் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதான அறிக்கைகளால் குழு கவலை அடைகின்றது.

28 பல்வேறு விதமான தாக்கப்படக்கூடிய நிலைமைகளை எதிர்கொள்ளும் புலம்பெயர் பெண்களின் நிலையை உயர்த்துவதிலும், வலுவூட்டுவதிலும் முயற்சியை கவனயீர்ப்புச் செய்யும்படியாக அரச தரப்பைக் குழு தூண்டி நிற்கிறது:

a. பாரபட்சமான நடத்துகையும் துஸ்பிரயோகமும் மிகவும் கூடியதாகவுள்ள நாடுகளுடன் இருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் மேற்கொள்வதன் ஊடாக, தாக்கப்படக்கூடிய நிலைகளிலுள்ள பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான வேலைச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும், ஒழுங்குகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்படுத்துவதற்கும், பேச்சுவார்த்தை முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்

b. புலம்பெயர் பிரச்சினைகளுடன் ஈடுபடும் அரச பணியாட்களுக்கு குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வேலையிடத்தில் துஸ்பிரயோகத்திற்கு எதிராக நீதியை நாடும் பொழுது சட்டம் மற்றும் ராஜரீக உதவிகளை வழங்குவதற்கு பால்நிலை மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகளை மேற்கொள்ளல்.

c. புறப்படுவதற்கு முன்பான சர்வதேச விமான நிலையத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். பால்நிலை மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகளை விமான நிலையப் பணி ஆட்களுக்கு வழங்குவது உட்பட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான துஸ்பிரயோகம் அல்லது வன்முறை குறித்த எல்லா முறைப்பாடுகளையும் கண்காணிப்பதும் விசாரணை செய்வதும்.

29 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிநிதிகளாக வெளிநாட்டில் பணியாற்றுவதற்கென தொழில் நலனோம்பல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டதை குழுவானது வரவேற்கின்றது. இந்த நலனோம்பல் உத்தியோகத்தர்கள் செல்வதற்கு முன்பதாக ஆற்றுப்படுத்தல் சேவை, முரண்பாட்டு முகாமைத்துவம், மற்றும் நலனோம்பல் உதவி என்பவற்றில் பல விடயங்களில் பயிற்சி பெற்றுக் கொள்வதை பாராட்டுடன் குழு அவதானிக்கும் அதேவேளையில், சில தூதரலாயங்களும், தூதரகங்களும் மாத்திரமே சென்றுள்ள நாட்டில் சட்டத்தரணிகளால் முகாமைத்துவம் செய்யப்படும் சட்ட உதவி கருமபீட வசதிகளைக் கொண்டுள்ளதையிட்டு அது கவலையடைகின்றது. அத்துடன் தொழில் நலனோம்பல் உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக உள்ளூர் மொழிகளில் போதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் அந்த நாடுகளில் தொழிற் சட்டங்களை தெரிந்து கொள்வதற்கும் தொடர்ச்சியான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதில்லை.

30 தொழில் நலனோம்பல் உத்தியோத்தர்கள் தொழிற் சட்டங்கள் குறித்து அறிவுடையோராயும் தாம் பணியாற்றும் நாடுகளில் செயன்முறைகள் குறித்து அறிவுடையோராயும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரச தரப்பைக் குழுவானது ஊக்குவிப்பதுடன், அரச தரப்பினரின் தூதரகங்கள் மற்றும் தூதராலயங்களில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்ட உதவி கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படவும் வேண்டும்.

## 4. ஆவணப்படுத்தப்பட்ட ஒழுங்கு கிரம முறைகளைப் பின்பற்றிய புலம்பெயர் தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் ஏனைய உரிமைகள் (உறுப்புரிமைகள் 36-56)

31 சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம் மற்றும் தொழிற் சங்கங்களை உருவாக்கும் உரிமை என்பன இலங்கை அரசியலமைப்பின் 14வது உறுப்புரையின் கீழ் இந்த உரிமைகளானவை பிரசைகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டவையே அன்றி புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை என்பதைக் குழுவானது கவலையுடன் அவதானிக்கிறது.

32 அரச தரப்பானது எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இலங்கைக்குள்ளே சட்டரீதியாக வாழும் பொழுது சங்கங்களையும் தொழிற் சங்கங்களையும் உருவாக்கவும் தலைமைத்துவத்தை உருவாக்கவும் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான சமவாயத்தின் 40வது உறுப்புரையின் பிரகாரம் ஒன்றியங்கள் மற்றும் தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் ஒருங்கிணைவதற்கான உரிமையைப் பாதுகாத்தல் மீதான (1948ம் ஆண்டு) 87ம் இலக்க **ILO** சமவாயத்தின் பிரகாரமும் அரச தரப்பானது தேவையான படிநிலைகளை எடுக்க குழுவானது சிபார்சு செய்கிறது.

33 வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் தேர்தல்களில் பங்குபற்றுலை வசதிப்படுத்துதல் தொடர்பாக அரச தரப்பால் அளிக்கப்பட்ட விளக்கங்களைக் கவனத்தில் எடுக்கும் அதேவேளையில் குழுவானது எவ்வாறாயினும் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை தம் பூர்வீக நாட்டில் செயற்படுத்த முடியாதிருப்பது குறித்து கவலையடைகிறது.

34 வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டு தேர்தல்களில் பங்குபற்றுவதற்கான சாத்தியத்தை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லாப் படிநிலைகளையும் இலங்கை அரச தரப்பு மேற்கொள்ள வேண்டுமென குழு தூண்டுகிறது.

35 இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்புகைகள் அரச தரப்பின் பொருளாதாரத்தின் முக்கிய உட்கூறாக உள்ளதுடன், அரச தரப்பானது புலம்பெயர் தொழிலாளர்களின் சம்பாதிப்புகளையும், சேமிப்புகளையும் மாற்றி அனுப்புவதற்கான பல வசதிகளை கைக்கொள்ளுவதற்கான பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பதைக் குழுவானது அவதானித்துள்ளது, முறைசார் பண அனுப்புகைகளுக்கு மேலதிகமாக உயர் பணப் பரிமாற்ற செலவினங்களின் நிமித்தமாக முறைசாரா வழிகள் ஊடாகவும் பெருந்தொகையான பணம் அனுப்பப்படுவதைக் குழு அவதானிக்கிறது.

36 பண அனுப்புகை பாய்ச்சலின் வடிவங்களையும் அளவுகளையும் பண அனுப்புகைகளை மேற்கொள்வதற்கு முறைசாரா மார்க்கங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள் குறித்தும் நல்ல விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு புலம்பெயர் தொழிலாளர்கள், நிதிச் சேவை வழங்குனர்கள், கொள்கை வகுப்பாளர்கள் முதலானவர்கள் உள்ளடங்கலாக எல்லா நலன் பங்காளர்களையும் உள்ளடக்கியதாக ஒரு ஆய்வை அரச தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென குழு சிபார்சு செய்கின்றது. முறைசார் பண அனுப்புகைகளை வசதிப்படுத்துவதற்கு அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வழிகளையும் முறைகளையும் அவர்களுக்கு கிடைக்கச் செய்து அவைகளை அதிகரித்து வலுப்படுத்துவதை வசதிப்படுத்துவதற்காக அரச தரப்பானது வங்கிகள் நிதி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், நுண்நதி நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலே இணைப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென குழு மேலும் சிபார்சு செய்கின்றது.

## 5. தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சர்வதேச புலம்பெயர்வுடன் தொடர்புபட்ட நல்ல ஒப்புரவமான மனிதத்தன்மையான சட்டபூர்வமான நிலைமைகளை ஊக்குவித்தல்

(உறுப்புரிமைகள் 64-71).

37 அரச தரப்பினரால் தயாரிக்கப்பட்ட மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான தேசிய செயற்திட்டமானது வஞ்சக் கடத்தல், முறையற்ற புலம்பெயர்வு, புலம்பெயர்வு தொழிலாளர்களின் பாதுகாப்பை பலப்படுத்தல், புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குரிமைகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வுகள் மற்றும் இலங்கையில் புலம்பெயர் தொழிலாளர்களின் நிலைமை உள்ளடங்கலாக புலம்பெயர் பிரச்சினைகள் மீது கவனக் குவிப்புச் செய்யும் என்பதைக் குழுவானது விருப்புடன் அவதானிக்கிறது. சிவில் சமூகங்களே இந்தத் தேசிய செயற்திட்டத்தை வரைவதிலும் செயற்படுத்துவதிலும் சம்பந்தப்பட்டுள்ளன என்ற அரச தரப்பின் தகவலை குழுவானது வரவேற்கின்றது. ஆனாலும் இச் செயற்திட்டமானது இன்னும் வரைபுக் கட்டத்திலே இருக்கின்றது என்பதையும் 2010 தொடங்கும் வரையும் அதனை வெளியிடுவதற்கு எதிர்பார்க்க முடியாது எனவும் குழுவானது அவதானிக்கிறது. அத்துடன் இறுதி ஆவணத்திலே புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கான வடிவங்கள் குறித்து சுட்டிக் காட்டப்படவில்லை என்பதையும் குழு அவதானிக்கிறது.

38 சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட இந்த முடிவான அவதானிப்புகளில் எடுத்தியம்பப்பட்ட அக்கறைகள் சிபார்சுகளை தேசிய செயற்திட்டமானது கவனத்தில் கொண்டுள்ளது என்பதை அரச தரப்பு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென குழு தூண்டுகிறது, மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான செயற்திட்டமானது அதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதை அரச தரப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் இதைத் தாமதமின்றி மிகக்கூடிய விரைவில் வெளியிடுவதற்கு அரச தரப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும் குழு சிபார்சு செய்கிறது.

39 அதிகளவில் புலம்பெயர் தொலிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இருபக்க ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டுள்ளதையும், வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குப் புறப்படுவதற்கு முன்பதாக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அரச தரப்பின் கட்டாய பதிவுத் திட்டத்தையும் மட்டுமன்றி புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரச தரப்பால் எடுக்கப்பட்ட ஏனைய ஏற்பாடுகளான் சேவை ஒப்பந்தங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளுக்கு முன்னால் கைச்சாத்திடப்பட வேண்டும் என்ற

தேவைப்பாட்டையும் சேவை ஒப்பந்தங்களானவை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும் விருப்புடன் குழு அவதானிக்கிறது. ஆனாலும் செல்லும் நாடுகளில் இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்கள் துஸ்பிரயோம் செய்யப்படுதல் பிழையாக நடத்தப்படுதல் குறித்த அறிக்கைகளையும் பாலியல் மற்றும் உடலியல் ரீதியான வன்முறைகள் அச்சுறுத்தல் தரக்குறைவான நிலைமைகளில் பணியாற்றல் நீண்டநேர வேலை போதுமான உணவற்ற நிலைமை, மருத்துவக் கவனப்பின்மை, சட்டரீதியற்ற குறைந்த சம்பளம், சம்பளத்தைக் கொடுக்காமல் வைத்திருத்தல், நிர்ப்பந்திக்கப்பட்ட நீண்டநேர வேலை என்பவை தொடர்பில் வெளிவரும் அறிக்கைகள் குறித்து குழுவானது கவலை அடைகிறது.

40 அரச தரப்பு பின்வருமாறு செயற்பட குழு சிபார்சு செய்கிறது:

a. புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் சமவாயத்தின் உரிய பொருத்தமான ஏற்பாடுகளை முன்னேற்றகரமாகவும், உறுதியாகவும் இந்த ஒப்பந்தங்களின் பிரதான நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காகவும் பெருமளவான புலம்பெயர் தொழிலாளர்களைப் பெறும் நாடுகளுடன் பேச்சுவார்த்தை செய்து இருபக்க ஒப்பந்தங்களுக்கான முயற்சிகளைத் தொடர வேண்டும்

b. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நல்ல ஒப்புரவான மனிதத்தன்மையான சட்டரீதியான நிலைமைகளை ஊக்குவிப்பதற்காக இலங்கைத் தொழிலாளர்களை பெற்றுக் கொள்ளும் நாடுகளுடன் அரச தரப்பு இராஜரீக சேவைகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள நலனோம்பல் அதிகாரிகள் ஆகியோருடனான ஒத்துழைப்பைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்

c. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அரச தரப்பின் தூ தரகங்களாலும், இராஜரீக நிலையங்களாலும் வழங்கப்படும் சேவைகளை மேலும் முன்னேற்றுவதற்கு படிநிலைகள் எடுக்கப்பட வேண்டும். சட்ட உதவிகளை வழங்குதல் மற்றும் உளவியல் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பன

உட்பட சேவைகளை வழங்கலாம்.

41 புலம்பெயர் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் பல நாடுகளில் சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலில் இருப்பதையும் சமூகப் பாதுகாப்பு எனும் விடயம் அரச தரப்பிற்கும் தொழில் பெறும் நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்கும் அதே வேளையில் அரச தரப்பால் வழங்கப்பட்ட தகவல்களில் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை வேலைக்குப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுடன் சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இல்லையென குறிப்பிடப்படுவது குறித்து குழு கவலையடைகிறது. இதன் நிமித்தம் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் ஓய்வூதியங்களையோ ஏனைய சமூகப் பாதுகாப்பு நன்மைகளையோ தாம் வேலை செய்த நாடுகளிடமிருந்து குறிப்பாக இத்தாலி, சைப்பிரஸ் முதலான நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளில் வேலை செய்பவர்கள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

42 தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் மற்றும் அனுப்பும் நாடுகளுக்கிடையில் சமூக பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு சமரசம் செய்யும்படி அரச தரப்பிற்குக் குழு சிபாரிசு செய்யும் அதே வேளை, புலம்பெயர் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை பொருத்தமான இடங்களில் விடயங்களில் தாம் வேலை செய்யும் நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள இது உதவும் என்று குழு சுட்டிக் காட்டுகின்றது.

43 புலம்பெயர் தொழிலாளர்களை வேலைக்கு சேர்ப்பதற்கான கொள்கை வழிகாட்டுதல்களை அரச தரப்பு ஏற்படுத்தியுள்ளதை குழுவானது வரவேற்கின்றது. கடும் கட்டணங்களை அறவிடும் ஆட்சேர்ப்பு முகவர்களை தண்டிப்பது மற்றும் பலவிடயங்களை உள்ளடக்கிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்காலத் திருத்தங்களை குழு வரவேற்கின்றது. ஆனாலும் இன்னும் சில ஆட்சேர்ப்பு முகவர்கள் சுரண்டல் அல்லது துஸ்பிரயோகச் செயற்பாடுகளில் குறிப்பாகப் புலம்பெயர் தொழிலாளர்கள் வேலை செய்யும் நாட்டிற்கு வந்தடைந்த பிற்பாடு அச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் அறிக்கைகள் குறித்து இக்குழு கவலையடைகிறது.

44 புலம்பெயர் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வழிகாட்டிகள் ஆட்சேர்ப்பு முகவர்களாலும் ஏனைய முகவர்களாலும் இலங்கையில் மட்டுமன்றி தொழிலைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளாலும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான எல்லா அத்தியாவசிய ஏற்பாடுகளையும் அரச தரப்பானது மேற்கொள்ள வேண்டும் என குழு சிபார்சு செய்கின்றது. ஆனாலும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் அவர்களது நாட்டிலும், வேலை செய்யும் நாட்டிற்கு வந்தடைந்த பிற்பாடும், பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அரச தரப்பானது ஆட்சேர்ப்பு முகவர்களின் செயற்பாடுகளை கடுமையாகக் கண்காணிக்க வேண்டுமென குழு தூண்டுகிறது.

45 அரச தரப்பானது சர்வதேச புலம்பெயர் நிறுவனத்தின் (IOM) ஒத்துழைப்புடன் திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்களைக் கண்காணித்து பதிவு செய்வதற்கான ஒரு ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட செயன்முறை குறித்து திட்டமிடுவதை குழு நோக்குகிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் உருவாக்கப்பட்ட திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்களை மீள ஒருங்கிணைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமானது திரும்பி வருவோரை சமூகத்தின் பிரதான நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதுடன், அவர்களினதும் குடும்பங்களினதும் பொருளாதார மற்றும் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டது என்பதை குழுவானது விருப்புடன் அவதானிக்கிறது. ஆனாலும் இந் நிகழ்ச்சித் திட்டம் குறித்து குழுவுக்கு விபரமான தகவல்கள் கிடைக்கப் பெறாததையிட்டு குழு வருத்தம் தெரிவிக்கின்றது.

46 அரச தரப்புக்கு இது குறித்து கீழ்வருவனவற்றைக் குழு சிபார்சு செய்கிறது

a. மீள ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித் திட்டம் குறித்தும் திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான படிநிலைகளை எடுத்தல்

b. மீள ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு போதிய நிதியை ஒதுக்குதல்

c. புலம்பெயர் தொழிலாளர்களதும் அவர்களது குடும்ப

உறுப்பினர்களதும் தன்னார்வ திரும்பி வருதலை வசதிப்படுத்துவதற்காகவும் அத்துடன் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய சமூக கலாசார மீள ஒருங்கிணைத்தல் குறித்து வசதி ஏற்படுத்துவதற்காகவும் ஒரு உள்ளூர் நிறுவன பொறிமுறையை அமைப்பதை பரிசீலித்தல்.

47 அரச தரப்பானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிற்சலாந்து என்பவற்றுடன் மீளச் சேர்த்தல் ஒப்பந்தங்களை செய்துள்ளதுடன், இது பல ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்களுடன் பின்னேடு ஒப்பந்தங்களை வரைவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்துள்ளது. இந்த ஒப்பந்தங்களானவை அவர்கள் உட்படுத்தும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நடைமுறை உத்தரவாதங்களை உள்ளடக்காது போகும் என்பதையிட்டு கவலை அடைகிறது.

48 சமவாயத்தின் 22வது உறுப்புரையின் பிரகாரம் தற்போதைய எதிர்கால மீளச் சேர்க்கும் ஒப்பந்தங்கள் என்பனவற்றில் இலங்கையும் வேலை பெறும் நாடுகளும் உரிய பொருத்தமான புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உத்தரவாதங்களை உள்ளடக்க வேண்டுமென குழு சிபார்சு செய்கிறது.

49 இந்த விடயத்திலே பல எண்ணிக்கையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக அரசு தரப்பு சுட்டிக்காட்டுவதை குழு கருத்தில் எடுக்கும் அதேவேளையில், இலங்கையில் சிறுவர்கள் மீது புலம்பெயர்வு ஏற்படுத்தும் தாக்கம் குறித்து எந்தத் தகவலையும் அது வெளியிடாததையிட்டு குழு வருத்தம் தெரிவிக்கின்றது.

50 **புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளின் பாதுகாப்பையும் அவர்கள் தமது உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதையும் உறுதி செய்யக்கூடிய தேவையான உபாயங்களை வகுப்பதை இலக்காகக் கொண்டு தேவையேற்படின் குழந்தைகள் மீதான புலம்பெயர் மீதான தாக்கம் குறித்து புதிய ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஆராய்ச்சிகளை நடாத்தவும் அரச தரப்பைக் குழுவானது தூண்டுகிறது.**

51 குடிவரவு மற்றும் குடியகல்வு விடயத்தில் புதிய சட்டவாக்கமானது வஞ்சக்கடத்தல் மற்றும் சட்டத்திற்கு மாறான புலம்பெயர்வுகளை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதை குழு அவதானிக்கிறது. ஆனாலும் வஞ்சக் கடத்தல் மற்றும் மனிதக் கடத்தல் சம்பவங்கள் குறித்து அரச

தரப்பானது சிறிய அளவில் அல்லது எந்தவித தகவலையும் வழங்காதது குறித்து குழுவானது கவலை தெரிவிக்கிறது. இலங்கைக்குள் ஒழுங்கற்ற முறையில் உள் வரும் அல்லது வெளியேறுபவர்கள் □சட்டரீதியற்ற புலம்பெயர்வு□ என்ற குற்றத்திற்காக தண்டிக்கப்படுவதை கவலையுடன் குழு அவதானிக்கிறது.

52 அரச தரப்பிற்கு பின்வரும் சிபார்சுகளை குழு முன்வைக்கிறது:

a. மனித வஞ்சக் கடத்தல் ஆட்களைக் கடத்தல் என்பவற்று -க்கு சட்டவாக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு படிமுறைகளை எடுத்தல்

b. ஆட்களை வஞ்சக் கடத்தல் விசேடமாக பெண்களையும் சிறுவர்களையும் வஞ்சக் கடத்தல் செய்வதை முறியடிக்கக்கூடிய சிறந்த வழியைக் காணும் நோக்கில் வஞ்சக் கடத்தல் என்ற விடயத்தின் முழுமையான பரிமணம் பற்றி மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதும் ஒரு முறைமையான சராசரிப்படுத்தப்படாத தரவை தொகுத்தல்

c. ஆட்களை வஞ்சக் கடத்தல் அல்லது கடத்தலுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் நீதியின் முன் கொண்டுவரப்பட்டு உரிய முறையில் தண்டிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேவேளையில் புலம்பெயர் தொழிலாளர்கள் ஒழுங்கற்ற முறையில் புலம்பெயர்ந்தமைக்காக தண்டிக்கப்படாது இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

6. தொடர்ச்சியான நடவடிக்கைகளும் தகவல் பரப்புகையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

53 அரச தரப்பு தனது இரண்டாவது கால அறிக்கையில் இந்த முடிவான அவதானிப்புக்களில் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் தொடர்பில் தனது அடுத்த கட்ட நடவடிக்கைக்காக தெரிவு செய்த விடயங்கள் பற்றிய விபரமான தகவல்களை உள்ளடக்குமாறு அரச தரப்பிடம் இக்குழு வேண்டுகோள் விடுக்கிறது. இந்த சிபார்சுகள் அமுல்படுத்தப்படுவதையும் உரிய தேசிய மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு பரிசீலிப்பதற்காக அவற்றை அனுப்புதல் உட்பட அனைத்தையும் உறுதிப்படுத்துவதற்கான உரிய ஏற்பாடுகளை எடுக்கும்படி அரச தரப்புக்குக் குழு சிபார்சு செய்கிறது.

54 அரச தரப்பின் இரண்டாவது அறிக்கையை தயார்ப்படுத்துவதில் சிவில் சமூக நிறுவனங்களையும் சம்பந்தப்படுத்துமாறு குழு தூண்டுகிறது.

## தகவல்களைப் பரப்புதல்

55 பொது முகவரமைப்புகள் மற்றும் நீதித்துறை, அரசசார்பற்ற நிறுவனங்கள், ஏனைய சிவில் சமூக உறுப்பினர்கள் உள்ளடங்கலாக அனைத்து மட்டத்தினர் மத்தியிலும் இந்த முடிவான அவதானிப்புக்களைப் பரவலாக அறியத் தரும்படியும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள், இலங்கையிலுள்ள வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் அல்லது இலங்கையில் இடைத்தங்கலாக இருப்பவர்கள் அனைவருக்கும் இவை கிடைக்கும்படி செய்வதற்கும் அரச தரப்பை குழுவானது வேண்டிக் கொள்கின்றது.

## 7. அடுத்த பருவகால அறிக்கை

56 அரச தரப்பின் இரண்டாவது பருவகால அறிக்கையானது 2009 ஜுலை 1ஆம் திகதியில் வரவேண்டியிருப்பதை குழு அவதானிக்கிறது. இந்த நிலையில் அரசானது இரண்டாவது பருவகால அறிக்கையை 2011 நவம்பர் 1 க்கு பிந்தாமல் சமர்ப்பிக்கும்படி குழுவானது வேண்டுகிறது.

- - - - -

இந்த புத்தகம் சர்வதேச குடிபெயரல் தொடர்பான Law and Society Trust இன் அறிக்கை மற்றும் அனைத்து குடிபெயரல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள் தொடர்பான ஐ.நா குழுவின் இறுதியான அவதானிப்புக்கள் ஆகிய இரண்டு ஆய்வு அறிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

குடிபெயரல் தொழிலாளர்களின் சட்ட உரிமைகள் தொடர்பான அறிக்கையானது அவர்களது மனித உரிமைகள் பாதுகாப்புக்கான தற்போதைய வரைபுநகலை வலுப்படுத்துவது குறித்து குடிபெயரல் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் குறித்து பரிசீலனை செய்கின்றது.

பெண் குடிபெயர் தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான அறிக்கையானது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் நடைமுறையில் உள்ள மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் மற்றும் இவை எவ்வாறு வெற்றிகரமாக மீள் திரும்பும் பெண் குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேவைகளை அடையாளப்படுத்துகின்றன என்பது தொடர்பில் ஆராய்கின்றது.

---

The Law & Society Trust (LST)ஆனது இலங்கையில் 1982ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனமாகும். அது மனித உரிமைகள் ஆவணப்படுத்தல், ஆய்வு மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மற்றும் முரண்பாட்டில் மனித உரிமைகள் ஆகிய மூன்று நிகழ்ச்சிப் பகுதிகளில் ஆதரவு நாடல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. புத்தகங்கள், செய்திமடல்கள் மற்றும் உத்தியோகப்பூர்வ பிரசுரங்கள் தவிர LST Review, the Appellate Law Recorder, மற்றும் ஆகியவற்றை LST வெளியிட்டு வருகின்றது.

ISBN : 978-955-1302-35-1

LAW & SOCIETY TRUST

Rs. 250